# விக்கிரம சோழனுலா



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்
மற்றும் ஆய்வு மையம்
தஞ்சாவூர்

T. 24764

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண். 587

# விக்கிரம சோழனுலா

*சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர்,*

**கோ. தில்லை கோவிந்தராஜன்,**

M. A., B. Ed., M. Phil., Dip. in Sanskrit

சரசுவதி மகால் நூலகம்,

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்
மற்றும்
ஆய்வு மையம்,

தஞ்சாவூர்.

2017] [விலை: ரூ. 100-00

## நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | விக்கிரம சோழனுலா |
| பதிப்பாசிரியர் | : | கோ. தில்லை கோவிந்தராஜன், சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர், |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண். | : | 587 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதல் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | 2017 |
| தாள் | : | TNPL 18.6 கி. கி |
| நூல் அளவு | : | 21 X 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 152 |
| படிகள் | : | 500 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | ஒளி அச்சுக்கோப்பு மற்றும் ஒளி அச்சு, சரசுவதி மகால் நூலகம். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | இலக்கியம் |
| ISBN | : | 978-93-85343-25-4 |
| விலை | : | ரூ. 100/- |

T.24764

# வெளியீட்டாளர் முகவுரை

உலகப் புகழ்பெற்ற சரசுவதி மகால் நூலகத்தின் வெளியீடாக வெளிவரும் விக்கிரம சோழனுலா எனும் இந்நூலானது, உலா எனப்படும் தமிழில் வழங்கப்படுகின்ற சிற்றிலக்கியங்களில் ஓர் வகைப்பாடாகும். மன்னவன் தன்னுடைய வெற்றியைக் கொண்டாடும் முகமாகவோ அல்லது விழாக் காலங்களில் வீதி உலா வருவதைக் காரணமாக வைத்தோ புலவர்களால் பாடப்படும் நூலே உலா எனப்படும். புலவர் பெருமக்கள் தாம் வணங்கும் இறைவனையோ, தங்களை ஆதரித்த மன்னர்கள், சிற்றரசர்கள், செல்வந்தர்கள் ஆகியோரையோ பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடுவது உலா இலக்கியமாகும். இதில் உலா செல்லும் தலைவனை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என எழுவகைப் பெண்டிரும் கண்டு காதல் கொள்ளுதலை காட்சிப்படுத்துதலே இந்நூல் ஆகும்.

விக்கிரம சோழனுலா எனும் இந்நூல் குலோத்துங்கசோழன், ராஜராஜசோழன், விக்கிரம சோழன் எனும் மூன்று சோழ மன்னர்களின் அவைதனில், அவைக்களப் புலவராக விளங்கிய ஒட்டக்கூத்தரால் பாடப்பட்டதாகும். இவரே விக்கிரம சோழனுலாவுடன், குலோத்துங்க சோழனுலா, இராஜராஜ சோழனுலா ஆகியவற்றைச் சேர்த்து மூவருலா பாடியுள்ளார். மூவருலா நூலில் விக்கிரம சோழனுலாவே மிகவும் சிறந்ததாகப் போற்றப்படுகிறது. இந்நூல் எழுந்த காலம் கி. பி. 12ஆம் நூற்றாண்டாகும்.

விக்கிரம சோழனுலா 342 கண்ணிகளால் அமைந்தது. கண்ணி என்பது இரண்டு வரிகளைக் கொண்டது. இவற்றுள் முதல் 43 கண்ணிகளில் விக்கிரமசோழனின் முன்னோரின் பெருமையும், விக்கிரமசோழன் பிறப்பும், பள்ளி எழுதல், நீராடல், இறைவனை வணங்குதல் போன்றவையும் சொல்லப்பட்டுள்ளன. சோழன் அலங்காரம் செய்துகொள்வது 44 முதல் 51 கண்ணிகளில் சொல்லப்பட்டுள்ளது. பட்டத்து யானையின் பெருமையினை 52 முதல் 67 கண்ணிகள் கூறுகின்றன. பின்னர் 90 முதல் 112ஆவது கண்ணி வரை சிற்றரசர்களின் விவரங்கள், பரிவாரங்கள் பற்றி கூறுகின்றன. தொடர்ச்சியாக எழுவகை

பருவ மகளிர் பற்றியும் அவர்கள் சோழ மன்னரைக் கண்டு காதல் கொள்வது பற்றியும் சுவைபடக் கூறுகின்றன.

பாட்டுடைத்தலைவன் விக்கிரம சோழனின் காலம் கி. பி. 1118 முதல் 1133 வரையாகும். இரண்டாம் குலோத்துங்க சோழன் கி. பி. 1133-1150 மற்றும் இரண்டாம் ராஜராஜசோழன் கி. பி. 1146-1163 வரையாகும். ஒட்டக்கூத்தர் மூவருலா மட்டுமின்றி கலிங்கத்துப்பரணி, அரும்பைத் தொள்ளாயிரம், குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப்பரணி, காங்கேயன் நாலாயிரக் கோவை ஆகிய நூல்களையும் சில தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார்.

சிறப்பு வாய்ந்த இந்நூலினை நூலக சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர் திரு. **கோ. தில்லை கோவிந்தராஜன்,** M..A., B.Ed., M.Phil., Dip.,in Sanskrit. அவர்கள் சிறப்பாக பதிப்பித்துள்ளார். அவருக்கு என் பாராட்டுக்கள்.

இந்நூல் வெளிவரத் தேவையான நிதி உதவி வழங்கிய அரசுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நூலக வெளியீடாக விக்கிரம சோழனுலா என்ற நூல் வெளிவர துணை நின்ற திருச்சி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் நூலக நிருவாக அலுவலர் (பொ.) திரு. **மா. இராமகிருட்டினன்,** M. A., M.Phil., M.Ed., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ்.சுதர்ஷன்,** M.A.,B.Lit..M.L.I.S.Ph.D அவர்களுக்கும், நூலகத் தமிழ்ப்பண்டிதர் திரு. **மணி.மாறன்**, M.A.,(T),M.A.,(H),B.L.I.S., Dip.,in Sanskrit. அவர்களுக்கும், கணினியில் அச்சிட்டளித்த நூலகப் பணியாளர்களுக்கும், அச்சகப்பிரிவு பணியாளர்களுக்கும், ஏனையோருக்கும் என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்

**ஆ. அண்ணாதுரை,** இ. ஆ. ப.,
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் இயக்குநர்.*

தஞ்சாவூர்,
18-08-2017

# விக்கிரம சோழனுலா ஆய்வுரை

**முன்னுரை**

விக்கிரம சோழன் உலாவில் சிற்றிலக்கியங்களின் வகைகள், உலாவைப் பற்றிய குறிப்புகள், காலந்தோறும் உலா வளர்ச்சி நிலைகள், பருவப்பெண்கள் நிலைகள், இவ்வுலா ஆசிரியர் பற்றிய குறிப்புரைகள், விக்கிரமசோழன் மற்றும் அவன் முன்னோர் களின் வரலாறு ஆகியவற்றோடு இப்பதிப்பில் கையாண்ட முறைகள் குறித்தும் ஆய்வுரையில் விரிவாகக் காணலாம். நன்றியுரையில் இவ் ஆய்வுக்கு உறுதுணையாக விளங்கிய அறிஞர்களுக்கும், நண்பர்களுக்கும் நன்றி தெரிவிக்கப் பட்டுள்ளது.

சடைகெழு மகுடம் தண்ணிலா விரிய
வெண்ணிலா விரிதரு தரளக்
குடை நிழல் விடைமேற் கொண்டுலாப் போதும்
குறிப்பெனோ? கோங்கிண ரனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்
துக்கசெஞ் சுடர்படு குவையோங்
கிடைகெழு மாடத் திஞ்சிசூழ் தஞ்சை
இராச ராசேச்சரத் திவர்க்கே

எனக் கருவூர்த் தேவர் தஞ்சையில் இறைவன் உலா செல்லும் காட்சியைத் திருவிசைப்பாவில் குறிப்பிடுகின்றார்.[1] உலா என்பது தமிழ் மொழிக்குரிய 96வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. பாட்டுடைத் தலைவன் உலா வருதலைச் சிறப்பித்துப் பாடப்படுவதாகும்.

**சிற்றிலக்கியங்கள்**

தமிழ் மொழியில் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பொருளில் ஒன்றோ இரண்டோ குறைத்துப்

1. திருவிசைப்பா-தஞ்சை இராசராசேச்சரம் பா. எண். 3.

பாடுவதைச் சிற்றிலக்கியம் என்பர். வடமொழியில் பிரபந்தம் என்பர். பிரபந்தம் என்பது வடமொழியில் நன்கு கட்டப்பட்டது என்னும் பொருளைக் கொண்ட தாகும். தமிழில் யாப்பு என்பதனோடு ஒத்ததாகும்.

**96 சிற்றிலக்கிய வகைகள் :-**

1. அகப்பொருட்கோவை
2. அங்கமாலை
3. அட்டமங்கலம்
4. அநுராகமாலை
5. அரசன் விருத்தம்
6. அலங்கார பஞ்சகம்
7. ஆற்றுப்படை
8. இணை மணிமாலை
9. இரட்டை மணிமாலை
10. இயன்மொழி வாழ்த்து
11. இருபாவிருபஃது
12. உலா
13. உலா மடல்
14. உழத்திப்பாட்டு
15. உழிஞை மாலை
16. உற்பவ மாலை
17. ஊசல்
18. ஊர்நேரிசை
19. ஊரி வெண்பா
20. உரின்னிசை
21. எண் செய்யுள்
22. எழுகூற்றிருக்கை
23. ஐந்திணைச் செய்யுள்
24. ஒருபாவொருபஃது
25. ஒலியாலந்தாதி
26. கடிகை வெண்பா
27. கடைநிலை
28. கண்படைநிலை
29. கலம்பகம்
30. காஞ்சிமாலை
31. காப்பியம்
32. காப்புமாலை
33. குழமகன்
34. குறத்திப்பாட்டு
35. கேசாதிபாதம்
36. கைக்கிளை
37. கையறுநிலை
38. சதகம்
39. சாதகம்
40. சின்னப்பூ
41. செருக்களவஞ்சி
42. செவியறிவுறூஉ
43. தசாங்கத்தயல்
44. தசாங்கப்பத்து
45. தண்டகமாலை
46. தாண்டகம்
47. தாரகைமாலை
48. தானைமாலை
49. தும்பைமாலை
50. துயிலெடைநிலை
51. தூது
52. தொகை நிலைச்செய்யுள்
53. நயனப்பத்து
54. நவமணிமாலை

55. நாமமாலை
56. நாற்பது
57. நாண்மணிமாலை
58. நூற்றந்தாதி
59. நொச்சிமாலை
60. பதிகம்
61. பதிற்றந்தாதி
62. பயோதரப்பத்து
63. பரணி
64. பல்சந்தமாலை
65. பவனிக்காதல்
66. பன்மணிமாலை
67. பாதாதிகேசம்
68. பிள்ளைக்கவி
69. புகழ்ச்சிமாலை
70. புறநிலை
71. புறநிலை வாழ்த்து
72. பெயர் நேரிசை
73. பெயரின்னிசை
74. பெருங்காப்பியம்
75. பெருமகிழ்ச்சிமாலை
76. பெருமங்கலம்
77. போர்க்கெழுவஞ்சி
78. மங்கலவள்ளை
79. மணிமாலை
80. முதுகாஞ்சி
81. மும்மணிக்கோவை
82. மும்மணிமாலை
83. மெய்க்கீர்த்திமாலை
84. வசந்தமாலை
85. வரலாற்றுவஞ்சி
86. வருக்கக்கோவை
87. வளமடல்
88. வள்ளைப்பாட்டு
89. வருக்கமாலை
90. வாதோரணவஞ்சி
91. வாயுறை வாழ்த்து
92. விருத்தவிலக்கணம்
93. விக்குளநிலை
94. வீரவெட்சிமாலை
95. வெற்றிக் கரந்தை மஞ்சரி
96. வேனில் மாலை

96 வகையான பிரபந்தங்கள் சில தமிழிலுள்ள காப்பியம், புராணம், சிறுநூல்களில் இடம்பெறுதலும் உண்டு.

இவ்வகை 96 பிரபந்தங்களில் உலா என்பதும் ஒன்றாகும்.

**உலா என்பது**

மன்னன் தன்னுடைய வெற்றியைக் கொண்டாட அல்லது திருவிழாக் காலங்களில் வீதியுலா வருவது வழக்கம். இதனைப் புலவர்கள் சிற்றிலக்கியங்களில் உலா எனப் பாடுப்பொருளாகக் கொண்டனர்.

புலவர்கள் இறைவன் மீதும், தம்மை ஆதரித்த அரசன், குறுநில மன்னன், செல்வந்தர்கள், தவமுனிவர்கள் ஆகியோரைக் காப்பியத் தலைவனாகக் கொண்டு அவர்களின் பெருமைகளை வெளிப்படுத்தும் வகையில் உலா இலக்கியங்களை அவர்களின் பெயர்களிலேயே இயற்றினர்.

உலா இலக்கியம் தொல்காப்பியர் காலத்தில் முளைவிட்டு சமய இலக்கியத்தில் குருத்தாக வளர்ந்து சேரமான்பெருமாள் காலத்தில் விருட்சமாக வளர்ச்சியுற்றது.

**உலாவிற்கான வேறு பெயர்கள்**

உலா என்பது வலம் வருதல் என்ற பொருளில் அமைந்ததாகும். ஊர்வலம் வருதல், பவனி, பவனியுலா, உலாப்புறம், உலாமாலை என்ற பெயர்களில் வழங்கி வருகின்றது.

**உலாவிற்கான ஊர்திகள்**

தலைவன் உலா செல்லும் ஊர்திகளாகக் கூறப்படுபவை யானை, குதிரை, காளை, தேர், பல்லக்கு முதலியனவாகும். இவை உலாவில் முதன்மைப் பகுதியாக இலக்கியத்தில் கூறப்படுகின்றன.

**உலாவின் அமைப்பு முறை**

உலா இலக்கியம் பாடுபொருள் முதனிலை முற்பகுதி யாகவும், பின் எழுநிலை பிற்பகுதியாகவும் கொண்டு விளங்குவதாகவும் பன்னிரு பாட்டியல் வாயிலாக அறியமுடிகின்றது.

**உலாவினைக் காணும் பெண்களின் பருவ நிலைகள்**

தலைவன் உலா செல்லக் காணும் பெண்களின் நிலைகள் பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என ஏழுவகைப் பருவ மகளிரும்

கண்டு காதல் கொள்ளுமாறுத் தலைவன் வீதியில் உலா செல்வான் என்றும். இவ்விலக்கியம் கலிவெண்பாவில் பாடப்பெற்றதாகும்.

"பாட்டுடைத் தலைவ னுலாபுற வியற்கையும்
ஒத்தகாமத் தினையாள் வேட்கையும்
கலியொலி தமுடிய வெள்ளடி யியலால்
எதிரியின்று நடப்பது கலிவெண் பாட்டே"

என உலாவிற்கான இலக்கணம் கூறப்படுகிறது.[2]

சங்க காலப் பருவமங்கையர்களின் நிலைகளைப் பற்றிய குறிப்புகள்,

"பேதை அல்லை மேதையிங் குறுமகள்
பெதும்பைப் பருவத்து ஒதுங்கினைபுறத்து"

என அகநானூற்றில் காணமுடிகின்றது.[3]

பெருங்கதையில் பருவ மகளிரின் வகையினைப்பற்றி

"உத்தம மகளிர் ஒழிய மற்றைக்
கன்னியர் எல்லாம் காமன் துரத்த
கணையுளம் கழியக் கவினழிவெய்தி[4]"

எனவும் குறிக்கப்படுவதிலிருந்து காணலாம்.

கம்பராமாயணத்தில் கம்பர் ஏழு பருவ மகளிரைப் பற்றி எதிர்கொள் படலத்தில்

"பேதைமார் முதல்கடைப் பேரிளம் பெண்கள்தாம்
ஏதிஆர் மாரவேள் ஏவ வந்து எய்தினர்
ஆதிவானவர் பிரான் அணுகலால் அணி கொள்கார்
ஓதியார் வீதிவாய் உற்றுவாறு வரை செய்வாம்".

என (ஏழு பருவத்து மாதரும்) இராமன் வரும் அத்தெருக் களில் அடைந்தனர் என்கின்றார்.[5]

---

2. பன். பா. 217 3. அகம்-பா. 7. 4. பெருங்கதை: 2 : 7 வரி 54-62..

5. கம்.பால. எதிர். பாடல் 1009.

பருவ மங்கையர்களின் பருவ வயதினைப்பற்றிய செய்திகளைப் பன்னிரு பாட்டியல் நூல்கள் குறிப்பிடு கின்றன. அவற்றுள் சிதம்பரப்பாட்டியலும், இலக்கண விளக்கப் பாட்டியலும் குறிப்பிடத்தக்கனவாகும்.

"குழமகனை அடையாளம் கலிவெண் பாவால்
கூறியவன் மறுகணையக் காதல் கூரேழ்
எழிற்பேதை பதினொன்று பெதும்பை பன்மூன்று
இயன்மங்கை பத்தொன்பான் மடந்தையைந்
தழகரிவை முப்பஃதோர் தெரிவை நாற்பா
னாம்வயது பேரிளம்பெண் முதலாயுள்ளோர்
தொழவுலாப் போந்த துலாத் தலைவன் பேர்க்குத்
தொடையெதுகை யொன்றுலின்ப மடலாய்ச் சொல்லே"

எனவும், ஏழு பருவப் பெண்களின் வயதினைக் குறித்துள் ளார் சிதம்பரப்பாட்டியல்[6] பரஞ்சோதியார்.

'ஐந்து முதலே ழாண்டும் பேதை' (பேதை-5-7 வயது)

'எட்டு முதனான் காண்டும் பெதும்பை' (பெதும்பை-8-11 வயது)

'ஆறிரண் டொன்றே யாருமங்கை' (மங்கை-12-13 வயது)

'பதினான் காதிபத் தொன்பான்களும்' (மடந்தை-14-19 வயது)

'எதிர்தரு மடந்தை மேலது அரிவை' (அரிவை-20-25 வயது)

'ஆறுதலை யிட்ட விருபதின் மேலோ
ராறுந் தெரிவையெண் ணைந்து
பேரிளம்பெண்ளன் (தெரிவை-26-31 வயது)
றோரும் பருவத் தோர்க்குரைத் தனரே'
(பேரிளம்பெண்-32-40 வயது)

சாமிநாத தேசிகர் இயற்றிய இலக்கண விளக்கப் பாட்டியலில்[7] குறிப்பிடுகின்றார்.

6. சிதம்பரப்பாட்டியல்-மரபியல்-37. 7. இலக்கண விளக்கப்பாட்டியல்-99-303.

பேதை தொடங்கிப் பேரிளம்பெண் இறுதியாக உள்ள பெண்கள் வீதியில் உலாவரும் இறைவனையோ, செல்வந்தரையோ, மன்னரையோ கண்டு காதல் கொள்வதாகவும் இவ்விலக்கியம் கலிவெண்பாவினால் பாடப்படுவதால் இதனை உலாச் சிற்றிலக்கியத்தில் இலக்கணமாகக் கூறுகின்றனர்.

**உலா வளர்ச்சிநிலை**

தொல்காப்பியர் காலந்தொட்டு உலா என்பது பற்றி,

"ஊரோடு தோற்றமும் உரித்தென மொழிப"

எனும் நூற்பாவினால் அறியலாம்.

இந்நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் கூறும் உரை விளக்கமானது

"தோற்றமென்றது அக்காமம் தேவரிடத்தும்
மக்களிடத்தும் விளங்கும் விளக்கத்தை அது
பின்னுள்ளோர் எழு பருவமாகப் பகுத்துக்
கலிவெண்பாட்டால் செய்யுள் உலாச் செய்யுளாம்."

[தொல்: பொ. புறத்திணையியல் 30 பிற்காலத்தில் எழுந்த உலா இலக்கியத்திற்குரிய விதியைக் கூறுகின்றார்.]

**சங்க இலக்கியத்தில் உலா**

சங்க காலத்தில் இயற்றப்பட்ட தமிழ் நூல்களில் உலாவைப்பற்றி சில குறிப்புகள் காணப்படுகின்றது.

வெல்போர்ச் சோழர்குடியில் தோன்றிய அழிசி என்பவன் மலர்மாலையை அணிந்து கொண்டு உலா வருதலை நற்றிணைப் பாடல் மூலம் அறியமுடிகின்றது.[8]

---

8. நற்றிணை பாடல் 190இல் 4ஆவது வரி

**சமய இலக்கியத்தில் உலா**

சமய குரவர்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் இருவரும் இயற்றிய தேவாரப்பாக்களில் திருவிழாக் காலத்தில் இறைவன் திருவீதி உலா வரும் செய்திகள் இடம்பெறுகின்றன. திருஞானசம்பந்தர் தேவாரத்தில்[9]

"பாரும் விண்ணும் பரவித் தொழுதேத்தும்
தேர்கொள் வீதி விழவார் திருபுன்கூர்
ஆரநின்ற வடிகளவர் போலும்
கூறநின்ற வெயின்மூன் றெரித்தாரே"

என்றும்[10],

திருநாவுக்கரசர் தேவாரத்தில்

" முடிகள் வணங்கி மூவாதார் கண்முன் செல்ல
வடிகொள் வேயத்தோள வானரமங்கையர் பின்செல்லப்
பொடிகள் பூசிப் பாடும் தொண்டர் புடைசூழ
அடிகளா ரூராதிரை நாளாலது வண்ணம் "

எனவும்[11],

" ஆத்தமா மயனுமாறு மன்றிமற் றொழிந்த தேவர்
சோத்தமெம் பெருமானென்று தொழுது தோத்திரங்கள் செல்லக்
கூத்தாராய் வீதிபோந்தார் குறுக்கை வீரட்டனாரே"

என்றும் உலாவைக் குறிப்பிடுகின்றார்.

" மால்விடை மேல் நெடுவீதி போதக் கொண்டார் "

என விடை எனப்படும் காளைமேல் திருவீதி உலா சென்ற காட்சியை குறிப்பிடுகின்றார்.[12]

இறைவர் திருமேனியை வீதி உலா எடுத்துச் செல்லுதல் திருவுலா போதல் என்று கூறுவர். பிரதமை முதல் அட்டமி திதிக்கு எட்டு நாளுக்கு முன்புவரை நடைபெறும்.

---

9. திருஞானசம்பந்தர் முதலாம் திருமுறை பதிக எண். 27. பாடல்-7 .10. மேற்படி, பதிக எண். 60. பாடல்-5 11. நான்காம் திருமுறை. திருவாரூர் பாடல் 8. திருகுறுக்கை வீரட்டம் பாடல்-2 12. ஆறாம் திருமுறை, பதி. எண். 96. பாடல்-7

**உலா - பிற்கால இலக்கியங்களில்**

வேந்தர்களும், காப்பியத்தலைவர்களும் உலா சென்ற காட்சிகளை பிற்கால இலக்கியங்களில் காணமுடிகின்றது, பெருங்கதை, சீவகசிந்தாமணி, இரட்டை காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலையும், கம்பராமாயணம், ரகுவம்சம், முத்தொள்ளாயிரம் ஆகிய நூல்களின் வாயிலாக அறியமுடிகின்றது.

**பெருங்கதையில் உலா**

"வெங்கண் யானைமிசை வெண்குடை கவிப்ப,
பொங்குமயிர்க் கவுரி புடை புடைவீச,
கங்கை நீத்தம் கடன்மடுத்து ஆங்கு,
சங்கமும் தூரமும் முரசினோடு இயம்ப,
மன்பெரு மூதூர் மாசனம் மகிழ்ந்து
வாழ்த்தும் ஓசை"[13]

சிறப்பான நாள்களிலும், ஆலயத்திற்கு வழிபடச் செல்கையிலும் அரசன் யானை மீதமர்ந்து உலாச் செல்வான். வெண்கொற்றக்குடை நிழற்ற, பணிப்பெண்டிர் இருபுறமும் கவரி வீசி நிற்ப, சங்கும், முரசும் பிற இசைக் கருவிகளும் முழங்க, மக்களின் வாழ்த்தொலியினூடே உலா நடை பெறும் வீதியின் இரு மருங்கிலும் மாளிகைகளில் கூடி நின்று மலர்தூவி மன்னனை வாழ்த்திப் புகழும் மரபு பெருங்கதையின் வாயிலாக அறியமுடிகின்றது.

**சீவக சிந்தாமணியில் உலா**

"இன்னமு தனைய செவ்வா
யிளங்கிளி மழலை யஞ்சொற்
பென்னவிர் சுணங்கு பூத்த
பொங்கிள முலையி னார்தம்
மின்னவர் நுசும்பு நோவ
விடலையைக் காண வோழ
அன்னமு மயிலும் போல
அணிநகர் வீதி கொண்டார்".

---

13. பெருங்கதை 4 : 1 : 15 - 20

சிவந்த வாயினையும், சொல்லினையும் உடைய, வளர்கின்ற இளைய முலையினையுடைய மகளிர், விடலையைக் காண்பதற்காக மின்னலின் தன்மைப் பொருந்திய இடை நோவ ஓடி, அன்னமும், மயிலும் நின்றார் போல நகரில் தெருவில் நின்று உலாவரும் காட்சியினைக் கண்டனர்.[14]

வீதியில் நின்று பார்த்த மகளியர்கள் "இவனை அடைய விருக்கும் மங்கை, எம்மலையில் இருந்து தவஞ் செய்தாளோ, அதே மலையில் நாமும் நின்று இச் சீவகனுக்காகத் தவஞ்செய்வோம்" என்று சிறந்த மணித் தேரிலேறி வரும் சீவகனைக் கண்டு கூறுவதாகத் திருத்தக்க தேவர் சிந்தாமணியின் வாயிலாக உலாக் காட்சியைச் சித்தரிக்கின்றார்.[15]

**கம்பராமாயணத்தில் உலா**

பாலகாண்டத்தில் எதிர்கொள் படலத்தில் தம்பியர்கள் குதிரையில் உடன்வர இராமன் தேர்மீது ஏறி,

தொழுது இரண்டு அருகும் அன்புடைய தம்பியர் தொடர்ந்து
அழிவுஇல் சிந்தையின் உவந்து ஆடல் மாமிசைவர
தழுவுசங்குடன் நெடும் பணை தழங்கிட எழுந்து
எழுத அருந்தகைய ஓர்தேரின் மேல்ஏகினான்

என்று உலா வரும் காட்சியைச் சுட்டுகின்றது.[16]

**இராமனின் உலாவும் - பெண்களும்**

இராமன் உலா வரும் காட்சியைக் காண நின்ற பெண்களைப் பற்றி குறிப்பிடும் கம்பர்

---

14. சீவக சிந்தாமணி: 2. கோவி. 457, பக். 233
15. ந. வி. ஜெயராமன், உலா இலக்கிய வரலாறு, பக். 24.
16. கம்பராமாயணம், பாலகாண்டம், எதிர்கொள் படலம், பாடல்.1006, பக்.470

மான்இனம் வருவபோன்றும் மயில்இனம் திரிவ போன்றும்
மீன்இனம் மிளர்வபோன்றும் மின்இனம் மிடைவ போன்றும்
தேன்இனம் சிலம்பிஆர்ப்ப சிலம்இனம் புலம்பிஏங்க
பூநனை கூந்தல் மாதர் பொம்மெனப் புகுந்து மொய்ந்தார்[17]

மிதிலை நகரத்தில் உள்ள மாதர்கள் மான்வருவது போலவும், மயில் வருவது போலவும், மின்னல் கூட்டங்கள் நெருங்கி வருவது போலவும் இராமன் உலா வரும் வீதிகளில் வந்து மொய்த்தனர்.

விரிந்து வீழ்கூந்தல் பாரார் மேகலை அற்றநோக்கார்
சரிந்த பூந்துகில்கள் தாங்கார் இடைதடுமாறத் தாழார்
நெருங்கினர் நெருங்கிப்புக்கு நீங்குமின் நீங்குமின் என்று
அருங்கலம் அனைய மாதர்தேன் நுகர்அளியின் மொய்தார்[18]

மலர் அம்புவைப் பெற்ற காமன் செலுத்திய அம்புகள் மாதர்கள் மீது பாய்ந்து பதிந்தன. அதனால், அம்மாதர்களின் சுடரொளி போன்ற அணிகலன்கள் பலவும் கொங்கை களின் வியர்வை தோன்றிய போது கரைந்து வழிந்த சந்தனக் குழம்பும், மேனியிலிருந்து சரிந்து விழுந்த மேகலையும், முத்தாரமும், சங்கு வளையல்களும், பாதம் வரை தாழ்ந்த நீண்ட கூந்தலில் இருந்து வீழ்ந்த பூமாலைகளும், இராமன் வரும் அவ்வீதிகளில் நிறைந்து கிடந்தன. அவற்றைப் பெறாத வெற்றிடத்தை அவ்வீதிகளில் காணமுடியாது இருந்தது எனக் கம்பர் விவரிக்கின்றார்.

**ரகு வம்சத்தில் உலா**

கவி காளிதாஸர் இயற்றிய ரகுவம்ச மகா காவியத்தில் ஏழாவது சருக்கத்தில் இந்துமதி அஜனது கழுத்தில் ஸ்வயம்வர மாலையை அணிவித்தவுடன் போஜன்

17. கம்பராமாயணம், பாலகாண்டம், எதிர்கொள் படலம், பாடல்.1011, பக்.472

18. கம்பராமாயணம், பாலகாண்டம், எதிர்கொள் படலம், பாடல்.2027, பக்.48

அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு நகருக்குள் சென்றாள். ராஜவீதி நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. அந்நகர மாந்தர்கள் அவர்கள் உலா சென்ற காட்சியைக் கண்டு கூறியதாகப் பதிவிடப்பட்டுள்ளது.

**காளிதாசனின் வழியில் கம்பன்**

காளிதாசன் இயற்றிய ரகுவம்சத்தின் கருத்துக்களை ஒத்த அளவில் கம்பர் தம்முடைய கம்ப இராமாயணத்தில் பாலகாண்டத்தில் ஒரே பாடலில் குறிப்பிடுகின்றார்.

ஆரமும் துகிலும் கலன் யாவையும்
சோர இன்உயிர் சோரும் ஓர்கோர்குழல்
கோடி வில்லிமுன்னே எனைக் கொல்கின்ற
மறவோரின் வலியவர் யார் என்றாள்[29]

மாலையும், சேலையும் மற்றுமுள்ள அணிகலன்களும் தன்னிடம் இருந்து தளர்ந்து விழுந்துவிட, இனிய உயிரும் தளர்ந்து விழுகின்ற நிலையை அடைய, கூந்தல் அவிழ்ந்து தொங்குமாறு நின்ற ஒருத்தி, அச்சம் தரும் வில்லை ஏந்திய இந்த இராமனின் முன்னிலையிலேயே மன்மதன் என்னைக் கொல்கின்றான். எனவே மன்மதனை விட வலிமையானவர் வேறு யார் உள்ளனர்? கூறினாள். எனத் தமது காவியத்தில் கூறும் கம்பர் காளிதாசனின் சுலோகம் 5 முதல் 15 முடிய காணும் கருத்துக்களை சுருக்கி பதிவிடுவதாக எண்ணலாம்.

**முத்தொள்ளாயிரத்தில் உலா காட்சிகள்**

முத்தொள்ளாயிரம் என்ற நூலில் மூவேந்தர்கள் உலா சென்ற காட்சி விவரிக்கப்பட்டுள்ளது.

சேரனின் பெருமைகளை கூறுமிடத்தில் கைக்கிளை பாடலில்,

தாயர் அடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே - ஆய்மலர்
வண்டுலா அங்கண்ணி வயமான் றேர்க் கோதையைக்
கண்டுலா அம் வீதிக் கதவு (பாடல் எண்.10)

கோதை என்ற சேர மன்னன் உலா வந்தபோது அவனை காணவிடாது தாய்மார்கள் கதவை அடைத்தும், இளம்பெண்கள் கதவைத் திறந்ததும் மூடும் தொடர் நிகழ்வினால் கதவு தேய்ந்ததை விளக்குகிறது இப்பாடல்,

திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
இறந்து பழுற்பெரிதாம் ஏதம் - உறக்கையர்கோன்
தண்ணார மார்பிற் றமிழ்நர் பெருமானைக்
கண்ணாரக் காணக் கதவு - (பாடல் எண்.47)

உறையூரின் மன்னராகிய சோழன் உலாவரக் கண்ட பெண்கள் கதவினைத் திறந்துவிடுங்கள் என்று கூறுவதாக அமைத்து பாடியுள்ளார்.

**பாண்டியனின் உலா காட்சி**

துடியடித் தோற் செவித் தூங்குகைந் நால்வாய்ப்
பிடியேயா னின்னை யிரப்பில் - கடிகமழ்தார்ச்
சேலேக வண்ண னொடு சேரி புகுதலு மெஞ்
சாலலேகஞ் சார நட. (பாடல் எண். 118)

பாண்டிய மன்னன் உலா வரும்போது அவன் மீது காதல் கொண்ட பெண்ணொருத்தி உலா வந்த யானையை சாளரத்தின் அருகே அழைத்தாள் என கூறுகின்றது.

**தனி உலா நூல் - திருக்கைலாய ஞான உலா**

உலா இலக்கியத்தின் முதன் நூலாகக் கருதப்படுவது கி. பி. 8ஆம் நூற்றாண்டில் சேரமான் பெருமான் இயற்றிய திருக்கைலாய ஞான உலாவேயாகும்.

திருபூவணநாத உலாவில் இந்நிலை குறித்து "கயிலை வெற்பில் அரங்கேற்றும் ஆதியுலா" எனக் குறிப்பிடுகின்றது. சேரமான் பெருமாளுக்குப் பின்னர் கி. பி. 9-10ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான நம்பியாண்டார் நம்பியும் "ஆளுடையப்பிள்ளையார் திருவுலா மாலை" என்ற பெயரில் நூல் ஒன்றை இயற்றினார்.

சேக்கிழாரும் சேரமானின் திருக்கைலாய ஞான உலா குறித்து வெள்ளையானைச் சருக்கம் 48ல்,

சேரர் காவலர் பரிவுடன் கேட்பித்த
திருவுலாப் புறம் கொண்டு
நாரிபாகரும் நலமிகு திருவருள்
நயப்புடன் அருள் செய்வார்
ஊரானாகிய ஆலால சுந்தர
னுடனமர்ந் திருவீழும்
சாரும் நங்கண நாதர்தம் தலைமையில்
தங்குமென் றருள் செய்தார்

என்று கூறுகின்றார். திருபட்டூர் குடிகொண்டுள்ள அய்யனார் கைலாயத்தில் சிவனார் முன் இயற்றிய திருஞான கைலாய உலாவை பூவுலகிற்கு கொண்டு வந்தார் என்பர். அதற்குச் சான்றாக அவர் கையில் அச்சுவடியை இன்றும் காணலாம்.

ஆதி உலாவைப் பின்பற்றி தம்மை ஆதரித்த மன்னர் களின் பேரில் புலவர்கள் உலா நூல்களை இயற்றினர்.

**ஒட்டக்கூத்தர்**

இயற்பெயர் கூத்தர் என்பதாகும். (கூத்தர் என்பது ஸ்ரீ நடராஜப்பெருமானுடைய பெயர்) இவர் பிறந்த ஊர் மலரி

27. ரகுவம்ச மகா காவியம்-சுலோகம்-12, பக். 332
28. ரகுவம்ச மகா காவியம்-சுலோகம்-14-15, பக். 333, 334
29.கம்பராமாயணம் பால. உலா. பா. 1050, பக். 490

என்பதாகும். இவ்வூர் திருச்சி மாவட்டம் திருவரம்பூர் ஆகும். அதன் பழமையான பெயர் கல்வெட்டுக்களில் திருஎறும்பியூர் என்று வழங்கப்படுகிறது[30].

**ஒட்டக்கூத்தர் பெயர்க் காரணம்**

விக்கிரம சோழனுலாவில் உள்ள ஒரு கண்ணியை ஒட்டி ஒரு செய்யுள் இயற்றும்படி அரசன் வேண்டிக் கொள்ள அவ்வாறே பாட விரைந்து பாடியமைப் பற்றி கூத்தருக்கு ஒட்டக்கூத்தர் என்ற பெயர் வழங்கப்பெற்றார் எனக் கருதுவர்[31].

**புலவரின் வேறு பெயர்கள்**

கௌடப்புலவர், கவிராட்சசன், கவிச்சக்கரவர்த்திகள், காளகவி, சருவஞ்ஞகவி எனும் சிறப்புப் பெயர்கள் வழங்கின.

***கௌடப்புலவர்:*** உலக வருணனைகள் அமைத்துச் செய்யுட்கள் பாடி வந்தமை பற்றிக் கௌடப்புலவர் என்பர்.

***கவிராட்சசன்:*** செய்யுள் இயற்றும் ஆற்றலில் அக்காலப் புலவர்கள் இவரை கவி ராட்சசன் எனவும், கவிச்சக்கரவர்த்தி எனவும் அழைத்தனர்.

***காளகவி:*** சோழ மன்னர்கள் அளித்த காளம் என்னும் விருது பெற்றிருந்தமையால் காளக்கவி என்று அழைக்கப் பட்டார்.

***சருவஞ்ஞகவி:*** தமிழ்மொழி, வடமொழி ஆகியவற்றில் நூல்களை நன்கு கற்று தாம் உணர்ந்த அரிய கருத்துக் களைத் தெளிவாகப் புலப்படுத்தித் திறம்படச் செய்யுள் அமைக்கும் ஆற்றல் பெற்றிருந்த காரணத்தால் சருவஞ்ஞகவி என்று வழங்கப்பெற்றார்.

இச்சிறப்புப் பெயர்கள் தக்கயாகப்பரணி அதன் உரையாலும் சோழ மண்டல சதகம் என்ற நூலாலும் அறியப்படுகின்றது[32].

**கூத்தரை ஆதரித்தவர்கள்**

சோழ மன்னர்கள் விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்க சோழன், இரண்டாம் ராசராசன் ஆவார்கள். இவர்களின் பெயரில் மூவருலா என்ற நூலினை இயற்றினார்.

**விக்கிரம சோழன் (கி.பி.1118-1133)**

இம்மன்னனின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்த கூத்தர் இவனுடைய பெயரில் விக்கிரம சோழனுலா என்ற நூலும், கலிங்கத்துப்பரணி என்னும் பெயரில் பரணி நூல் ஒன்றும் இயற்றியுள்ளார்.

**இரண்டாம் குலோத்துங்க சோழன் (கி.பி.1133-1150)**

விக்கிரம சோழனின் மகனான இரண்டாம் குலோத்துங்க சோழனின் பெருமைகளை விளக்கும் விதமாக குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ், குலோத்துங்க சோழன் உலா ஆகிய இருநூல்களை இயற்றியுள்ளார்.

குலோத்துங்க சோழன் உலா நூலினை இயற்றிதற்காக இப்புலவருக்கு பூந்தோட்டம் அருகில் உள்ள கூத்தனூரை புலவர் முத்தூட்டாக வழங்கியுள்ளான்.

இவ்வூரில் சரஸ்வதிக்கென்று ஓர் ஆலயம் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அத்தேவியைப் பற்றி தாம் இயற்றிய தக்கயாகப்பரணியில் "ஆற்றங்கரைச் சொற்கிழத்தி வாழியே" என ஒட்டக்கூத்தர் வாழ்த்தி கூறியுள்ளார்.

**இரண்டாம் இராசராச சோழன் (கி. பி. 1146-1163)**

இம்மன்னன் இரண்டாம் குலோத்துங்க சோழனின் புதல்வனாவான். இம்மன்னன் பெயரில் கூத்தர் பெருமான்

இராசராசன் உலா என்ற நூலினை இயற்றியுள்ளார். இவ் உலா அரங்கேற்றத்தின்பொழுது அந்நூலின் ஒவ்வொரு கண்ணிக்கும் ஆயிரம் பொற்காசுகள் வீதம் அளிக்கப் பட்டது என அறியமுடிகின்றது.

**ஒட்டக்கூத்தரை ஆதரித்த அமைச்சர்களும், படைத்தலைவர்களும்**

விக்கிரம சோழனின் அமைச்சர்களும், படைத் தலைவர்களும் ஒட்டக்கூத்தரை ஆதரித்தனர். அவர்களுள் அரும்பாக்கிழான் மணவிற்கூத்தன் காலிங்கராயர், திருச் சிற்றம்பலமுடையான் பெருமாநம்பி, காவிரிப்பூம் பட்டினத்து புதுவைக் காங்கேயன் திரிபுவனச் சோமன் ஆகியோரும் ஆவர்.

**ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட பிற நூல்கள்**

கலிங்கப்பரணி, அரும்பைத் தொள்ளாயிரம், குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப்பரணி, காங்கேயன் நாலாயிரக்கோவை ஆகியவற்றையும் இயற்றியுள்ளார். தமிழ் நாவலர் சரிதையில் இவர் இயற்றிய தனிப்பாடல்கள் சிலவும் காணப்படுகின்றன.

***கலிங்கப்பரணி:*** விக்கிரமசோழன் தென்கலிங்க மன்னனாகிய தெலுங்கு வீமனை வெற்றி கொண்டதை குறித்து பரணியாக இயற்றினார். இந்த நூல் இதுகாறும் கிடைக்கப்பெறவில்லை. இந்நூல் குறித்து தக்கயாகப் பரணியில் குறிக்கப்படுவதை காணலாம். மேலும் சிலப்பதிகார உரையில் அடியார்க்கு நல்லார் மேற்கோளாக எடுத்துக் காட்டியுள்ள பரணித் தாழிசைகளுள் சில இந்நூலி லிருந்தவை என்று கருதப்படுகிறது.

---

30. கலைக்களஞ்சியம் தொகு. 2, பக். 654-655

31. கலைக்களஞ்சியம் தொகு. 2, பக். 654-655

*அரும்பைத்தொள்ளாயிரம்:* விக்கிரம சோழனின் படைத் தலைவர்களுள் ஒருவனான அரும்பாக்கிழான் மணவிற் கூத்தன் காலிங்கராயன் பேரில் இயற்றப்பட்டது.

*தக்கையாகப்பரணி:* சிவபெருமானை அவமதித்த தக்கனையும், யாகத்தையும், அதற்கு உதவிபுரிந்த தேவர் களையும் வீரபத்திர கடவுள் வென்ற வரலாற்றை பொருளாகக் கொண்டு இயற்றப்பட்டது. இந்நூலில் காணும் சில செய்யுள்கள் இரண்டாம் இராஜராஜனின் வீரச்செயல்களையும் கூறுவதாக அமைந்துள்ளது. இந்நூல் 814 தாழிசைகளையுடையது.

*காங்கேயன் நாலாயிரம் கோவை :* தம்மை ஆதரித்த தலைவன் பெயரில் இயற்றப்பட்டதாகும்.

**விக்கிரம சோழன் உலா**

விக்கிரம சோழனின் அவைக்களப் புலவராகத் திகழ்ந்த ஒட்டக்கூத்தர் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்றான உலா இலக்கியத்தினை அம்மன்னனின் பெயரில் விக்கிரம சோழன் உலா என்ற பெயரில் படைத்துள்ளார். பாட்டுடைத் தலைவனான விக்கிரம சோழனின் அழகினையும், வீரப்பெருமைகளையும் உணர்ந்த அவனது நாட்டில் உள்ள பெண்கள் அம்மன்னன் உலா வருகின்ற போது அவனது அழகினைக் கண்டு மகிழ்வதாகவும், அவ் வேளையில் எழுவகையான பருவப்பெண்களும் அவன் மீது காதல் வயப்பட்டு காம மயக்கத்தில் மூழ்குவதாகவும் இவ் உலா இலக்கியத்தினைப் படைத்துள்ளார்.

எழுவகைப் பருவ மங்கைகளும் தங்களது பருவத்துக் குரிய வயதில் மன்னன் மீத காதல் வயப்படுவதாக குறிப்பிடு

32. கலைக்களஞ்சியம் தொகு. 2, பக். 655

கின்றார். இவ்வகையில் பேசப்படுகினற பெண்கள் பற்றிய செய்தி உலா இலக்கியத்தில் "பின்னெழு நிலை" என்று பேசப்படுகின்றது. எழுவகைப் பெண்களான, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என வகைப்படுத்தி அவர்களின் செயல் களால் மனனன் மீது கொண்டுள்ள ஈடுபாட்டினையும் எடுத்து இயம்புகின்றனர்.

*பேதைப்பருவப்பெண் :* 5 வயதிலிருந்து 7 வயதிற்குட் பட்ட பருவப் பெண்ணானவள் மழலை மாறாதவள். பொம்மைகளுடன் விளையாடுதல், சிற்றில் இழைத்தல் என்பதான விளையாட்டுகளுடன் சிற்றாடை உடையவள்.

*பெதும்பைப் பருவப்பெண் :* 8 வயதிலிருந்து 11 வயதிற் குட்பட்ட பருவப்பெண், இவளும் வீதியில் விளையாடும். விளையாட்டுகளின் ஆர்வம் உடையவளாகக் கழங்கு, புனல் முதலியன ஆடுவாள். இவளுடைய உடல் வளர்ச்சியைக் குறித்துக் கூறும்போது பறவை, விலங்குகளுடன் மொழி, பற்கள், நடை ஆகியவற்றை ஒப்பிட்டு கூறுகிறார். உடலழகும், நடையழகும் உடையவளாக விளங்கும் பெதும்பை பெண் கொடுக்கவும் மடம், நாணம் எனப்படும் பெண்மைக்குரிய பெருமிதம் இவை கொண்டவளாகவும், பார்வையின் பொருள் உணரும் ஆற்றல் உடையவளாகவும், பல வகையான அலங்காரங்களில் விருப்பமுடைய வளாகவும், காதல் சிறிய அளவில் தோன்றியும் அது வளராது அதனைப் புரிந்து கொள்ள முடியாத வயதினை உடையவர். இப்பருவ மங்கையரின் மன உணர்வுகளை ஒட்டக்கூத்தர் விளக்கியுள்ளார்.

*மங்கைப் பருவப்பெண் :* 12 முதல் 13 வயதிற்குட்பட்ட பருவப்பெண். இவள் காமத்தினை உணரும் ஆற்றல் கொண்டவள். புணர்ச்சிகளைப் பற்றியும் தெரிந்தவள்.

தாமரை மொட்டினைப் போன்ற கொங்கை வளர்ச்சி உடையவள். பந்து விளையாடுவதில் விருப்பம் உடையவள். காதல் ஏற்பட்ட புதிய அனுபவத்தில் மூழ்கிக் கிடக்கும் மன நிலையை உடையவள். [முதற்குலோத்துங்கன் மனைவியரில் ஏழிசை வல்லபி என்பவள் மங்கையர் திலதம் என மெய்க் கீர்த்தியில் குறிக்கப்படுவதைக் காணலாம்].

*மடந்தைப்பருவப்பெண் :* 14 முதல் 19 வயதிற்குட்பட்ட பருவப்பெண். இவள் உடலில் நல்ல வளர்ச்சிகளை உடையவள். உடலில் பசலை படிந்திருக்கும் அழகான கண்கள், அல்குல் இவற்றை உடையவள். பந்து விளையாடு வதிலும், யாழ் வாசிப்பதிலும் அதிகப்பற்று கொண்டவள். காதலில் அதிகமான ஈடுபாடு உடையவளாக இருப்பாள்.

*அரிவைப்பருவப்பெண் :* 20 முதல் 25 வயதிற்குட்பட்ட பருவப்பெண். மீன் போன்ற கண்களையும், கோவை போன்ற இதழ்களையும், வளர்ந்த முலைகளையும், அல்குலினையும் உடையவள். வீணை வாசிப்பதில் ஆர்வம் உடையவளாகவும், காதலை முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்ற மனநிலையினை உடையவள்.

*தெரிவைப்பருவப்பெண் :* 26 முதல் 31 வயதிற்குட்பட்ட பருவ வயதினை உடையவள். இவள் காதலின் இன்பங் களையும் முழுமையாக அறிந்துகொள்ள கூடிய பருவத்தினள். காதலுக்காக தூதுவிடுதல், நீச்சல் விளை யாட்டுக்களிலும் மிகுந்த ஈடுபாடு உடையவள். [விக்கிரம சோழனின் மெய்க்கீர்த்தியில் அவனுடைய மனைவிகளில் ஒருவரான தியாகபதாகை என்பவள் தெரிவையர் திலதம் எனக் குறிக்கப்படுகின்றாள்].

*பேரிளம் பருவப்பெண் :* 32 முதல் 40 வயதிற்குட்பட்ட பருவப்பெண்கள் பேரிளம் பருவப் பெண்கள் எனப்படுவர்.

இவர்கள் காதலையும், காமத்தினையும் நன்கு உணர்ந்த வர்கள். நன்கு வளர்ந்து சாய்ந்த தனங்களையும், பெரிய அல்குலினையும் உடைய இவர்கள் காமத்தின் காரணமாக அலங்காரம், விளையாட்டு, இசைக் கருவிகளை வாசித்தல் என்ற செயல்களில் நாட்டமின்றி இருப்பர்.

எழுவகைப் பெண்களின் நிலைகளைப் பற்றி பாட்டுடைத் தலைவர் உலா எழும் காலத்தில் நிகழும் செயல்களாக ஒட்டக்கூத்தர் அழகுற விளக்குகின்றார்.

**விக்கிரம சோழனின் முன்னோர்கள்**

இவ்வுலா நூலில் 1 முதல் 27 முடிய உள்ள கண்ணி களில் சோழர்களின் தலைமுறைகளைச் சிறப்பித்துக் கூறுகின்றார். முதல் கண்ணியில் திருமாலும், அவருக்குப் பின் தொடர் கண்ணிகளில் பிரம்மா, காசிபன், சூரியன், மனுநீதி, மாந்தாதா, பூபதி, கிள்ளிவளவன், சுரகுரு, நெடுமுடிக்கிள்ளி, சிபி, கரிகாலன், கோச்செங்கண்ணான், விஜயாலயன், முதற்பராந்தகன், முதலாம் இராஜராஜன், முதலாம் இராசேந்திரன், முதற்குலோத்துங்கன் போன்ற வர்களைக் குறிப்பிடுகின்றார்.

ஒட்டக்கூத்தரால் குறிக்கப்படும் விக்கிரம சோழனின் முன்னோர்கள் கடவுள்கள், தேவர்கள், முனிவர்கள், புராண சோழர்கள், இலக்கியச் சோழர்கள், வரலாற்றுச் சோழர்கள் ஆகியோரின் வழித்தோன்றல்களைச் சுந்தர சோழனின் அன்பில் செப்பேட்டிலும், முதலாம் இராஜராஜ சோழனின் பெரிய லெய்டன் செப்பேட்டிலும் குறிக்கப் படுவதை ஒப்பிட்டு நோக்கலாம்.

**விஷ்ணு - பிரம்மா**

நாபே$^{4}$ரபூ$^{4}$ந்நள(ளி) நமம்பு$^{3}$ ஜ-லோசனஸ்ய
வ்யாகோஸ்ம்ம்பு$^{3}$தீ$^{4}$ - ஜலாதி$^{3}$வ பிம்ப மாக (ரக)ம்
தத்கர்ணிகா-கனக-பீட$^{2}$-க$^{3}$-தோ-விரிஞ்ச
ப்ராது$^{3}$ர்ப$^{3}$பூ$^{4}$வ புவ$^{4}$ன-த்ரய-ஸ(ரக$^{3}$ஹே)து :
(அன்பில் செப்பேடு வரி. 20-23)

கடல் நீரிலிருந்து சூரியனின் பிம்பம் தோன்றியது போல் தாமரை கண்ணனான விஷ்ணுவின் நாபியிலிருந்து விரிந்து தாமரை ஒன்று தோன்றியது. அத்தாமரையின் நடுவில் தங்கத்தினால் ஆன பீடத்தில் மூவுலகின் படைப் பிற்கான பிரமதேவர் தோன்றினார்[33].

"சீர்தந்த தாமரையான் கேள்வன் றிருவுருவக்
கார்தந்த வுந்திக் கமலத்துப்"

என்று விக்கிரமசோழன் உலாவில் விஷ்ணு, பிரம்மா ஆகிய கடவுளரின் தோற்றம் பற்றி முதல் கண்ணியில் ஒட்டக் கூத்தர் குறிப்பிடுவதை ஒப்பிட்டு நோக்கலாம்.

**மரீசி - கச்யபர் - சூரியன்**

உத$^{3}$ப$^{4}$வத$^{3}$முதே மரீசிரஸ் மாத$^{3}$ ஜனி சகஸ்யப இத்யுதா$^{3}$ர-தேஜா :
த்ரிபு$^{4}$வன-ந(ய)நம் ததோபி தேஜ: ஸமப$^{4}$ வதர்யமஸம்ஹ்றவயம் மஹீய:
(அன்பில் செப்பேடு வரி. 23-25)

பிரம்மாவிடமிருந்து மரீசி தோன்றினார். மரீசியிட மிருந்து பேரொளி பொருந்தியவரான கச்யபர் தோன்றினார். அவரிடமிருந்து அர்யமா என்னும் பெயருடைய கதிரவன் தோன்றினான்[34].

"ஆதிக் கடவுள் திசைமுகனும் ஆங்கவன்றன்
காதற் குலமைந்தன் காசிபனும் - மேதக்க" -கண்ணி 2.

---

33, 34. புலவர் வே. மகாதேவன், சோழர் செப்பேடுகள் பக். 304

"மையறு காட்சி மரீசியு மண்டலந்
செய்ய தனியாழித் தேரோனும் - மையல்கூர்" -கண்ணி-3.

செப்பேட்டில் பிரம்மா மகன் மரீசியும் அவருக்குப்பின், கச்யபரும் பிறந்தார் எனக் குறிக்கப்படுகின்றது. விக்கிரம சோழன் உலாவில் கச்யபர் (காசிபன்) பின் மரீசி தோன்றினார். மரீசியின் மகனாக சூரியன் தோன்றினார் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

மனு - மாந்தாதா

ஆஸீத்$^{3}$ஆத்$^{3}$யோ ந்ருபாணாம் மனு: அஹிம-கராத்-விஸ்வ-
லோகைக-நேத்ராத்
இக்ஷ்வாகு தத்னூஜோ அஜனிந்ருப-மகுட-ஸ்ரேணிடலீடா$^{4}$-ங்க்$^{4}$ரி-பீட$^{2}$
மாந்தா$^{4}$ தாதா$^{4}$த்ரு-கல்போகு$^{3}$ணநித்$^{4}$ரப$^{4}$வத்தத்குலேபூ$^{4}$மீபாலோ
யோ லோகாலோக-ஸைலாவதி$^{4}$-விதி$^{4}$வத$^{3}$மாம் பாலயாமாஸ பூ$^{4}$மிம்.
(பெரிய லெய்டன் செப்பேடு-சுலோகம் வரி 8-11)

அரசர்களுக்கு முதல்வனாக மனு உலகிற்கெல்லாம் கண் போன்றவரும் வெம்மையான கதிர்களையுடையவருமான கதிரவனுக்கும் பிறந்தார். அந்த மனுவிற்கு, மன்னர் குலத்தின் மகுடங்களால் தடவ பெற்ற பாத பீடத்தை யுடை இட்சுவாகு பிறந்தார். அந்த குலத்தில் பிரம்மாவிற்கு இணையானவனும் குணங்களின் நிதியுமான மாந்தாதா பிறந்தார்.

"சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரின்
மைந்தனை யூர்ந்த மறவோனும்-பைந்தடத்" கண்ணி-4

"தாடுதுறையி லடுபுலியும் - புல்வாயும்
கூடநீரூட்டிய கொற்றவனும் - நீடிய" கண்ணி-5

என மனுவும் - மாந்தாதாவும் பிறந்தனர் என்பதை விக்கிரம சோழன் உலா கண்ணி-4, 5ன் மூலமாகவும் அறிய முடிகின்றது.

முசுகுந்தன் – சிபி

ராஜாஸீன் முசுகுந்த$^{3}$ இத்யபி$^{4}$ஹித: தஸ்யாத்ம ஜோ வீர்யவான்
தத்புத்ரோ வளபோ$^{4}$ அஜனி க்ஷிதிபதி : க்ஷத்ரைக – சூடா$^{3}$ மணி
தத்வம்ஸே ஸிபரித்யஸேஷ – ஜக$^{3}$தி ப்ரக்$^{2}$ யாத-கீர்த்தி-ந்ருப:
ஸ்ரீமான் அவிரபூ$^{4}$த் அஸேஷ-ந்ருபதி-வ்ராதார் சிதாங்க்$^{4}$ரித் $^{3}$வய
(பெரிய லெய்டன் செப்பேடு சுலோகம் வரி 11-14)

மாந்தாதாவின் மகன் முசுகுந்தன் என்ற புகழ்பெற்ற வீரிய முள்ள வேந்தன். அவன் மகனாக வளபன் என்னும் அரசன் பிறந்தார். அவர் சத்திரிய குலத்திற்கே சூடாமணி போன்றவர். அந்த குலத்தில் எல்லா உலகிலும் புகழ் பெற்ற அரசராக சிபி தோன்றினார். அவர் எல்லா அரசர் கூட்டத்தாலும் போற்றப்பட்ட திருவடியிணைகளை உடையவர்.

சிபி

நிஜ-தேஹ-க்ருத்த-பிஸினதாஸ்ப்-துலா-த்$^{4}$ருதை: க்ருபயாபி$^{4}$
ரக்ஷித-கபோத-போதக
(அ)ஜரிஷ்டபூ$^{4}$ப-திலகாத$^{3}$த: ஸிபி: ப்ரபு$^{4}$ ராபயோதி வலயம்
பு$^{4}$வோவஸிஸீ
(அன்பில் செப்பேடு சுலோகம் வரிகள் 31-34)

காக்குஞ் சிறுபுறவுக் காகக் களிகூர்ந்து
தூக்குந் தலைபுக்க தூயோனும்-மேக்குயரக் (வி.சோ.கண்ணி11)

புறாவுக்காகத் தன்னுடைய தொடையிலிருந்து சதையை அரிந்து அளித்தவன்.

பூபதி

ராஜ்-ஸ்வாஜி-ஸம(ர்ஜ்ஜி) தோர்ஜ்ஜித்-யஸோ-லக்ஷ்மி-ப்ரதாபேஷ்வ
பூச்$^{4}$ சோளஸ் ஸவான்ய-பூ$^{4}$ப்$^{4}$ருதோத$^{3}$த$^{4}$தியந் நாமைவ தேஸைரமா(ம்)
(அன்பில் செப்பேடு சுலோகம் வரிகள் 36-38)

முசுகுந்தன், சிபி போன்ற அரசர்கள் புகழ் திரு, வீரம் முதலானவற்றை அடைந்தவர்கள். அத்தகைய மன்னர்கள் சுவர்க்கத்தை அடைந்தனர் பின்னர் பூபதி (சோழன்) என்பவன் அம்மரபில் தோன்றினான்.

மகாவிமானந் தனியூர்ந்த மன்னவனும்
போகபுரிந்த பூபதியும்-மாகத்துக் (வி.சோ.கண்ணி-6)

இவ்வரிகளில் பூபதி என்ற சொல் சோழ அரசனைக் குறிப்பதாக உள்ளது. அதனை உறுதி செய்வது போல் செப்பேட்டிலும் குறிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

**சுரகுரு (மிருத்யுசித்)**

ஸூரகு$^{3}$ரு: அப$^{4}$வத் ததீ$^{3}$ய-வம்ஸே குல-ப$^{4}$வனம்
விஜயேந்திர$^{3}$ரா-யுவத்யா:
நிஜ-மஹிம-ஜிதாந்தக: ஸ்வ-ராஜ்ஸே நரபதிராபஸ
ம்ருத்யுஜித்-ஸமாக்$^{2}$யாம்
(திருவாலங்காட்டுச் செப்பேடு சுலோகம்-வரிகள் 35-36)

சுரகுரு என்னும் அரசன் தோன்றினார். அவன் வெற்றித் திருமகளின் உறைவிடம். தன் பெருமையால் கூற்றுனை வென்றார். அதனால் அவன் ம்ருத்யுசித் என்று அழைக்கப் பட்டார்.

தோடி மறலி யொளிப்ப முதுமக்கட்
சாடி வகுத்த தராபதியும்-கூடார்தம் (வி.சோ.கண்ணி-8)

எமனிடம் வழக்குரைத்தவன் என விக்கிரம சோழன் உலா கண்ணி 8ல் குறிக்கப்படுவதையும் ஒப்பு நோக்கலாம்.

**கிள்ளி-கரிகாலன்-கோச்செங்கணான்**

தத்$^{3}$வம்ஸே ஸென்னி கிள்ளிப்ரப் ருதிஷ கரிகாலாதி கே(ஷ்வ)
ப்யனன்யாம்
பு$^{4}$க்த்வா (ப்ருத்$^{2}$வீம்) ஸமஸ்தாம மரபதிபுரீம் ராஜஸூப்ராப்தவத்ஸீ

ஜஜ்ஞே கோச் சேங்கணாநித்யகி$^{2}$ல-ஜநபதா$^{3}$க்ல்ருப்த)-
கௌ$^{3}$ரீச-தா-மா
க்ஷ்மாப: க்ஷ்மாபேந்த்ர$^{3}$-சூளா(டா$^{2}$) மணிரத$^{2}$ ஸமபூ$^{4}$ன
நல்லடிகோன் அமுஷ்மாத்
(அ. செ. சுலோகம் வரிகள் 39-42)

சென்னி, கிள்ளி முதலிய பெயர்களைச் சூடியவர்களும், கரிகாலனும் முழு உலகத்தை ஆண்டு பின்னர் தேவர் உலகை அடைந்தனர். எல்லா ஊரிலும் கௌரியர் தலைவனுக்கு (சிவனுக்கு) கோயில் எழுப்பிய கோச் செங்கணான் பிறந்தான். அவனுக்குப் பின் இந்திரனுக்குச் சூடாமணி போன்ற நல்லடிக்கோன் பிறந்தான்.

விக்கிரமசோழன் உலா கண்ணிகளில்,

*கிள்ளி*

பிலமதனிற் புக்குத்தன்பே ரொளியா ணாகர்
குலமகளைக் கைப்பிடித்த கோவும் - உலகறியக்
(வி.சோ.கண்ணி-10)

*கரிகாலன்*

கொள்ளுங் குடகக் குவடுடறுத்திழியத்
தள்ளுந் திரைப் பொன்னி தந்தோனும்-தெள்ளருவி
(வி.சோ.கண்ணி-12)

சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும்-இன்னருளின்
(வி.சோ.கண்ணி-13)

*கோச்செங்கணான்*

மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட்ட பார்த்திவனும்-மீதெல்லாம்
(வி.சோ.கண்ணி-14)

இலக்கிய சோழ அரசர்கள் குறிக்கப்படுவதையும் காணலாம்.

**விஜயாலயன்**

விஜ(யு)ாலயதாம் யாதோ யஸ்ஸம்யதி மஹாபு[4]ஜ
விஜயாலய நாமாஸூத் ததோமி ந்ருஸேக[2]ர:
(அ.செ. சுலோகம் வரிகள் 46-47)

போரில் அடைந்த வெற்றிகள் உறைவிடமாகத் திகழ்ந்த மையால் விஜயாலயன் எனப் புகழப்பட்ட விஜயாலய சோழன் அரசாண்டான். அவன் தோள் வலிமை படைத்தவன். மன்னர்களுக்கு மகுடமாகத் திகழ்ந்தான். இதனை,

எண்கொண்ட தொண்ணூற்றின் மேலும் இருமூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலனும்-கண்கொண்ட
(வி. சோ. கண்ணி 15)

என அம்மன்னனின் தோள் வலிமையாலும், வீரத்தி னாலும் 96 விழுப்புண்கள் பெற்றிருந்தான் என எடுத்து இயம்புகின்றது. விக்கிரம சோழன் உலா கண்ணி 11இல்.

**முதற் பராந்தகன்**

ரஜத-கி[3]ரி-ஜுஷ: புரா புராரேரக்ரு(குரு)தஸத[3]ப்[4]ர-ஸபா[4]-
பி[4]தா[4]ன-மோக
கனக மய முதா[3]ர-ஸம்பதா[3]யஸசிவம் அமுஷ்யச லஜ்ஜிதம்
த[4]னேஸம்
(திருவாலங்காட்டுச் செப்பேடு சுலோகம் வரி-53.)

வெள்ளி மலையில் வீற்றிருக்கும் புரமெரித்த சிவனுக்கு தங்க மயமான தப்பிரசபை (சிற்றம்பலம்) என்ற பெயருடைய கவசத்தைச் சாத்தினார் பரமேச்வரனுடைய நண்பனும் செல்வத்துக்கதிபதியான குபேரனைத் தன் கொழித்த செல்வத்தால் வெட்கப்பட வைத்தான் எனத் திருவாலங்காட்டுச் செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ளது.

கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றம்
காதலாற் பொன் வேய்ந்த காவலனும்-தூதற்காப்
(வி. சோ. கண்ணி 16)

திருமன்றம் எனப்படும் சிற்றம்பலத்திற்குப் பொன்னோடு களைப் பதித்தான் என்று கூறப்படுகின்றது.

முதலாம் இராசராசன்

ஸர்வ-க்ஷத்ர-வத$^{4}$-வ்ரத-ப்ரணயினா ராமேண யன் நிர்ம்மிதம்
ராஷ்ட்ரம் (ஸி)ஷ்ட-ஜனாபி$^{4}$ராமம் அதுலம் து$^{3}$ர்க்க$^{3}$ம்
மஹீந்ப்ரார்த்த$^{2}$ன (த்$^{4}$ரார்ண)வை
ஜித்வாதத் ஸகலாவணீந்த்$^{3}$ர-மகுட-ஸ்ரேணி-லாஸத்-சாஸண:
ஸோபூ$^{4}$த்ஸர்வ-த$^{4}$-னு-ப்ரு(ரப்$^{4}$ரு)தாம் க்ஷிதிப்$^{4}$ ருதாம்
ஆனந்த$^{3}$ ஸந்தோ$^{3}$ப$^{4}$வ (ஹஸ)த்
(திருவாலங்காட்டுச் செப்பேடு சுலோகம் வரி-83.)

எல்லா சத்திரியர்களையும் வதைப்பதை விரதமாக ஏற்ற பரசுராமனால் நிர்மாணிக்கப்பட்ட நல்ல மக்களால் மனம் கவர்ந்தும் இணையற்றதுமான (கேரள) நாட்டின் கோட்டை, மலை கடல்களோடும் வென்றான் என்று கூறும் திருவாலங்காட்டுச் செப்பேட்டின் செய்தியை உறுதி செய்யும் காட்சியை விக்கிரம சோழன் உலாவிலும்,

பண்டு பகலொன்றி லீரொன் பதுசுரமும்
கொண்டு மலைநாடு கொண்டோனும்-தண்டவிக் (கண்ணி-17)

முதலாம் இராசராசன் மலைநாடு எனப்படும் சேர நாட்டினை வெற்றி கொண்டான் என்பதை காணலாம்.

முதலாம் இராசேந்திரன்

தப ப்ரபா$^{4}$வாத் அவதீர்ண-க$^{3}$ங்க$^{3}$ம் ப$^{4}$கீ$^{3}$ரத$^{2}$(ம்)
ப(ர)$^{3}$ ஹுப$^{3}$லாத் ஹஸன் ஸ :
கங்கா$^{3}$ஜலை: பாவியிதும் ஸ்வகீயாம் இயேஷ ப்ருத$^{2}$வீம் ரவி-
வம்ஸ-தீ$^{3}$ப
(திருவாலங்காட்டுச் செப்பேடு சுலோகம் வரி-83.)

தவத்தின் வலிமையால் கங்கையைக் கொண்டுவந்த பகீரதனைத் தன் தோள் வலிமையால் நகைத்த அந்த இரவிகுல தீபம் போன்ற அரசன் கங்கை நீரால் தன் நாட்டைப் புனிதமாக்க முயன்றான்.

உல்லங்கி$^{4}$ தாம்பு$^{3}$தி$^{4}$பி$^{4}$: உத்$^{3}$த$^{4}$த-பா$^{3}$ஹீ-வீர்யயை:
நிர்த்$^{3}$தூ$^{4}$த-(வை)ரி-நர-நாத$^{2}$-ப$^{3}$-ல-ப்ரபஞ்சை:
ஸைன்ஸை ; த$^{3}$தா$^{3}$ஹரஸ கடாஹ-மத-த்$^{3}$தா$^{4}$ (க்$^{3}$த$^{4}$)மன்ஸை
ராஜேந்த்$^{3}$ர-சோள-ந்ருபதி: கிமாஸாத்$^{4}$ யமஸ்ய

(சாராலச் செப்பேடு சுலோகம்-72)

இராஜேந்திர சோழன் கடலைக் கடந்ததும் உயர்ந்த தோள்வலி உடையதும் எதிர் மன்னர்களை வீழ்த்தியது மான தன் படையைக் கொண்டு கடாகத்தை (கடாரம்) எரித்தான்.

இவ்விரண்டு செப்பேட்டினால் அறியப்படும் செய்திகளை விக்கிரம சோழன் உலாவும்,

கங்கா நதியுங் கடாரமுங் கைக்கொண்டு
சிங்கா தனத்திருந்த செம்பியனும் - வங்கத்தை

எனக் கண்ணி 18னாலும் முதலாம் இராஜேந்திரனின் வெற்றிகளை அறிந்து கொள்ளலாம்.

முதலாம் இராசாதிராசன்

தஸ்யாஸன் தன்யா த்ரய : த்ரய இவக்$^{2}$ யாதா க்ரதோ அக்னய:
தோஷம் து ப்ரத$^{2}$ம: க்ஷிதீஸ-திலகோ ராஜாதி$^{4}$ராஜோ ந்ருப:
ய கல்யாணபுரம் த$^{3}$தா$^{3}$ஹ ந்ருபதீன் நிர்ஜ்ஜித்ய
கர்ண்ணாடகான்
ஆதா$^{3}$ய ஆஹவ-மல்ல-வாரண-க$^{4}$டாம் கோல்லாபுரம்
சஆக்ஷிணோத்

(சாராலச் செப்பேடு சுலோகம். 73)

இராசேந்திரனுக்கு யாகத்தின் மூன்று அக்னிகள் போல மூன்று மகன்கள் இருந்தனர். அவர்களில் முதல்வன் இராசாதிராசன் என்னும் அரசனாவான். அவன் அரசர் களுக்குத் திலகம் போன்றவன். அவன் கல்யாணபுரத்தை எரித்தான். கருனாடகத்தை வென்றான். ஆகவமல்லனின் யானைப் படையைக் கவர்ந்து கொல்லாபுரத்தையும் கைக் கொண்டான். இக்கருத்தினையே விக்கிரம சோழன் உலாவில்,

முற்று முரணடக்கி மும்மடி போய்க் கல்யாணி
செற்று தனியாண்மைச் சேவகனும்-பற்றலரை (கண்ணி-19)

கல்யாணி எனப்படும் கல்யாணபுரத்தையும் வெற்றி கொண்டு சோழர் ஆட்சியின்கீழ் முதலாம் இராசாதி ராசன் கொண்டுவந்தான்.

### இரண்டாம் இராசேந்திரன்

தஸ்மின் கதே திரிதி$^{3}$வம் உத்$^{3}$த்$^{4}$ருத - லோக-ஸோக
தஸ்யானுஜ: க்ஷிதிம் இமாம் அகி$^{2}$லாம் அரக்ஷத்
ராஜேந்த்$^{3}$-ர-தே$^{3}$-வ-ந்ருபதி : ஸ ரிபூன் அஸேஷான்
ஸே ஷோபமோத் (த்$^{3}$)ப$^{4}$டபு$^{4}$ஜ: ப்ரலயம் வ்யநைஷீத்
(சாராலச் செப்பேடு சுலோகம். 74)

முதலாம் இராசாதிராசன் சுவர்க்கத்தை அடைந்த பின்னர் அவனுடைய தம்பியான இரண்டாம் இராசேந்திரன் பூமியைக் காத்தான். அவன் உலகில் துயரைப் போக்கியவன். ஆதிசேடனைப் போன்ற வலிமை யுடைய தன் தோள்களால் எதிரிகளை அழித்தவன் எனவும்,

வெப்பத் தடுகளத்து வேழங்களாயிரமும்
கொப்பத் தொருகளிற்றாக் கொண்டோனும்-அப்பழநூல்
(கண்ணி-20)

விக்கிரம சோழன் உலாவினாலும் கொப்பம் என்ற பகுதியை இரண்டாம் இராசேந்திரன் வெற்றி பெற்றான் என்பதை அறியமுடிகின்றது.

**வீரராசேந்திரன்**

ஹத்வா கூடல-ஸங்க³மே க்ஷிதிப்⁴ருத: கர்ண்ணாட-
வம்ஸோத்³ப⁴வான்
ஸைன்யாம் யஜ்ஞுபு ⁴ஜம் ப்ரவர்த⁴யதிய: தை:
தே³வபூ⁴யம்க³தை
யேன ஏகேனக³ஜேன குந்தக-ப³லம் நிர்ஹத்ய
தச்சோ²ணிதை
க்ருத்வா அண்யம் ஸரிதம் ஸமுத்³ர-ப⁴ரிதம் (தாம்)
ஸந்தோஷிதோ வாரிதி⁴
(சாராலச் செப்பேடு சுலோகம். 76)

கூடல் சங்கமத்தில் கர்னாட வம்சத்தில் பிறந்தோரைக் கொன்றான்-கூடல்

சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனும்-அங்கவன் பின்

எனக் கூடல் சங்கமத்தில் போரில் கலந்து கொண்டு பல யானைகளை கொன்று வீரராசேந்திரன் வெற்றி பெற்றான் என்பதனையும் விக்கிரம சோழன் உலாவினாலும் அறியலாம். மேலும் இக்கூடல் சங்கமப் போரினைப் பற்றி செய்தியைக் கூடல் சங்கம் பரணி என்ற நூலில் கூறப்பட்டு இருப்பினும் அந்நூல் கிடைக்கப் பெறவில்லை என்பது அறிஞர்கள் பெருமக்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்குறித்த அரசர்கள் பற்றி செப்பேட்டிலும் உலாவிலும் காணப்படுவதை ஒப்புமைப் படுத்தி ஆய்வாக அளிக்கப்பட்டுள்ளது.

உதயேந்திரம், வேளஞ்சேரி, அன்பில், சாராலச் செப்பேடு போன்ற செப்பேடுகளில் தேவர்கள், முனிவர்கள் என சோழனின் முன்னோர்கள் குறிக்கப்படுகின்றது.

இவற்றில் முறையே விஷ்ணு, பிரம்மா, மரீசி, கச்யாபர், சூரியன் என ஐவர் குறிக்கப்படுகின்றனர்.

பெரிய லெய்டன், திருவாலங்காடு, கரந்தை, எசாலம் செப்பேடுகளில் சூரியன் மட்டுமே குறிக்கப்பட்டுள் ளதைக் காணலாம். மேற்கண்ட ஐவர்கள் பெயரினையும் விககிரம சோழன் உலாவினாலும் அறியலாம்.

விக்கிரம சோழன் உலாவில் புராண கால அரசர்கள் இலக்கிய கால அரசர்கள், வரலாற்றுக் கால அரசர்கள், சாளுக்கியச் சோழர் என வரையறுக்கப் பட்டுள்ளது.

**புராண கால சோழர்கள்**: 1) மனுநீதி, 2) மாந்தாதா, 3) பூபதி, 4) கிள்ளி வளவன், 5) சுரகுரு, 6) சிபி ஆகிய ஐவரும் புராணகால சோழர்கள் ஆவர்.

**இலக்கிய கால சோழ அரசர்கள்**: 1) தொடிதோட் செம்பியன், 2) நெடுமுடிகிள்ளி, 3) கரிகாலன் ஆகியோார் இலக்கியகால சோழர்கள் ஆவர்.

**வரலாற்றுக் கால சோழ அரசர்கள்**: விஜயாலயன் முதல் அதி ராசேந்திரன் முடிய பதினான்கு சோழர்கள் வரலாற்றுக் கால சோழர்கள் ஆவர். அவர்கள் குறித்து சிறு வரலாற்று குறிப்புகள் வழங்கப்படுகிறது.

**விஜயாலயன் (கி. பி. 848-871)**

வெற்றிச்சோழன் எனப்படும் விஜயாலய சோழரைப் பற்றி அன்பில் செப்பேடு, ஆனைமங்கல செப்பேடு, கன்னியாகுமரி கல்வெட்டுகள் விரிவாக விளக்குகின்றன. தஞ்சைக் கீழவாசல் எனப்படும் பகுதியில் நிசும்பசூதனி என்ற பெண் தெய்வத்திற்கு ஆலயம் எடுப்பித்தான் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுகின்றது. இம்மன்னன் பெயரில் விஜயாலய சோழேச்சரம் என்பது நார்த்தா

மலையில் உள்ளது. இம்மன்னன் கி. பி. 881ஆம் ஆண்டு உலக வாழ்வை நீத்தான்.

**முதலாம் ஆதித்தன் (கி. பி. 871-907)**

விஜயாலயனின் மகனாவார். இவர் இராஜகேசரி என்ற பட்டத்துடன் விளங்கியவர். இவர் அபராஜித வர்மன் என்ற பல்லவ அரசனுக்குக் கீழ் சிற்றரசனாக விளங்கினான்.

திருப்புறம்பியம் என்ற இடத்தில் பாண்டிய மன்னன் வரகுணன் என்பவருக்கும் பல்லவ மன்னர் அபராஜித வர்மருக்கும் இடையில் நடைபெற்ற போரில் இவ் ஆதித்த சோழன் பல்லவ மன்னருக்கு உதவி புரிந்தான்.

இப்போரில் உதவி புரிந்தமையால் பல்லவ மன்னனுக்கு தம் ஆட்சியின் கீழ் இருந்த சில பகுதிகளை ஆதித்த சோழனுக்கு வழங்கினான். திருப்புறம்பியம் போருக்குப் பின் சில ஆண்டுகள் கழித்து முதலாம் ஆதித்தன் அபராஜதரை வெற்றிகொண்டான் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுகின்றது. மேலும் இம் மன்னன் காவிரியின் இருமருங்கிலும் சிவாலயங்களை கற்றளியாக எடுப்பித்தான் என அன்பில் செப்பேடு குறிப்பிடுகின்றது.

தில்லை திருச்சிற்றம்பலவாணருக்கு கொங்கு நாட்டை வெற்றியின் அடையாளமாக தங்கத்தினைக் கொண்டுவந்து பொன் வேய்ந்தான் என்பதை திருநெய்தானத்துக் கல்வெட்டு

**தொண்டைநாடு பாவின சோழன் பலயானைக்**
**கொக் கண்டனா இன இராஜகேசரிவர்மன் என்று கூறுகின்றது.**

இராஜகேசரி எனப்படும் இம்மன்னரின் பட்டப் பெயர்களில் இராஜகேசரி சதுர்வேதிமங்கலம் என்ற ஊர் உருவாக்கப்பட்டது. இவ்வூர் தற்பொழுது இராஜகிரி என்று அழைக்கப்படுகிறது.

இம்மன்னன் கி. பி. 907ஆம் ஆண்டு திருக்காளத்தி அருகில் தொண்டைமான் பேராற்றூரில் இறைவனடி சேர்ந்தான். இம்மன்னனுக்கு கோதண்டராமன் என்ற பெயரும் வழங்கியுள்ளது. அவ்வூரில் இம்மன்னனுக்குப் பள்ளிப்படை கோயில் எடுக்கப்பட்டுள்ளது. அக்கோயில் கோதண்டராம ஈஸ்வரம் என்றழைக்கப்படுகிறது.

**முதல் பராந்தகன் (கி. பி. 907-953)**

வீரநாராயணன் என்ற பெயர் கொண்டவன். பட்டமேற்ற போது பரகேசரி பராந்தக சோழன் என்று அழைக்கப்பட்டான். இம்மன்னர் சோழநாட்டின் எல்லையைத் தெற்கு பகுதி வரை விரிவுப்டுத்தினான். இவருடைய மூன்றாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு மதுரை மீது படை எடுத்தான் எனவும், 37ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு மதுரையும், ஈழமும் கொண்ட கோப்பர கேசரி எனக் குறிக்கின்றது. இம்மன்னன் பெயரில் காட்டு மன்னார்குடி அருகில் வீராணம் எனப்படும் வீர நாராயணப் பேரேரி உருவாக்கப்பட்டதாகும். இம் மன்னன் கி. பி. 953இல் இவ்வுலக வாழ்க்கையை நீத்தான்.

**இராஜாதித்தன் (கி. பி. 949)**

முதற் பராந்தகனின் மூத்த மகனாவான். இவர் பரகேசரி என்ற பட்டப்பெயரை கொண்டவன். இவன் கி.பி. 936இல் திருமுனைப்பாடி நாட்டின் திருநாவலூரி லிருந்து கொண்டு சோழநாட்டின் வடக்குப் பகுதியைக் கண்காணித்து வந்தான்.

இவன் தக்கோலம் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் யானையின் மேலே அமர்ந்த நிலையில் கொல்லப்பட்டான். அதனால் அம்மன்னன் யானைமேல் துஞ்சியதேவர் என அழைக்கப்பட்டான்.

**கண்டராதித்த சோழன் (கி. பி. 950-957)**

பராந்தகனின் இரண்டாம் மகனும் இராஜாதித்தனின் தம்பியுமான கண்டராதித்த சோழன் கி. பி. 953இல் ராஜகேசரி என்ற பட்டத்துடன் முடி சூட்டப்பட்டான். காவிரியின் வடகரையில் கண்டராதித்தச் சதுர்வேதி மங்கலம் என்ற ஊரினையும், அதே பெயரில் பேரேரியையும் ஏற்படுத்தினான் என உலகபுரம் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

இவன் நல்லாட்சி செய்தது மட்டுமல்லாமல் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டவராக விளங்கினான். இம்மன்னனால் திருவிசைப்பா என்ற நூலும் இயற்றப் பட்டது. இம்மன்னனுடைய பட்டத்தரிசியான செம்பியன் மாதேவி என்பவரால் பல மண் தளி கோயில்கள் கற்றளி யாக எடுப்பிக்கப்பட்டது. இலிங்க வடிவில் சிவனை வழிபடும் கண்டராதித்தன், செம்பியன் மாதேவியின் உருவ சிற்பமும் கல்வெட்டும் திருநல்லம் என்று அழைக்கப்படும் கோனேரிராஜபுரத்தில் காணப்படுகின்றது.

**அரிஞ்சய சோழன் (கி. பி. 956-957)**

பராந்தகச் சோழனின் மூன்றாம் மகன். இராசாதித்தன், கண்டராதித்தன் இருவருக்கும் இளையவன். தந்தையின் காலந்தொட்டே மலையமான் நாட்டுத் திருக்கோவலூரில் பெரும் படையுடன் தங்கி இருந்தான். இவன் பரகேசரி என்ற பட்டம் தாங்கியவன். ஆற்றூரில் இறந்தமையால் கல்வெட்டுகளில் ஆற்றூர் துஞ்சின தேவர் என அழைக்கப்படுகிறான்.

**இரண்டாம் பராந்தகன் (சுந்தரசோழன்) (கி. பி. 907-970)**

அரிஞ்சய சோழனின் மகனான சுந்தரசோழன் இராஜகேசரி என்ற பட்டத்துடன் ஆட்சி பொறுப்பேற்றான்.

இவர் காலத்தில் சேவூர் என்ற இடத்தில் நடந்த போரில் பாண்டியரை வெற்றி கொண்டு பாண்டிய நாட்டினைச் சோழ நாட்டினுடன் இணைத்தான்.

இதனால் இம்மன்னன் கல்வெட்டில் பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமான் என்றும் மதுரை கொண்ட கோ இராஜகேசரிவர்மன் என அழைக்கப்படுகிறான். இம் மன்னன் பொன்மாளிகை துஞ்சிய தேவர் என அழைக்கப்படுகிறான்.

**ஆதித்த கரிகாலன் (கி. பி. 969)**

சுந்தரசோழனின் மூத்த மகனாவான். இவர் பாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரிவர்மன் எனக் கல்வெட்டில் குறிக்கப்படுகிறான்.

புள்ளமங்கையில் காணும் ஐந்தாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டில் திருமணி மண்டபத்து ஸ்வஸ்திஸ்ரீ காளா பிடாரிக்கு நிவந்தங்கள் வழங்கியதை குறிக்கின்றது. சிலப்பதிகாரத்தில் உரக கச்சடை முலைச்சி என்ற வரிக்கு உரிய தோற்றத்துடன் இன்றும் இக்காளா பிடாரியை காணலாம். இம்மன்னர் எதிரிகளின் சூழ்ச்சியால் கி. பி. 969இல் கொல்லப்பட்டான்.

**உத்தம சோழன் (கி. பி. 969-985)**

கண்டராதித்தசோழருக்கும் செம்பியன்மாதேவிக்கும் பிறந்தவர் உத்தமசோழன். இவர் பரகேசரி என்ற பட்டத்துடன் ஆட்சி செய்தான். சுந்தரசோழன் காலத்தில் இராஷ்டிரகூட மன்னனிடம் கைப்பற்றிய நாடுகளை ஒருங்கிணைத்து எவ்வித இன்னல்களும் இன்றி ஆட்சி புரிந்தான். இவர்காலத்தில் கச்சிபேட்டு ஊரகத்து

நின்றருளின தேவருக்கு தானம் வழங்கி செப்பேடு ஒன்றினை பதினாறாவது ஆட்சி ஆண்டில் வழங்கியுள்ளான். தற்பொழுது அச்செப்பேடு சென்னை அருங்காட்சிக செப்பேடு என அழைக்கப்படுகிறது. (S. I. I. Vol. III Part-II Page No. 264) இம்மன்னன் கி. பி. 985ஆம் ஆண்டில் இறந்தான். இவருடைய மறைவிற்குப் பின்னும் இவனுடைய தாயார் "ஸ்ரீ மதுராந்தக தேவரான உத்தசோழரைத் திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியார்" எனப்படும் செம்பியன் மாதேவியார் இம்மன்னருடைய பெயரில் வெள்ளி தளிகை, தரா, 108 கலசம் போன்றவற்றை கோயில் தேவராயன் பேட்டை கோயிலுக்கு வழங்கியதை அங்குள்ள கல்வெட்டில் காணலாம்.

**முதலாம் இராசராசன் (கி. பி. 985-1014)**

சுந்தரசோழனின் இரண்டாம் மகனாவான். இவன் இயற்பெயர் அருண்மொழிவர்மன் எனவும், இவர் கைகளில் சங்கு, சக்கரக் குறிகள் கொண்டிருந்தான் எனவும் திருவாலங் காட்டுச் செப்பேடு குறிப்பிடுகின்றது. இவனுடைய அபிடேக பெயர் இராசராசன் என்பதாகும். இராஜகேசரி என்ற பட்டத்துடன் ஆட்சிக்கு வந்தான். இவனுடைய காலத்தில் சோழநாடு தெற்கே கேரளம் வரை விரிவடைந்தது. சோழர் ஆட்சியில் இம்மன்னனால் கடற்படை பயன்படுத்தப் பட்டது. சோழநாட்டில் நில அளவை மேற்கொண்டான். சமயத்தின் பால் ஈடுபாடு கொண்டு நம்பியாண்டார் நம்பியை கொண்டு மூவர் திருமேனிகளை எழச் செய்து தில்லை திருக்கோயிலில் இருந்து திருமுறைகளைத் தொகுத்தான். அதனால் திருமுறை கண்ட சோழன், சிவபாதசேகரன் என்று அழைக்கப்பட்டான்.

தஞ்சையில் இராசராசேச்வரம் என்ற சிவாலயம் ஒன்றை கற்றளியாக அமைத்தான்.

சோழ மன்னர்களின் வெற்றிச் சிறப்பைக் குறிப்பிடும் மெய்க்கீர்த்தி என்ற செய்யுள் வடிவான கல்வெட்டு முதன் முதலில் முதலாம் இராசராசன் கல்வெட்டில் காணமுடி கின்றது.

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுஞ்
............ ........... ................. .....................
தேசுகொள் கோராச கேசரி வர்மரான
உடையார் ஸ்ரீராசராச தேவர்க்கு யாண்டு

என மெய்க்கீர்த்தி வடிக்கப்பட்டுள்ளது.

கி. பி. 1014ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்க்கையை நீத்து இறைவனடி சேர்ந்தான்.

**முதல் இராசேந்திர சோழன் (கி. பி. 1012-1044)**

முதலாம் இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திர சோழன். இவனது இயற்பெயர் மதுராந்தகன் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுகின்றது. இவன் இராசேந்திரன் என்ற பெயரில் பட்டமேற்றான். "பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்ட கோப்பரகேசரி வர்மன்" என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றான்.

மலேயாவில் உள்ள கடாரம் (கெடா) ஸ்ரீவிஜயம் (சுமத்ரா), நக்கவாரம் (நிக்கோபார்) தீவுகள் ஆகியவற்றை கடல் கடந்து வெற்றி கொண்டு அங்கிருந்து நீர்கொண்டு வந்து தமது தலைநகரான கங்கைகொண்ட சோழபுரத்தில் ஒரு ஏரியை வெட்டி அதில் கங்கை நீரைவிட்டு சோழகங்கம் (பொன்னேரி) என்ற பெயரினை சூட்டினான் என திருவாலங் காட்டுச் செப்பேட்டினால் அறியலாம்.

இம்மன்னன் காலத்தில் சோழநாட்டு புகழ் கடல் கடந்து விளங்கியது. கி. பி. 1044இல் தொண்டை மண்டலத்து பிரம்ம

தேசத்தில் உயிர்நீத்தான். இவர் மனைவி வீரமாதேவியும் உடன் உயிர் துறந்தாள். இவர்களின் உயிர்களுக்கு நீர்வேட்கை தணிப்பதற்காக வீரமாதேவியின் சகோதரனான சேனாபதி மதுராந்தகன் பரகேசரி மூவேந்தவேளான் என்பவன் தண்ணீர்ப் பந்தல் நிறுவினான் என்கின்றது பிரமதேயம் கல்வெட்டொன்று.

**முதல் ராசாதிராச சோழன் (கி. பி. 1018-1054)**

முதலாம் இராசேந்திர சோழனின் மூத்த மகனாவான். தந்தையார் காலந்தொட்டே அரசியலில் சிறந்த பயிற்சி பெற்றவன். மானாபரணன், வீரகேரளன், சுந்தரபாண்டியன் என்றும் பாண்டியர்களையும், வேணாட்டரசனையும், இராமகுட மூவரையும் தோற்று ஓடச் செய்தான் என்றும், காந்தளூர்ச்சாலையை கைப்பற்றினான் என்றும், மேலை சாளுக்கிய மன்னன் ஆகவமல்லன் அவன் புதல்வர்கள் விக்கிரமாதித்தன், விசயாதித்தன் ஆகியோரை வெற்றி கொண்டு அவர்களுடைய தலைநகரமான கொள்ளிப் பாக்கையை எரித்தான் என மெய்க்கீர்த்தியில் குறிக்கப் படுகின்றான்

கி. பி. 1054ஆம் ஆண்டு தன் தம்பி இரண்டாம் இராசேந்திரனோடு மேலை சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்தான். அப்போர் கிருஷ்ணையாற்றின் கரையில் உள்ள கொப்பத்தில் நடைபெற்றது. சாளுக்கிய படைகள் ஒன்றாகத் திரண்டு யானை மீது அமர்ந்திருந்த இராசாதிராசனைத் தாக்கியது, அதில் யானையும் இராசாதிராசனும் பகைவரின் அம்புக்கு இலக்காகி விண்ணுலகை எய்தினான். இதனால் இம்மன்னன் கல்யாணபுரமும், கொல்லாபுரமும் எறிந்து யானைமேற்றுஞ்சின உடையார் விஜயராஜேந்திரதேவர் எனக் கல்வெட்டுக்களில் குறிக்கப்படுகின்றான். இம்மன்னர் காலத்தில் மயிலாடுதுறைக்கு அருகில் கழுக்காணிமுட்டம்

கோயிலுக்கு வழங்கப்பட்ட செப்பேடு ஒன்று கிடைத்துள்ளது. அது 86 ஏடுகளைக் கொண்டதாகும். அதில் சோழர்கள் கம்பவர்மன் என்ற பல்லவனிடமிருந்து நாட்டை வெற்றிகொண்டனர் எனக் கூறுகிறது. இச்செப்பேடு இந்தளூர் செப்பேடு என அழைக்கப்படுகிறது.

**இரண்டாம் இராசேந்திரன் (கி. பி. 1051-1063)**

முதலாம் இராசேந்திரனின் இரண்டாம் மகன். இவன் தம்முடைய சகோதரன் முதல் ராசாதிராசனுடன் கொப்பம் போரில் ஈடுபட்டவன். இராசாதிராசன் போர்க்களத்தில் வீரமரணம் அடைந்தவுடன் அப்போரினைத் திறம்பட எதிர்கொண்டு வெற்றியை நிலைநாட்டினான். தோற்றோடிய ஆகவமல்லன் மீண்டும் இம்மன்னனை முடக்காற்றுப் போரில் சந்தித்தான். அதிலும் அவன் தோல்வி கண்டான். அப்போரில் இரண்டாம் இராசேந்திரன் தம் தம்பியர்களான இராச மகேந்திரன், வீரராசேந்திரன் ஆகியோரும் ஈடுபட்டனர். இவன் காலத்தில் தஞ்சை இராசராசேச்சுவரமுடையார் கோயிலில் இராசராசேச்சரம் என்ற நாடகம் நடிக்கப் பெற்றுள்ளது. இம்மன்னன் கி. பி. 1063இல் இறந்தான்.

**இராசமகேந்திரன் (கி. பி. 1063)**

இவனும் முதலாம் இராசேந்தினின் மகனாக அறிஞர்கள் கருதுகின்றனர். இரண்டாம் இராசேந்தினால் சோழ பாண்டியன் என்ற பட்டம் வழங்கப்பெற்றுப் பாண்டிய நாட்டின் பிரதிநிதியாக விளங்கினான். இவன் மும்முடிச் சோழன் என்றும் பின்னாளில் சோழநாட்டில் இளவரசு பட்டம் பெற்ற போது இராசமகேந்திரன் என்னும் பெயரினைக் கொண்டுள்ளான்.

திருவரங்கநாதருக்கு பொன்னாலும், மணியாலும் பாம்பு படுக்கையொன்று செய்து [illegible]டுத்துள்ளான். அக்கோயில்

பிரகாரத்திற்கு இராசமகேந்திர திருவீதி என்ற பெயரும் வழங்கியதாகக் கோயிலொழுகு என்ற நூல் குறிப்பிடுகின்றது.

தருமநெறி நிற்ப மனுநெறி நடத்திய கோவிராஜ கேசரிவர்மரான உடையார் ஸ்ரீ இராசமகேந்திதேவர் என்று கல்வெட்டுகளில் குறிக்கப்படுகிறான். இவன் இளவரசனாக இருந்தபோதே இறைவனடி சேர்ந்தான் என அறிஞர்கள் கருதுகின்றனர்.

**வீரராசேந்திர சோழன் (கி. பி. 1063-1070)**

முதலாம் இராசேந்திர சோழனின் மூன்றாம் மகனாவான். இவன் ஈழத்தின் மீது படையெடுத்து வெற்றி கொண்டார். ஆகவமல்லனுடன் கூடல் சங்கமம் என்ற இடத்தில் போரிட்டு வெற்றிபெற்றதோடு தன்னிடம் அடைக்கலம் புகுந்த கடாரத்தரசனுக்கு உதவிபுரிந்துள்ளான். கி. பி. 1070ஆம் ஆண்டில் இறந்தான்.

**அதிராசேந்திரன் (கி. பி. 1067-1070)**

இம்மன்னன் வீரராசேந்திரனின் மகனாவான். "வீரமும் தியாகமும் ஆரமெனப் புனைந்து மங்காப்புகழ் மனுவுடன் வளர்த்த கோப்பரகேசரி வர்மரான உடைய ஸ்ரீ அதி ராசேந்திரன்" என மெய்க்கீர்த்தியில் குறிக்கப்படுகின்றான். இம்மன்னனின் கல்வெட்டுகள் செங்கற்பட்டு, வடஆற்காடு, தென்னாற்காடு, தஞ்சாவூர், ஈழ மண்டலம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ளது.

திருவாரூர் மாவட்டம் கூகூரில் காணும் கல்வெட்டில் அதிராசேந்திரன் தமது மூன்றாம் ஆட்சி ஆண்டான கி. பி. 1070இல் கொடிய நோய் கண்டு துன்புற்றான் எனவும், இவனுடைய உடல்நலம் வேண்டி அக்கோயில் இறைவன் முன்பாக நாள்தோறும் இருமுறை தேவாரப்பாக்கள்

ஓதப்பட்டு வந்துள்ளதை குறிக்கின்றது. இம்மன்னனின் மூன்றாம் ஆட்சி ஆண்டுக்குப்பின் கல்வெட்டுகள் காணக் கிடைக்காமையால் கி. பி. 1070இல் உடல் நலம் தேறா மலேயே உயிர்துறந்திருக்க வேண்டும் என வரலாற்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

கி. பி. 850இல் விஜயாலய சோழனால் தோற்றுவிக்கப்பட்ட பிற்காலச் சோழர் மரபானது அதிராசேந்திரனுடன் முடிவுற்றது.

**சாளுக்கிய சோழர்கள் (சோழர்கால பெண்வழி வந்தவர்கள்)**

அதிராசேந்திரனுடன் ஆண் வாரிசு இல்லாமல் சோழர்குலம் முடிவுற்றது. இருப்பினினும் சோழ நாட்டினை ஆட்சி செயய அம்மரபிற்குப் பெண் வழியில் வந்த வாரிசை நியமித்தனர். அவர்கள் தங்களுடைய தந்தை வழியான சாளுக்கிய மரபை விட்டு சோழன் என்ற மரபைத் தாங்கி சோழன் என்ற பெயரிலேயே சோழநாட்டை ஆட்சி செய்தனர். அவ்வாறு முதன் முதலில் வேங்கி சோழனாக சோழநாட்டை ஆட்சி செய்தவன் முதலாம் குலோத்துங்கன் என்பவன். அவருடைய பிறப்பு பற்றிய செய்திகள் வீர சோழனின் செல்லூர் செப்பேட்டினால் அறியமுடிகின்றது.

**குலோத்துங்க சோழன் (கி. பி. 1070-1120)**

> தத்தனயோ நயஸாலீ ஜயலக்ஷ்மீதா$^4$மராஜராஜ-நரேந்த்$^3$ர
> சத்வாரிம்ஸதம் அப்$^3$தா$^3$னேகம் ச புனர்ம் மஹிம் அபாலயத்
> அக$^2$லாம்
>
> (வீ. சோ. செல்லூர் செப்பேடு சுலோகம்-6)

விமலாதித்தன் மகனான இராசராச நரேந்திரன் நாற்பத்தோரு வருடங்கள் பூமியைக் காத்தான். அவன் சிறந்த நீதிமான் ஜெயலட்சுமியின் இருப்பிடம் என்கின்றது செல்லூர் செப்பேடு.

தஸ்யாஸூதபகல் மஷா ஸ்ுசரிதைரம் மங்க-நாம்னா பு4வி
ப்ரக்2யாதா ஸூபா4-லக்ஷணைக-வஸ்தி:தே3வீ ஜக3த்-பாவனீ
யாம் ஜவற்னோரிவ ஜாஹ்னவீ ஹிமவதோ கௌ3ரீவ லக்ஷ்மிரிவ
க்ஷூரோதா3த்3தி3வஸேஸ-வம்ஸ-திலகாத்3 ராஜேந்த்ர3-சோட3த3பூ4த்
(வீ. சோ. செல்லூர்ச் செப்பேடு சுலோகம்-8)

இராசராச நரேந்திரனின் தேவி அம்மங்கா என்ற பெயருடையவர். அவள் குற்றமற்றவள் தன்னுடைய சிறந்த நடத்தையால் பூமியில் புகழ்பெற்றவர். சுபமான இலக்கணங்களின் வாழிடம். உலகையே புனிதம் செய்பவள். அவள் சூரிய வம்சத்தின் திலகமான இராசேந்திர சோழனிடமிருந்து தோன்றியவள்.

புத்ர:தயே:அப4வத் அப்ரதிகா4த-ஸக்தி-நிஸ்ஸேஷிதாரி-நிவவேஹா
மஹனீயகீர்த்தி :
க3ங்கா3த4 ராத்3ரி-ஸூதயோரிவ கார்த்திகேயோ ராஜேந்த்3ரசோட3இதி
ராஜகுல-ப்ரதீ3ப:
(வீ. சோ. செல்லூர்ச் செப்பேடு சுலோகம்-8)

இராசராச நரேந்திரன் அம்மங்கா ஆகியோருக்கு மகனாக இராசேந்திர சோழன் தோன்றினான், அவன் தடுக்க இயலாத ஆற்றலுடையவன். எதிரிகளை அழித்தவன். பெரும் புகழுடையவன். அவனுடைய தோற்றம் கங்கையைத் தரித்த சிவபெருமானுக்கும் மலைமகளுக்கும் கார்த்திகேயன் பிறந்ததைப் போலிருந்தது என்று செல்லூர்ச் செப்பேடு கூறுகிறது.

போ4கீ3ஸாபீ4ல-பாக-ப்ரதிப4ய-பு4ஜ-நிர்ப்3ப4த் ஸனாத்யந்த
பி3ப்4யன்-நானா-பூ4பால--லோகதப்ரஹித-ப3ஹீ-விதா4னர்க்3க்4ய
ரத்னாபி4ராமம்
தாத்தே மௌலிம் பரார்த்3த்4 யோ மஹதி ந்ருபகுலேய :
குலோத்துங்க3தே3வோ
தே3வேந்த்3ரத்வாத3னூனே ஸூரபதி-மஹிமா சோட3ராஜ்யேபி4ஷிக்த
(வீ. சோ. செல்லூர்ச் செப்பேடு சுலோகம்-11)

குலோத்துங்கதேவன் சோழநாட்டின் அபிடேகிக்கப் பெற்றான். அந்தச் சோழநாடு தேவருலகிற்கு எவ்விதத்திலும் குறைவற்றது. பெரும் அரச பரம்பரையைக் கொண்டது. குலோத்துங்கன் இந்திரனுக்குச் சமமான மகிமை உடையவன். அவனுடைய தோள்கள் பாம்புகளுக்குத் தலைவனின் உடலைப் போலப் பயங்கரமானவை. அவற்றைக் கண்டு மிகவும் அஞ்சிய பல அரசர்களும் இரத்தினங்களை அனுப்பி வைத்தனர். விலை மதிப்பற்ற அந்த இரத்தினங் களால் அவனுடைய தோள்கள் அழகாகத் திகழ்ந்தான். பெரு வீரனான அவன் தற்போது மணிமுடியைத் தரித்துள்ளான்.

உத்3யச்-சண்ட3தர-ப்ரதாப-த3ஹன-ப்லுஷ்டாகி2ல-த்3வேஷினா
ஸர்வ்வான் கேரல-பாண்ட்$^{3}$ய-குந்தல-முகா$^{2}$னநிர்ஜ்ஜித்ய தோஷம்க்
க்ரமாத்
அஞ்ஞா மௌலீஷ் பூ$^{4}$ப்$^{4}$ருதாம் ப$^{4}$ய-ருஜாசித்தேஷீ துர்ம்மேத$^{4}$ஸாம்
கீர்த்திர்தி$^{3}$க்ஷீ ஸீதா$^{4}$ம் ஸீ-தா$^{4}$-ம-தா$^{4}$ வலா யேனார்ப் பிதா
உஜ்ஜரும்ப$^{4}$தே
(வீ. சோ. செல்லூர்ச் செப்பேடு சுலோகம்-10)

இராஜேந்திர சோழன் (முதற்குலோத்துங்கன்) உயரும் பயங்கரமான வலிமை என்னும் தீயினால் எல்லா எதிரி களையும் எரித்தவன். அவன் கேரள, பாண்டிய, குந்தளர்கள் முதலான எல்லோரையும் வென்றான். அவர்களிடத்தில் முறையே திருமுடியில் ஆணையையும், தீய அறிவாளரின் மனங்களில் பயமென்னும் நோயையும் திசைகளில் சந்திரனைப் போன்று வெளுத்த புகழையும் பரப்பினான் என்கின்றது செல்லூர்ச் செப்பேடு.

சேலைத் துரந்து சிலையைத் தடிந்திருகால்
சாலைக் களமறுத்த தண்டினான்-மேலைக் (கண்ணி-24)

பாண்டியர்க்குரிய மீன் கொடியும், சேரருக்குரிய விற்கொடியையும் அழித்தான். திருவனந்தபுரத்தில் உள்ள காந்தளூர்ச்சாலை துறைமுகத்தில் மரக்கலத்தினை அழித்த

பெரிய படைக்கடலைக் கொண்டவன் என்கின்றது விக்கிரம சோழன் உலா.

முதற்குலோத்துங்கனுக்கும், மதுராந்தகிக்கும் ஆண் மக்கள் எழுவர் இருந்தனர். மதுராந்தகி மக்களுள் இராசராசசோழகங்கன், இராசராச மும்முடிச்சோழன், வீரசோழன், விக்கிரமசோழன் ஆகிய நால்வரைத் தவிர மூவர் யாரெனத் தெரியவில்லை.

**விக்கிரம சோழன் (கி. பி. 1118-1136)**

முதற்குலோத்துங்கனின் நான்காம் மகனாகிய விக்கிரம சோழன் கி. பி. 1093ஆம் ஆண்டில் வேங்கி நாட்டிற்கு அரச பிரதிநிதியாக அனுப்பப்பட்டான். இவன் கி.பி. 1118 வரையில் அந்நாட்டின் பிரதிநிதியாக இருந்து ஆட்சி புரிந்தான். குலோத்துங்கனின் முதுமை காரணமாக விக்கிரமசோழனை வேங்கி நாட்டிலிருந்து கி. பி. 1118ஆம் ஆண்டில் தன் தலைநகராகிய கங்கைகொண்ட சோழ புரத்திற்கு வருவித்து இளவரசுப் பட்டங் கட்டினான். பரகேசரி என்ற பட்டத்தினைத் தாங்கி ஆட்சிபுரிந்தான்.

**தலைநகர்**

விக்கிரம சோழன் காலத்திலும் கங்கைகொண்ட சோழபுரமே தலைநகராகும். இருப்பினும் முடிகொண்ட சோழபுரம் எனப்பட்ட பழையாறை இரண்டாம் தலை நகராக விளங்கியது. தில்லை மாநகர் (சிதம்பரம்), காட்டுமன்னார் கோயில் போன்ற இடங்களில் அரண் மனைகள் இருந்தன.

**மெய்க்கீர்த்திகள்**

இம்மன்னனுடைய வெற்றி செய்திகளைக் கூறும் மெய்க்கீர்த்தி இரண்டு உள்ளன. அவற்றுள் "பூமாலை மிடைந்து" என்பது அதிக வரிகளைக் கொண்டதாகும். "பூமாது புணர" என்பது குறைந்த வரிகளைக் கொண்டதாகும்.

**ஆட்சியும், அறக்கொடையும்**

இம்மன்னனின் ஆறாம் ஆட்சி ஆண்டான கி. பி. 1125இல் தொண்டைநாடு, நடுநாடு ஆகியவற்றில் பெருவெள்ளப்பெருக்கு உருவாகி பஞ்சம் நிலவியது எனத் திருவோத்தூர், திருவதிகை கல்வெட்டுகள் கூறுகின்றன.

இவன் கி. பி. 1128ஆம் ஆண்டில் தில்லைச் சிற்றம் பலத்தைச் சூழ்ந்த திருச்சுற்று மாளிகை, கோபுரவாயில், கூடச்சாலை, பலிபீடம் ஆகியவற்றிற்குப் பொன் வேய்ந் துள்ளான். தன் பிறந்த நாளான உத்திரட்டாதி நாளில் நடைபெறும் பெருவிழாவில் இறைவன் எழுந்தருளும் திருத்தேரையும் பொன் வேய்ந்து அதற்கு முத்து வடங்கள் அளித்துத் திருப்பணிகள் செய்துள்ளான். இவன் காலத்தில் போர்கள் இன்மையால் தன் நாட்டை நேரில் சென்று மக்களுக்கு நல்லாட்சி வழங்கினான்.

**விக்கிரமசோழன் பெயரில் மாளிகை வீதி**

தில்லைச் சிற்றம்பலத்தைச் சூழ்ந்துள்ள முதல் திருச்சுற்று மாளிகைக்கு விக்கிரம சோழன் மாளிகை என்பதாகும். இவ்வூரில் விக்கிரமசோழன் தெங்குத் திருவீதி ஒன்று இருந்துள்ளதாகக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் நூற்றுக்கால் மண்டபத்தில் பன்னிரண்டு தூண்களில் விக்கிரம சோழன் திருமண்டபம் என்று பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீரங்கத்தில் ஐந்தாம் மதிலும் இராமன் கோயிலும் இம்மன்னனால் கட்டப்பட்டது என கோயிலொழுகு கூறுகின்றது.

**சிறப்புப் பெயர்கள்**

தியாக சமுத்திரம், அகளங்கன் என்று சிறப்புப் பெயர்கள் வழங்கி வந்தன (EP. Ind. Vol. VI, No.21/ Ibid Vol. VI PP 228 and 241) என்பதைக் குறிக்கின்றது.

**விக்கிரமசோழன் மனைவியரும், மக்களும்**

முக்கோக்கிழானடி, தியாகபதாகை, நேரியன்மா தேவியார் என மூன்று மனைவியர் இருந்துள்ளனர். அவர்களில் முக்கோக்கிழானடி இறந்தபின் தியாக பதாகை பெருந்தேவியாக விளங்கினாள்.

சங்கரனின் மனைவியாக உமையைப்போல் முக்கோக் கிழானடியும், கங்கை போன்று தெரிவையர் திலதம் தியாக பதாகையும், திருமாலின் மார்பைவிட்டு அகலாத திருமகள் போல புனித குணவனிதை திருபுவன முழுதுடையாளும் (நேரியன் மாதேவி) விளங்கினர்.

**விக்கிரமசோழனின் அரசியல் தலைவர்கள்**

கலிங்கம் வென்ற கருணாகரத் தொண்டைமான், முனையர்கோன், சோழகோன், மறையோன், கண்ணன், வாணன், கலிங்கர்கோன், செஞ்சியர்கோன், காடவன், வேணாடர், வேந்து, அனந்தபாலன், வந்தவன், சேதித்திரு நாடர், சேவகன், காராணை காவலன், அதிகன், வல்லவன், திரிகர்த்தனன் என இவர்களே உலாக்களில் அரசியல் தலைவர்களாகக் குறிக்கப்பட்டுள்ளனர். தேவருடையான் மனதுக்கினியான் ஆகிய வீராடராசன், திருச்சிற்றம்பலவன், மானசேகரன், சூரைநாயகன் மாதவராயன், கருணாகரன், சுந்தரத்தோளுடையான் என்கின்ற வளவன் பல்லவரையன், அம்மையப்பன் இராசேந்திர சோழ சம்புவராயன், கந்தன் கங்கை கொண்டானாகிய துவராபதி வேளான். மகா மண்டலேசுவரன் பெத்தராசன், மகா மண்டலேசுவரன் விமலாதித்தன் ஆகிய மதுராந்தகப் பொத்தப்பிச் சோழன், கன்னரதேவனாகிய இராசேந்திர சோழ பொத்தப்பிச் சோழன், மகா மண்டேலேசுவரன் நம்பயன், மகா மண்டலே சுவரன் கட்டிதேவ மகாராசனாகிய விக்கிரம சோழ கருப்பாறுடையான், இராசேந்திரன் சோழன் காங்கேய ராயன் என்பவர்கள் கல்வெட்டில் காணப்படுகின்றனர்.

**விக்கிரமசோழனின் இறுதிக் காலம்**

இவ்வரசன் கி. பி. 1118ஆம் ஆண்டு இளவரசுப் பட்ட மேற்று சுமார் 17 ஆண்டுகள் சிறப்புடன் ஆட்சி செய்து தம் நாட்டின் பல பகுதிகளுக்கு நேரில் சென்று வந்தான். கி.பி. 1133இல் தம் புதல்வனான இரண்டாம் குலோத்துங்க சோழனுக்கு இராஜகேசரி என்ற பட்டத்துடன் சோழ நாட்டின் பேரரசன் ஆக்கினான்.

## *விக்கிரமசோழனுக்குப் பின் ஆட்சி செய்த சோழர்கள்*

**இரண்டாம் குலோத்துங்க சோழன் (கி. பி. 1133-1150)**

விக்கிரமசோழனின் மகன் தில்லை நடராஜர் திருக் கோயிலின் திருச்சிற்றம்பலத்தை பலவகை மணிகளாலும், பொன்னாலும் அலங்கரித்தவன். இவன் காலத்திலும் ஒட்டக்கூத்தர் அவைக்களப் புலவராக விளங்கினார். இம் மன்னர் பெயரிலும் குலோத்துங்க சோழன் உலா என்ற நூலை இயற்றியுள்ளார். தம் ஆட்சிக் காலத்தில் நாடெங்கும் அமைதி நிலவச் செங்கோல் செலுத்தி ஆட்சிபுரிந்தான்.

**இரண்டாம் இராசராச சோழன் (கி. பி. 1146-1163)**

இரண்டாம் குலோத்துங்கனின் மகனாவான். இவன் காலத்தில் கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்த தலைநகரைப் பழையாறை நகருக்கு மாற்றினார். பழையாறைக்கு அருகில் இராசராசபுரம் என்னும் ஊரில் இராசராசேச்சரம் என்ற சிவாலயத்தினை எடுப்பித்தான். அது தற்பொழுது தாராசுரம் என்றழைக்கப்படுகிறது. இக்கோயில் 63 நாயன்மார்கள் கதைகள் குறிக்கப்பட்டுள்ளது. ஒட்டக்கூத்தரால் இம்மன்னனின் பெயரில் உலா இயற்றப் பட்டது. இம்மன்னன் இருமொழி புலமை பெற்றவன்.

இவன் காலத்தில் காவிரியாற்றில் ஏற்பட்ட நீர் அடைப்பிற்குக் காரணமான மலையை வெட்டித் தண்ணீர் கொண்டுவந்தார் என இலக்கியத்தில் குறிக்கப்படுகிறது.

**இரண்டாம் இராசாதிராஜ சோழன் (கி. பி. 1163-1178)**

இரண்டாம் இராசராசனுக்கு குழந்தை மிக சிறு வயதினில் இருந்தமையால் விக்கிரம சோழனின் பெண் வழியில் வந்த பெயரனான எதிரிலிப் பெருமாள் என்பவன் இராசாதிராசன் என்ற பெயரில் சோழ பட்டத்து அரசராக்கப் பட்டான். இவன் நெறியுடைப்பெருமாள் என்பவரின் மகனாவான். இவ்வேந்தருக்கு இராசாதிராச தேவராகிய கரிகாலச்சோழர்ன் தேவன் என்ற பெயரும் வழங்கியுள்ளது. மதுரை மீதும், ஈழத்து மீதும் இவருடைய படை வெற்றி பெற்றுள்ளதன் காரணமாக மதுரையும், ஈழமும் கொண்ட இராசகேசரிவர்மன் என்றும் வழங்கப்பட்டான்.

**மூன்றாம் குலோத்துங்க சோழன் (கி. பி. 1178-1218)**

இரண்டாம் இராசாதிராசனுக்கு பிறகு மூன்றாம் குலோத்துங்கன் சோழ நாட்டில் அரசராக முடிசூட்டப் பட்டான். ஈழப்போர், கொங்குநாட்டுப்போர், வடபுலத்து மன்னர்களுடனும் போர் புரிந்துள்ளான். இவன் காலத்தில் பாண்டிய நாட்டின் மீது மூன்று முறை போர் தொடுக்கப் பட்டுள்ளது. இம்மன்னனுக்குத் திரிபுவன வீரதேவர் என்ற பெயரும் விளங்கியுள்ளதைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன. திருவிடைமருதூருக்கு அருகாமையில் திரிபுவன வீரேச்சரம் என்ற சிவாலயத்தினை எழுப்பினான். இவ்வூர் தற்பொழுது திருபுவனம் என்று அழைக்கப்படுகின்றது. மேலும் இவ் அரசன் திருவாரூரில் சபா மண்டபமும், பெரியகோபுரமும் கட்டுவித்தான். தில்லை பேரம்பலத்திற்குப் பொன் வேய்ந்த அனபாயர் என சேக்கிழாரடிகளால் போற்றப்படுகின்றான்.

**மூன்றாம் இராசராச சோழன் (கி. பி. 1216-1256)**

இம்மன்னன் மூன்றாம் குலோத்துங்க சோழருக்குப் பின் சோழநாட்டில் அரியணையேறினான். இவன் காலத்தே வடக்கே ஒய்சாளர்களும், தெற்கே பாண்டியர்களும் வலிமை பெற்றுச் சோழப் பேரரசைச் சிதைக்கலாயினர்.

மூன்றாம் குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் படையெடுப்பின் பாதிப்பிற்காகப் பழிவாங்க மாறவர்மன் சுந்தர பாண்டியன் சோழ நாட்டின் மீது கி. பி. 1219இல் முதற் படையெடுப்பைத் தொடங்கினான். இப்படையெடுப்பில் சோழனின் பழைமையான தலைநகரங்களான தஞ்சாவூர், உறையூர் ஆகியவை தீயூட்டி எரிக்கப்பட்டன. பல மாட மாளிகைகளும், கூடகோபுரங்களும், ஆடலரங்கங்களும், மணிமண்டபங்களும் இடிக்கப்பட்டு, நீர் நிலைகள் அழிக்கப்பட்ன. பட்டினப்பாலை பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற புலவருக்கு வழங்கப்பட்ட பதினாறுகால் மண்டபம் ஒன்றுமட்டுந்தான் இடிக்கப் படாமல் விடப்பட்டது என்றும், பாண்டியர் படையெடுப்பைப் பற்றிய திருவெள்ளறை பாடல் கல்வெட்டால் அறியமுடிகின்றது. இக்கல்வெட்டு சுந்தரபாண்டியன் சோழநாட்டின் மீது படையெடுத்து வெற்றி பெற்றதைக் குறிப்பிடுவதாகும். வெற்றி வாகை கொண்ட பாண்டிய மன்னன் சோழரது அரண்மனையான ஆயிரத்தளியில் அபிஷேக மண்டபத்தில் வீராபிஷேகம் செய்து கொண்டான். தோல்வியுற்ற சோழ மன்னன் மூன்றாம் இராசராசனைப் பொன்னமராவதிக்கு அழைத்துத் தமக்குக் கப்பம் கட்டிக் கொண்டு சோழநாட்டை ஆட்சிபுரியுமாறு சுந்தர பாண்டியன் ஆணையிட்டான்.

**பாண்டியன் - சோழன் இரண்டாம் போர்**

இப்போரில் தோல்வியுற்ற சோழ மன்னன் உதவி கேட்டுக் குந்தள அரசனிடம் செல்லும்போது காடவர்கோன்

கோப்பெருஞ்சிங்கன் என்ற பல்லவ சிற்றரசனால் கைது செய்யப்பட்டு சேந்தமங்கலத்தில் சிறை வைக்கப்பட்டான். இதனை அறிந்த ஒய்சாள மரபைச் சேர்ந்த வீரநரசிம்மன் என்ற மன்னன் சோழரைச் சிறை மீட்டார். அவர் சோழருக்காகப் பாண்டியருடன் போர்புரிந்து சோழநாட்டினை மீட்டு மூன்றாம் இராசராசன் வசம் ஒப்படைத்தார். இப்போருக்கு பிறகு ஒய்சாளர் தங்களைச் சோழ மண்டல பிரதிஷ்டா சாரியன் என்று கூறிக்கொண்டனர்.

**மூன்றாம் இராசேந்திர சோழன் (கி. பி. 1246-1279)**

மூன்றாம் இராசராசனின் மகனான இவனுடைய காலத்தில் சிற்றரசர்களின் தலையெடுப்புகள் அதிகமாயின. இவன் தந்தையின் காலத்தில் சோழ மரபினருக்கு உதவி புரிந்த ஒய்சாள அரசர்கள் பாண்டியர்களுக்கு உதவி புரியலாயினர். இதன் காரணமாக இம்மன்னன் (பாண்டிய நாட்டினை) தம்முடைய ஆட்சியின் கீழ் இருந்ததை இழந்தார். தெலுங்கு சோழர்களின் அரசனான கண்ட கோபாலன் என்பவர் இச்சோழ அரசருக்குப் பலவாறு உதவிபுரிந்து சோழ நாட்டினைச் சுற்றி இருந்த சிற்றரசர்களிடமிருந்து காத்து நின்றார். ஒய்சாள அரசனான வீரசோமேஸ்வரர் என்பவரும் அவர் மகன் வீரராமநாதனும் மீண்டும் சோழ அரசருக்கு நட்புறவாயினர். இருந்த போதிலும் முதல் சடையவர்ம சுந்தரபாண்டியன் கி. பி. 1257இல் சோழநாட்டின் மீது படையெடுத்து மூன்றாம் இராசேந்திரனை வென்று தனக்குக் கப்பம் செலுத்தும் சிற்றரசராக செய்துவிட்டார்.

பாண்டிய மன்னரால் ஒய்சாள வீரசோமேஸ்வரர், கண்டகோபாலர் ஆகியோர் கொல்லப்பட்டனர். அதனைக் கண்ட கோப்பெருஞ்சிங்கன் பாண்டியருக்குக் கப்பஞ் செலுத்தி தம்முடைய ஆட்சிப் பகுதியை நிலைநிறுத்திக் கொண்டான். இதனால் சுந்தரபாண்டியன் எந்த தடையு

மின்றி வடக்கே கிருஷ்ணா முதல் தெற்கே குமரி வரை தம்முடைய ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்திக்கொண்டான்.

**சோழ மரபின் முடிவு**

மூன்றாம் இராசேந்திரனுக்குப் பிறகு சோழ நாட்டில் பட்டமேற்கும் அளவில் புதல்வர்கள் இல்லை. ஆகையால் கி. பி. 1279ஆம் ஆண்டுக்குப் பின்னர் சோழப் பேரரசு வாரிசு இன்றி முடிவுற்றது.

சோழர்களின் பெருமையை இன்று பறைசாற்றிக் கொண்டிருப்பது அரசவைக் கவிஞராக விளங்கிய ஒட்டக் கூத்தர் இயற்றிய உலா நூல்களாகும்.

**விக்கிரம சோழன் உலா சுவடி விபரம்**

சரஸ்வதி மகால் நூலகத்தில் விக்கிரமசோழன் உலா என்ற பெயரில் இரண்டு சுவடிகள் உள்ளன. அவற்றில் ஆசிரியர் குறிப்புகள் இல்லாமல் மூலம் மட்டுமே உள்ளன. அவை சுவடி எண். 1890இல் சொக்கநாதர் சுவாமி திருவிளை யாடல் என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ளன. சுவடியில் ஏட்டு எண்கள் 207-218 வரை 12 ஏடுகள் காணப்படு கின்றது. மற்றொரு சுவடி எண். 194இல் காணப்படுகின்றது. இச்சுவடியில் ஏடுகள் படிக்க இயலாவண்ணம் பழுதடைந்துள்ளது.

அத்திமுகத்துத்த.............நினைசித்தமேல்
தவளத்தாமரை தாதார் கோயில்–அவனைப்
போற்றுங் அருந்தமி ழாறிந்தே

எனத்தொடங்குகின்றது. இச்சுவடிகளில் காணும் கண்ணி களையும், அச்சுப் பிரதிகளில் வந்துள்ள கண்ணிகளையும் ஒப்பிட்டு ஆய்வு செய்தபோது பல பாட பேதங்களும் சில கண்ணிகள் சரஸ்வதி மகால் சுவடியில் விடுபட்டுள்ளதும் காணமுடிந்தது..

எடுத்துக்காட்டு

அச்சுப்பிரதியில் கீழ்கண்ட கண்ணிகளை

" வெஞ்சமத்துப்
புல்லாத மன்னர் புலாலுடம்பைப் பேய் வாங்க
ஒல்லாத கூற்றமுயிர் வாங்கப் - புல்லார்வம்
தாங்கும் மடமகளிர் தத்தங் குழைவாங்க
வாங்கும் வரிசைக்கை வாணனும் "

எனக் காணமுடிகின்றது. சுவடியில் காணமுடியவில்லை. இச்சுவடிப் பதிப்பில் ஆய்வாளர்கள், மாணவர்கள், வாசகர்கள், எளிதில் பாடவேறுபாடுகளைப் புரிந்து கொள்ளும் பொருட்டு அதற்கேற்ப அச்சு பிரதிகளில் காணப்படும் கண்ணிகளைக் குறிக்க [ ] பகர அடைப்புக் குறியீடும், சுவடியில் காணப்படும் கண்ணிகளைக் குறிக்க ( ) பிறைவடிவ அடைப்புக் குறியீடும் குறிக்கப்பட்டுள்ளது. மேலும் பாடபேதங்களுக்குச் சொற்களின் தலைப்பில் நட்சத்திர அடையாளம் கொடுத்து அதற்கு எண்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் எளிதில் பொருள் கொள்ளும் வகையில் பொருளுரை, அருஞ்சொற்பொருள் எனத் தனித்தனியே விளக்கப்பட்டுள்ளது.

முன்னுரையில் உலாவிற்கான விளக்கம், உலாவிற்கான வேறு பெயர்கள், உலாவிற்கான ஊர்திகள், அமைப்பு முறைகள், உலாவினைக் காணும் பெண்களின் இயல்பு நிலைகள், வளர்ச்சி நிலைகள் எனவும், சங்க, சமய, பிற்கால இலக்கியங்கள், ரகுவம்சம் ஆகியவற்றில் காணும் உலாவின் வளர்ச்சி நிலைகள் சிறுகுறிப்பாக விளக்கப்பட்டுள்ளது.

புலவரைப் பற்றிய குறிப்புகளும், பருவப்பெண்களின் வயது வளர்ச்சியைப் பற்றிய குறிப்புகளும் தொகுத்துரைக் கப்பட்டுள்ளது.

**ஆய்வு நோககில்**

உலாவில் காணும் சோழ அரசர்களின் மரபு பட்டிய லுடன் இதுகாறும் வெளிவந்துள்ள சோழர்களின் செப்பேடுகள் துணைகொண்டு வரலாற்று ஆய்வாளர்கள், மாணவர்கள், வாசகர்கள் பயன்பெறும் நோக்கில் ஒப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**நன்றியுரை**

இந்நூலினை பதிப்பிப்பதற்கு ஆணை வழங்கிய முன்னாள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் திரு. **டாக்டர் என்.சுப்பையன்,** இ.ஆ.ப., அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன். நூல்கள் மறைந்து வரும் இக்காலக்கட்டத்தில் அதன் முக்கியத்துவத்தினை அறிந்து நூல்களை வெளிக்கொண்டு வந்து மக்களுக்கு பயனைடையச் செய்யும் விதமாக வெளியிடும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் நூலக இயக்குநர் **ஆ. அண்ணாதுரை,** இ. ஆ. ப., அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இந்நூல் வெளிவர ஆவன செய்துள்ள சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் திருமதி **வீ. கிருஷ்ணவேணி,** B. A., அவர்களுக்கும், நூலகர் முனைவர் **எஸ். சுதர்ஷன்,** M. A., B.Lit. M.L.I.S. Ph.D அவர்களுக்கும், நூலகத் தமிழ்ப்பண்டிதர் திரு. **மணி. மாறன்,** M.A.,(T),M.A.,(H),B.L.I.S., Dip.,in Sanskrit. அவர்களுக்கும், இந்நூலை நன்கு அச்சிட்டுத் தந்த நூலக ஒளி அச்சுக்கோப்புப் பிரிவினருக்கும், நூலகப் பணியாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தில்லை கோவிந்தராஜன்,**

சிறப்புக்கேண்மைப் பதிப்பாசிரியர்

## சரசுவதி மகால் நூலக வெளியீடுகள்

| | |
|---|---|
| தமிழ் எண்ணும் எழுத்தும் | 100-00 |
| தமிழ் ஆய்வுக் கடடுரைகள்-1 | 110-00 |
| தமிழ் ஆய்வுக் கட்டுரைகள்-2 | 150-00 |
| சரபேந்திர பூபால குறவஞ்சி | 100-00 |
| தமிழறி மடந்தை கதை | 80-00 |
| அழகரந்தாதி | 100-00 |
| அறப்பளீசுர சதகம் | 150-00 |
| தமிழ் மருத்துவ முறைகள் | 100-00 |
| திருவேங்கடமாலை | 110-00 |
| திருக்கருவைப் பதிற்றுப்பத்தநதாதி | 100-00 |
| திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ் | 160-00 |
| தஞ்சாவூர் நாயக்கர் வரலாறு | 450-00 |
| தல வரலாற்று ஆய்வுக்கட்டுரைகள் | 180-00 |
| காலவிதான பத்ததி | 150-00 |
| காலப்பிரகாசிகை | 250-00 |
| பலதிரட்டு வைத்தியம் | 140-00 |
| வைத்திய பலதிரட்டு | 200-00 |
| அருணாசல புராணம் | 150-00 |
| மதுரைவீரன் அம்மானை | 120-00 |
| கர்ப்பிணி பால ரோக சிகிச்சை | 300-00 |
| சரநூல் | 200-00 |
| சிற்ப ரத்தினம் | 500-00 |
| நட்சத்திர சிந்தாமணி பாகம்-1 | 310-00 |
| நடசத்திர சிந்தாமணி பாகம்-2 | 200-00 |
| நடசத்திர சிந்தாமணி பாகம்-3 | 250-00 |
| வராகர் ஓரா சாத்திரம் | 500-00 |
| அகத்தியர் லோக மாரணம் | 150-00 |
| நீதித்திரட்டு | 600-00 |
| காலவிதான பத்ததி | 150-00 |
| கார்த்தவீர்யார்ஜுன-உபாஸ-பத்ததி | 100-00 |
| நீதி நூல் | 100-00 |

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள் அரிய பெரிய இலக்கியங்களையும், மருத்துவக் குறிப்புகளையும், இன்ன பிறவற்றையும் பனை ஓலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவை பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. அச்சுவடிகள் பழுதடைவதற்குள் சரசுவதி மகால் நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவை மக்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இந்நூலகத்திற்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதி மகால் நூலகம் உள்ளளவும் பெறுவர். அவை நூல் வடிவில் பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயர் இடம்பெறுவதோடு. அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம் என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகால் நூலகத்திற்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

**மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்**

**இயக்குநர்,**

**சரசுவதி மகால் நூலகம் மற்றும் ஆய்வு மையம்,**

**தஞ்சாவூர்.**

# விக்கிரம சோழனுலா

## திருமால் - பிரம்மா-காசிபன்-மரீசி-சூரியன்

சீர்தந்த தாமரையாள் கேள்வன் றிருவுருவக்
கார்தந்த வுந்திக் கமலத்துப்-பார்தந்த 1
ஆதிக் கட்வுட் டிசைமுகனு மாங்கவன்றன்
காதற் குலமைந்தன் காசிபனும்-மேதக்க 2
மையறு காட்சி மரீசியு மண்டிலஞ்
செய்ய தனியாழித் தேரோனும்-மையல் கூர் 3

*(இ-ள்.)* செல்வங்களை தருகின்ற திருமகளான மகாலெட்சுமியின் கணவரும் கரிய மேகத்தைப் போன்ற தோற்றம் கொண்ட திருமாலின் உந்திக் கமலத்தில் (தொப்புள் கொடியில்) தோன்றி இப்பூமியில் உயிர்களைப் படைத்திடும் பணியினைச் செய்து கொண்டிருக்கக் கூடியவரான நான்கு முகங்களைக் கொண்ட பிரம்மா. அவரின் அன்பு மகனாகத் தோன்றியவர் காசிபன் ஆவார். இக்காசிபனின் மகனாகப் பிறந்த மரீசி குற்றமில்லா நல்லறிவு வாய்க்கப்பெற்றவ ராவார். அவரை அடுத்து ஒரு தனிச் சக்கரத்தினை உடைய தேரில் உலகினையே வலம் வந்து ஆட்சி செய்ய கூடியவனான சூரியன் ஆவான்.

*சீர்தந்த தாமரையாள்-செல்வங்களைத் தருகின்ற திருமக ளான மகாலட்சுமி. கேள்வன்-கணவன் திருவுருவக் கார்தந்த-கரிய மேகத்தைப் போன்ற தோற்றத்தை உடைய திருமால். உந்திக் கமலத்து-தொப்புள் கொடியாகிய தாமரை. திசைமுகன்-பிரம்மா. காதற்குல மைந்தன்-அன்பு மகன். காசிபன்-பிரம்மாவின் மகன். மையறு-குற்றமில்லாத மரீசி-காசிபன் மகன். மண்டிலம்-வான் மண்டிலம். செய்ய-சிவந்த. தனியாழி-ஒற்றைச்சக்கரத்தையுடைய சூரியன்.*

## மனுநீதி - மாந்தாதா

சிந்தனை யாவிற்கு முற்றத் திருத்தேரில்
மைந்தனை யூர்ந்த மறவோனும்-பைந்தடத் 4

தாடு துறையி லடுபுலியும்-புல்வாயும்
கூடநீ ரூட்டிய கொற்றவனும் - நீடிய 5

*(இ-ள்.)* கன்றினை இழந்துவிட்டக் காரணத்தால் கவலை கொண்டு அரண்மனை வாயிலில் நின்ற தாய்ப் பசுவின் துன்பத்தினைப் போக்கவும், நீதியை நிலை நாட்டவும் தன்னுடைய ஒரே மகனான வீதிவிடங்கனை தன் தேர்க்காலிட்டுக் கொன்று நீதி வழங்கிய மனுநீதிச் சோழன். இவனை தொடர்ந்து வந்த மாந்தாதா என்கிற சோழனின் ஆட்சிக்காலத்தில் பசுமையான நீராடுந் துறையில் கொல்லுகின்றப் புலியையும் கண்டு அஞ்சாமல் மானும் நீருண்ணும்படி செய்த ஒப்பற்ற மன்னவ னாவான்.

*சிந்தனை-கவலை. ஆவிற்கு-பசு. ஊர்ந்த-சக்கரத்திலிட்டு. மறவோன்-மனுநீதி. ஆடுதுறையில்-நீராடுந்துறையில். புல்வாய்- மான். கொற்றவன்-மாந்தாதா.*

## முசுகுந்தன்

மாக விமானந் தனியூர்ந்த மன்னவனும்
போக (புவிபுரந்த)[1] பூபதியும்-(மாமத்துக்)[2] 6

கூறவரிய மனுக் கொணர்ந்து கூற்றுக்குத்
தேற (வளக்குரைத்த)[3] செம்பியனும்-மாறழிந் 7

*(இ-ள்.)* தெய்வ விமானத்தில் தான் மட்டும் ஏறி இந்திரலோகம் சென்றான் ஒரு சோழன். இவனுக்குப்

---

பாடபேதம்:- 1. புரிபுரந்த. 2. மாகத்துக். 3. வழக்குரைத்த.

பின்வந்த முசுகுந்தன் போகபுரி (இன்ப உலகம்) என்று கூறப்படும் தேவர்கள் வாழ்கின்ற தேவருலகத்தைக் காப்பாற்றியவன் முசுகுந்தன் என்ற சோழ மன்னன். தேவர் உலகத்தில் நடந்த யாகத்தின் போது யாரும் அறிந்திராத மந்திரத்தினை இயமனுக்குத் தெளிவாக எடுத்துரைத்து வழக்குரைத்தவன் செம்பியன் என்கின்ற கிள்ளிவளவன் ஆவான்.

*மகாவிமானம்-தெய்வ விமானம். தனியூர்ந்த-தான் மட்டும் ஏறிச் சென்ற. போகபுவி-நாகருலகம். இன்ப உலகம். பூபதி-சோழ அரசன் ஒருவன். மனு-மந்திரம். கூற்று-யமன். தேற-தெரியும்படி. செம்பியன்-கிள்ளிவளவன்.*

தோடி மறலி யொளிப்ப முதுமக்கட்
சாடி வகுத்த தராபதியும் - கூடார்தம் 8

தூங்கு மெயிலெறிந்து சோழனு மேல்கடலில்
வீங்குநீர் (கீழ்க்கடலில்)[4] விட்டோனும்-ஆங்குப் 9

பிலமதனிற் புக்குத்தன் பேரொளியானாகர்
குலமகளைக் கைப்பிடித்த கோவும் - உலகறியக் 10

*(இ-ள்.)* தன்னுடையப் பகைவனுக்கு அஞ்சி தன்னுடைய வேலையான மக்களின் உயிரினைக் கவர்தல் தொழிலினையும் செய்யாமல் ஓடி ஒளிந்து கொண்டான் இயமன். அப்பகைவர்களைக் கண்டு அஞ்சாமல் வென்று முதுமக்கட்சாடியுள் அடைத்து இயமனின் அச்சத்தைப் போக்கிய சுரகுரு என்னும் சோழ அரசன் தோன்றினான்.

வானத்தில் கட்டப்பட்ட தூங்கெயிலினை அழித்த சோழ மன்னன் தூங்கெயிலெறிந்த தொடித்தோள் செம்பியன் ஆவான்.

---

பாடபேதம்:- 4. கீழ்கடற்கு

கப்பல் போக்குவரத்திற்காக நடுவிலிருந்த நிலப் பகுதியை வெட்டி மேலைக்கடலினையும், கீழைக் கடலினையும் ஒன்றாக இணைத்துப் பெருமை கொண்டவன் சமுத்திரசித்தாவான்.

நாகலோகத்திற்குச் சென்று நாகக் கன்னியாகிய கந்திமதியை மணந்தவன் சூரவாதித்தச் சோழன் எனப் பட்ட நெடுமுடிக்கிள்ளி ஆவான்.

*மறலி-யமன். தராபதி-அரசன் சுரகுரு. தூங்கெயில்-ஆகாயத்தில் திரியும் மதில்கள். பிலம்-பாதாளவுலகம். கோ-நெடுமுடிகிள்ளி.*

காக்குஞ் (சிவபுறவுக்)[5] காகக் களிகூர்ந்து
தூக்குந் துலைபுக்க தூயோனும் -மேக்குயரக் 11

கொள்ளுங் குடகக் குவடூ டறுத்திழியத்
தள்ளுந் திரைப்பொன்னி தந்தோனும்-
தெள்ளருவிச் 12

*(இ-ள்.)* பருந்திடமிருந்துக் காத்த சிறுபுறாவுக்காக மகிழ்வுடன் தராசுத் தட்டில் ஏறி நின்றவனும். உலக முழுவதும் அறிந்த தூய எண்ணம் கொண்டவனான சிபிச் சக்கரவர்த்தியும், மிக உயர்ந்த மலையாகிய குடகு மலையைப் பிளந்து அலைமோதும் காவிரி நதியை உருவாக்கியவன் சிவூகனும் ஆவார்.

*களிகூர்ந்து-மகிழ்வுடன். தூக்குந்தலை-தராசு. மேக்குயர-மிக உயர்ந்த. குடகக்குவடு-குடகுமலையை. திரைப்பொன்னி-அலைகளை உடைய காவிரி. தந்தோன்-சீவுகன். தெள்ளருவி-தெளிந்த அருவிகளை யுடைய.*

---

பாடபேதம்:- 5. சிறுபுறவுக்

சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும்-(மின்னருளின்)[6] 13

மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப்
பாதத் தளைவிட (பார்த்திடனு)[7]-மீதெலாம். 14

*(இ-ள்.)* தெளிந்த அருவியையுடைய இமய மலையில் புலிக்கொடியைப் பொறித்து மேரு மலையைச் செண்டினால் அடித்து சமன்படுத்தி காவிரி ஆற்றுக்குக் கரைகட்டியவன் கரிகாலன்.

பொய்கையார் பாடியக் களவழி நாற்பது என்னும் நூலைப் பாடிட அதனைக் கருணையோடு ஏற்றுக் கொண்டு வில்லவன் (சேரமன்னன்) என்கின்ற கணைக்கால் இரும்பொறையின் கால் விலங்கு நீக்கி சிறையில் அடைத்தவன் கோச்செங்கண்ணான் என்னும் சோழ மன்னன்.

*சென்னி–சிகரத்தில். புலியேறு இருத்தி–புலிக்கொடியை நாட்டி. கரைகண்ட பூபதி–கரிகாலன். பொய்கைகவி–பொய்கையார். வில்லவனை–சேரமான் கணைக்காலிரும்பொறை. தளை– விலங்கு. பார்த்திபன்–கோச்செங்கண்ணான்.*

எண்கொண்ட தொண்ணூற்றின் (மேலும் இருமூன்று)[8]
புண்கொண்ட வென்றிப் புரவலனும்–கண்கொண்ட 15

கோதிலாத் தேறல் குனிக்குந் திருமன்றம்
காதலாற் பொன்வேய்ந்த காவலனும் - தூதற்காப் 16

*(இ-ள்.)* தன் உடல் எங்கும் தொண்ணூற்றாறு விழுப்புண்களைப் பெற்றுப் புகழ் கொண்டவன் விஜயாலயசோழன்.

---

பாடபேதம்:- 6. இன்னருளின். 7. பார்திவனம். 8. மேலுமிருமூன்று.

கண்டவர்களைக் கவறும் கொன்றை மாலை அணிந்த சிவனார் நடமாடு தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன்வேய்ந்தவன் முதற் பராந்தகச்சோழன் ஆவான்.

## முதலாம் இராசராசன்-முதலாம் இராசேந்திரன்

**பண்டு பகலொன்றி லீரொன் பதுசுரமும்**
**கொண்டு மலைநாடு கொண்டோனும்-(துண்டினார்)[9]** 17

**கங்கா நதியுங் கடாரமுங் (கைவரசி)[10]**
**சிங்கா தனத்திருந்த செம்பியனும்-வங்கத்தை** 18

*(இ-ள்.)* சோழத் தூதுவனின் மேலாடையைக் கழற்றி சிறைச் செய்தான் சேரமன்னன். இதனை அறிந்து ஒரே நாளில் பதினெட்டுப் பாலைவனங்களைக் கடந்து அச்சேரமன்னனை வெற்றிக்கொண்டு அந்நாட்டினைக் கைப்பற்றிக்கொண்டு தம் நாட்டுத் தூதுவனையும் மீட்டு வந்தான் முதலாம் இராசராசன்.

வலிமையான சேனைகளைக் கொண்டு கங்கை யினையும், கடாரத்தையும் கைப்பற்றிக் கங்கை கொண்ட சோழன் என்ற பெயரினையும் பெற்றான். முதலாம் இராசேந்திரன்.

## முதலாம் இராசாதிராசன்

**முற்று முரணடக்கி மும்மடி போய்க் கல்யாணி**
**செற்ற தனியாண்மைச் சேவகனும்-பற்றலரை** 19

**வெப்பத் தடுகளத்து வேழங்க ளாயிரமும்**
**கொப்பத் தொருகளிற்றாற் கொண்போனும்-அப்பழநூல்** 20

---

பாடபேதம்:- 9. தண்டேவிக். 10. கைக்கொண்டு.

*(இ-ள்.)* வங்காளத்தை வெற்றிகொண்டு மூன்று முறை சாளுக்கியர்களின் தலைநகரானக் கல்யாணபுரத்தை அழித்தவன் இராசாதிராசன். கொப்பம் என்ற ஊரில் தம்முடைய பட்டத்து யானை கொண்டுப் பகைவரின் ஆயிரம் யானைகளையும் வென்றவன்.

*முரணடக்கி-பகையை வென்று. மும்மடி போய்-மூன்று முறை சென்று. கல்யாணி-கல்யாணபுரம். சேவகன்-முதலாம் ராசாதிராசன். பற்றலரை-பகைவரை. வெப்பத்து-கோபத்தையுடைய. அடுகளத்து-போர்க்களத்து. வேழங்களாயிரமும்-ஆயிரம் யானை களை . கொப்பம்-கிருஷ்ணாநதிக் கரையில் உள்ள ஓர் ஊர். ஒரு களிற்றினால்-பட்டத்து யானையால். கொண்டோனும்-வெற்றி பெற்றவனும். அப்பழ நூல்-வேத நூல்கள்.*

## வீரராஜேந்திரன்-ராஜமகேந்திரன்

பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பண்மணியால்
ஆடரவப் பாயலமைத்தோனும்-(கூடலா)[11] 21

சங்கமத்துக் கொள்ளுந் தனிப்பரணிக் கெண்ணிறந்த
துங்கமத யானை துணித்தோனும் - (மங்கவன்பின்)[12] 22

*(இ-ள்.)* தென்னரங்கம் எனப்படும் திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் அரங்கநாதப் பெருமானுக்குப் பல்வகை மணிகளால் சேஷசயனம் எனப்படும் பாம்பு படுக்கையினை அமைத்து கொடுத்தவன் இராச மகேந்திரன்.

கூடல் சங்கமம் என்னும் ஊரில் பரணி என்னும் இலக்கணத்திற்கு இலக்கியம் தோன்றும்படியாக ஆயிரத் திற்கு மேற்பட்ட யானைகளை வெட்டி வீழ்த்தியவன் வீரராஜேந்திரன். இவனுக்குப் பின் சோழர்களின் பெருமை நிலைக்கும்படி பூமியைக் காத்தவன் அதி ராசேந்திர சோழன் ஆவான்.

---

11. கூடல். 12. அங்கவன்மின்

*பாடு அரவம்-ஓதப்படும் ஓசையையுடைய. தென்னரங்கமே யாற்கு-திருவரங்கமுடைய அரங்கநாதருக்கு. அரவப்பாயல்- பாம்புப் படுக்கை. அமைத்தோன்-இராஜமகேந்திரன். கூடல் சங்கமம் இது துங்கபத்திரையும், கிருஷ்ணா நதியும் இணையுமிடத்தில் உள்ள ஓர் ஊர். பரணி-பரணியென்னும் நூல். துங்கம்-உயர்வு. துணித்தோன்- வெட்டி வீழ்த்தியவன் (வீரராசேந்திரசோழன்) அவனிகாத்தவன்- உலகம் காத்தவன் (அதிராசேந்திரன்). பூவலயம்-உலகம். புரத்தல்- காத்தல். மேவலர்தம்-பகைவருடைய..*

## குலோத்துங்க சோழனின் சிறப்புகள்

சேலை துரந்து சிலையைத் தடித்திருகால்
சாலைக் களமறுத்த தண்டினான் - மேலைக் 24

கடல்கொண்டு கொங்கணமுங் கன்னடமுங் கைக்கொண்
டடல் கொண்ட மாராட் டரசை - உடலை 25

இறக்கி வடவரையே யெல்லையாத் தொல்லை
மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி-அறத்திகிரி 26

வாரிப் புவனம் வலமாக வந்தளிக்கும்
ஆரிற் பொலிதோ ளபயற்குப் - பார்விளங்கத் 27

*(இ-ள்.)* சேல் என்கின்ற பாண்டியனின் மீன் கொடியையும், சிலை என்கின்ற சேரனின் விற்கொடி யையும் அகற்றி இரண்டுமுறை காந்தளூர் சாலையில் நடைபெற்ற போரில் வலிமை மிக்க படையால் வெற்றி கொண்டான். மேலைக் கடலைத் (அரபிக்கடலை) தன் உரிமையாக்கிக் கொண்டு கொங்கணம் (மைசூர் வட மேற்குப் பகுதியும் அதன் வடக்கேயுள்ள கோவாப் பகுதி) கன்னடம் நாட்டையும் (கோலார், மைசூர்) கைப்பற்றி னான். வலிமை படைத்த மராட்டிய மன்னனையும்

கொன்று அவனுடைய நாட்டைக் கைப்பற்றி இமய மலையையே வட எல்லையாகக் கொண்டான். நாட்டு மக்களைத் துன்புறுத்துகின்ற கொடிய வறுமையினையும், சுங்க வரியினையும் நீக்கினான். தருமத்தை வளர்க்கும் ஆணைச் சக்கரத்தைக் கடலை எல்லையாகக் கொண்ட உலகத்தை சுற்றிவரும்படியும், ஆத்திமாலை அணிந்த அழகிய தோள்களை உடையவனாக விளங்கினான் முதற்குலோத்துங்கன்.

*சேல்-பாண்டியருக்குரிய மீன்கொடி. சிலை-சேரருக்குரிய விற்கொடி. இருகால்-இரண்டுமுறை. சாலைகளம்-சேர நாட்டிலிருந்த ஓர் ஊர். கொங்கணம்-வடகன்னடம். கன்னடம்-தென்கன்னடம். மாராட்டரசை-ராஷ்டிரகூடர். வடவரை-இமயமலை. மறக்கலி-கொடிய துன்பம் தரும் வறுமை. சுங்கமுமாற்றி-வரியை நீக்கி. அறத்திகிரி-தருமத்தை வளர்க்கும் சக்கரம். ஆரிற்பொலி-ஆத்திமாலையால் விளங்கிய. அபயற்கு-முதற்குலோத்துங்க சோழன்.*

## விக்கிரமசோழனின் ஆட்சி சிறப்பு

தோன்றிய கோன் விக்கிரம சோழன் றொடைத் தும்பை
(மூன்று முரச)[13] முகின் முழங்க - நோன்றலைய 28

மும்மைப் புவனம் பரக்க முடிகவித்துச்
செம்மைத் (திசை செங்கோ) தனிக்கோ றிசையளப்பத்-
(தும்முள)[14] 29

விடவுட் படுத்து விழுக் கவிதை யெட்டுக்
கடவுட் களிறு கவிப்பச் - சுடர்சேர் 30

இணைத்தார் மகுட மிறக்கி யரசர்
துணைத்தா ளபிடேகஞ் சூடப் - பணைத்தேறு 31

13. மூன்று முரசு [திசை செங்கோ] 14. தம்மை

*(இ-ள்.)* போருக்குரிய தும்பைப்பூ மாலை சூடப் பட்ட முரசுகள் மூன்றும் மேகம் முழங்குவது போல் முழங்கவும் மூன்று உலகங்களையும் காக்கும்படியாக (திரிபுவன சக்கரவர்த்திகள்) முடிசூட்டித் தனி அரசனாக ஒப்பற்ற செங்கோல் எட்டுத் திசைகளையும் அளக்க, தன்னுடைய ஒப்பற்ற வெண்கொற்றக் குடையின் கீழ் எட்டுத் திசைக்கானத் தெய்வ யானைகளையும் உள்ளடக்கி அவற்றுக்கு நிழல் அளித்துக் காக்க, இவனது பகைவர்கள் தங்களுக்குரிய மாலை, மகுடம் இவைகளைக் களைந்து விட்டு இரண்டு பாதங்களையே தங்களுடைய மகுடங்களாகத் தலையில் சூடி ஆட்சி செய்தனர்.

*தொடைதும்பை-தும்பை மாலையை அணிந்த. மூன்று முரசும்-வீர முரசும். நியாய முரசும். தியாக முரசும். மும்மைப்புவனம்- தமிழ்நாட்டின் மூன்று பிரிவுகள். (சேர, சோழ, பாண்டிய நாடுகள்). தனிக்கோ-தனி அரசுகளாக. அளப்ப-ஆள்கின்ற. விழுக்கவிகை- சிறந்த குடை. எட்டுக்களிறு-எட்டுத்திசைகளிலுள்ள தெயவத் தன்மை பொருந்திய யானைகள் (அஷ்டதிக்கஜம்) (1. ஐராவதம், 2. புண்டரீகம், 3. வாமனம், 4. குமுதம், 5. அஞ்சனம், 6. புட்பதந்தம், 7.சாா்பௌமம், 8. சுப்பிரதீகம்,* Lex-*1, ப.198) மகுடம்-கிரீடம். இறக்கி-நீக்கி. அரசர்-மற்ற சிற்றரசர். துணைத்தாள்-பாதங்கள்.*

நீராழி யேழு நிலவாழி யேழுந்தன்
பேராழி யொன்றாற் பொதுநீக்கிச் - சீராகும் 32

மேய் திகரி விரிமே கலையல்குற்
றூய நிலமடந்தை தோள்களினும் - சாயலின் 33

ஓது முலகங்க ளேழுந் தனித்துடைய
கோதில் குலமங்கை கொங்கையினும் - போதில் 34

நிறைகின்ற செல்வி நெடுங்கண் களினும்
உறைகின்ற நாளி லொருநாள் - அறைகழற்காற் 35

*(இ-ள்.)* பொங்கி எழுகின்ற நீர் நிறைந்த ஏழு கடல்களையும், ஏழு தீவுகளையும் தம்முடைய ஒப்பற்ற தன் ஆணை சக்கரத்தினால் அவற்றைத் தமக்கு உரிமை யாக்கிக் கொண்டான். சக்கரவாள மலையை மேக மலையாக அணிந்து கொண்ட நிலமகளின் தோளிலும், விக்கிரமசோழனின் மனைவியாகிய பட்டத்துராணி முக்கோன் கிழானடி மார்பினிலும், தாமரை மலரில் வீற்றிருக்கக் கூடிய திருமகளின் கண்ணிலும் தங்கியிருந்து ஆட்சி செய்யக்கூடிய நாளில் ஒருநாள்.

*நீராழி ஏழும்-கடல்களேழும். நில வழியேழு-ஏழு தீவுகளும் (நாலந்தீவு, இறலித்தீவு, கிரவுஞ்சத்தீவு, குசைத்தீவு, தேக்கந்தீவு, புட்கரத்தீவு). பேராழி-ஆணைச்சக்கரம். திகிரிவிரிமேகலை-சக்கர வாள மலையை விரிந்த மேகலையாக அணிந்த. குலமங்கை- விக்கிரம சோழனின் தேவியானவள். கோதில்-குற்றமற்ற. போதில் நிறைகின்ற செல்வி-திருமகள். உறைகின்ற,-தங்குகின்ற.. கழற் கால்- கழலை அணிந்த கால்.*

## இனிய இல்லறம்

(றெண்ணீர்)[15] திறையளந்த முத்திற் சில பூண்டு
தென்னர் மலையாரச் சேறணிந்து - தென்னர் 36

வரவிட்ட தென்ற லடிவருட வாட்கண்
பொரவிட்ட பேராயம் போற்ற - விரவிட்ட 37

நித்திலப் பந்தர்க்கீழ் நீணிலாப் பாயலின்மேல்
தொத்தலர் மாலைத் துணைத்தோளும்-மைத்தடங் 38

கண்ணு முலையும் பெரிய களியன்னம்
எண்ணு முலகங்க ளேழுடைய - பெண்ணணங்கு 39

பெய்த மலரோதிப் பெண்சக்ர வர்த்தியுடன்
எய்திய பள்ளி யினிதெழுந்து - பொய்யாத 40

15. தென்னர்.

*(இ-ள்.)* வீரக்கழல் அணிந்த தென்னவர்களாகிய பாண்டிய மன்னர்கள் திரைப்பொருளாகக் கொடுத்த முத்து மாலைகளில் சிலவற்றை அணிந்த விக்கிரமசோழன். பாண்டியர்களின் பொதிகை மலையில் கிடைத்தச் சந்தனக்குழம்பை உடலில் பூசிக்கொண்டான். அதே பொதிகை மலையிலிருந்து வீசும் தென்றல் காற்று அவனுடைய பாதங்களை வருட, வாள் போன்ற கூர்மையான கண்களை உடைய பெண்கள் கூட்டமாக அருகில் இருந்துப் போற்றிக் கொண்டாட முத்துக்களால் அலங் கரிக்கப்பட்டப் பந்தலின் கீழ் நிலவினைப் போன்ற வெண்மையானக் கட்டிலின் மீது வாசம் வீசும் மலர்களாலான மாலைகளை அணிந்த தோள்களுடனும், பெரிய மைபூசியக் கண்களுடனும், அழகிய மார்பும், அன்னம் போன்ற பட்டத்து ராணியாகிய உலகமுழுதுடையாள் என்னும் பெண் சக்கரவர்த்தியுடன் துயில் கொண்டான்.

*தென்னர் மலை - பொதிகை மலை. ஆராச்சோறு-சந்தனக் குழம்பு. பேராயம்-அரசனுக்குப் பாட்டாலும், கூத்தாலும் வார்த்தை யாலும் மகிழ்வூட்டும் மகளிர். நித்தலப்பந்தர்-முத்துப்பந்தர். நிலா பாயலின்-நிலாவைப் போன்ற வெண்மையான படுக்கை. களி யன்னம்-அன்பின் மிகுதி. பெண்ணணங்கு-உலகமுழுதுடையாள். பொய்யாத-பருவம் பொய்ப்பினும் தான் பொய்யாது பெருகும் காவிரி.*

### சிவ வழிபாடு

பொன்னித் (புதுமஞ் சனமாடிப்)[16] பூசுரர்கைக்
கன்னித் தளிரறுகின் காப்பணிந்து - முன்னை 41

மறைக் கொழுந்தை வெள்ளி மலைக் கொழுந்தை (மௌவுலி)[17]
பிறைக் கொழுந்தை வைத்த பிரானைக்-கறைக் களத்துச் 42

செக்கர்ப் பனிவிசும்பைத் தெய்வத் தனிச்சுடரை
முக்கட் கனியை முடிவணங்கி - மிக்குயர்ந்த 43

16. திருமஞ்சமாடிப். 17. மோலிப்

*(இ-ள்.)* துயில் எழுந்தவுடன் விக்கிரம சோழன் வானம் பொய்த்தாலும், தான் பொய்யாத காவிரியில் நீராடிய பின்னர் அந்தணர்கள் மந்திரம் ஓதிக் கொடுத்த அருகம்புள்ளின் தளிரை காப்பாகத் தன் கைகளில் அணிந்துகொண்டான். பழமைக்கும் பழமையான வேதத்தின் கொழுந்தையும், வெள்ளி மலையின் கொழுந்தையும், தலையில் பிறையின் கொழுந்தையும் அணிந்துள்ளவனும், விஷத்தினைக் கண்டத்தில் சுமந்திருப்பவனும், செவ்வானத்தின் சிவந்த நிறத்தினைக் கொண்ட திருமேனியையும், மூன்று கண்களை உடையவனானச் சிவபெருமானை வணங்கினான்.

*பொன்னி-காவிரி. பூசுரர்-வேத வல்லுனர் (அந்தணர்). கன்னித்தளிர் அறுகு- இளம் துளிரான அறுகம்புல். மௌவுலி- தலையில். கறைக்களம்-நஞ்சுண்ட கணடம். செக்கர்-செவ்வானம். முக்கட்கனி- மூன்று கண்களை உடையவன்.*

### அணிகலன்களால் அலங்கரித்தல்

**தானத்துறை முடித்துச் சாந்துந் தகைமையன**
**மானக் கலன்கள் வரவருளித் - தேன்மொய்த்துச் 44**

**சூழுமலர் முகத்துச் சொன்மா மகளுடனே**
**தாமு மகரக் குழைதயங்க - வாழும் 45**

**தடமுலைப் பார்மடந்தை தன்னுடனே தோளிற்**
**சுடர்மணிக் கேயூரஞ் சூழப் - படரும் 46**

*(இ-ள்.)* சிவ வழிபாட்டினை முடித்த பின்னர் விக்கிரம சோழன் உயர்வான கோதானம் (பசுதானம்) பூதானம் (பூமிதானம்) சொர்ண தானம் (பொன்) முதலான தானங்களை அளித்தான். வண்டுகள் தேன்

உண்ண சூழ்ந்து மொய்க்கும் தாமரை மலர் போன்ற கலைமகளின் (சரஸ்வதியின்) கருணை பொழிந்து விளங்குமாறு மகர குண்டலமானது அசைந்து ஒளிவீசின. அழகிய பருத்த கொங்கைகளை உடைய நிலமகள் (பூமிப்பெண்) தோளில் ஒளிமிக்க இரத்தினங்கள் பதித்த தோள்வளை சூழ்ந்து விளங்கும்படியும்.

*தானத்துறை - தனத்தின் வகை. கலன்கள்-அணிகலன்கள். தேன்-வண்டு. மலர்முகத்து-தாமரைமுகத்து. சொன்மாமகள்- சரஸ்வதி. மகரகுழை-மகர குண்டலம். பார் மடந்தை-நிலமகள் (பூமாதேவி). கேயூரம்-தோள் வளை.*

தணிப்பில் பெருங்கீர்த்தித் தைய லுடனே
மணிகடகங் கையில் வயங்கப் - பிணிப்பின் 47

முயங்குந் திருவுடனே முந்நீர் கொடுத்த
வயங்கு மணிமார்பின் மல்க - உயங்கா 48

அருங்கொற்ற(மார்க்கு)[18] மணங்கி னுடனே
மருங்கிற் றிருவுடைவாள் வாய்ப்பப்-பொருந்திய 49

அண்ணற் படிவத் தரும்பே ரணியணிந்து
வண்ணத்(தழகின்)[19] வனப் பமைந்து-கண்ணுதலோன் 50

*(இ-ள்.)* பெரும் புகழை தருகின்ற கொற்றவை என்னும் பெண்ணின் கடகம் கைகளில் அழகுபெற விளங்கவும், திருமகளுடன் திருமாலின் மார்பினில் பெற்றுள்ள கௌதுப மணியினை மார்பினில் சூட்டியும், எப்பொழுதும் வெற்றியைத் தரும் கொற்றவையின் வாளினை இடையில் சொருகியும், விக்கிரம சோழன் தன் மேனிக்கு இயல்பாக இருக்கின்ற தெய்வ அருளுடன் அணிகலன்களை அணிந்து அழகுக்கு அழகு சேர்த்தான்.

---

18. மாக்கு. 19. தளவில்.

*கீர்த்தி தையல் - வெற்றியை தரும் கொற்றவை. திரு-லட்சுமி. முந்நீர்-திருப்பாற்கடல். மணி-கௌஸ்தூபம் திருமால் மார்பில் அணியும் மணி கொற்றம்-வெற்றி. அணங்கு-துர்க்கை. மருங்கு-இடை.*

கௌஸ்தூப மணியைப் பற்றி

["யே வாங்ம யாம் போநிதி ஸாரதத்வஜ்ஞானோஜ்வலத் கௌஸ்து
பரத்ன பாஸா
க்ருதப்ரகாசம் ஹ்ருதயம் ததானாவிபாந்தி விஷ்ணோரிவ மூர்த்திபேதா"

*"அவர்கள் வேத இலக்கியமாகிய கடலின் சாரமான தத்துவ ஞானம் திகழும் கௌத்துப மணியின் ஒளியினால் பிரகாசிக்ககும் இதயத்தை உடையவர்கள். அவர்கள் திருமாலின் வேறு உருவங்களாகத் திகழ்பவர்கள்".* -புலவர் வே. மகாதேவன்&முனைவர் க. சங்கரநாராயணன்- சோழர் செப்பேடுகள். வீர சோடனின் பீடாபுரச் செப்பேடு. பக்கம்-1139, வரி. 78-80.]

### அரண்மனை வாசலில் வந்த அரசன்

காமன் சிலை வணங்க வாங்கிய கட்டழகு
தாமமுடி வணங்கத் தந்தனைய - காமருபூங் 51

### பட்டத்து யானையின் சிறப்பு

கோலத் தொடும் பெயர்ந்து கோயிற் புறநின்று
காலத் ததிருங் கடாக்களிறு - ஞாலத்துத் 52

தானே முழங்குவ தன்றித் தனக்கெதிர்
வானே முழங்கினுமவ் வான் றடவி - வானுக் 53

கணியு மருப்பு மடற்கையு மின்மை
தணியும் யமராச தண்டம் - தணியாப் 54

*(இ-ள்.)* சிவபெருமான் மேல் சினந்து மன்மதன் கரும்புவில்லை வளைக்க. அம்மன்மதனின் அழகினை எல்லாம் பெற்று வைத்திருந்து சிவபெருமான் தம்மை வணங்கிய விக்கிரம சோழனுக்கு வழங்கினாரே என

எண்ணும் வகையில் விக்கிரம சோழனின் அழகினைக் கண்டவர் வியந்து போற்றும் விதமாக அரண்மனையில் உலா செல்வதற்காக வந்து நின்றான்.

அரண்மனை வாயிலில் அலங்கரித்து நிறுத்தப் பட்டிருந்த விக்கிரம சோழனின் பட்டத்து யானையானது பகைவர்களைக் கண்டவுடன் அவர்கள் பயந்து நடுங்கி ஓடும்படியாகத் தானே முழங்கும் ஆற்றலைப் பெற்றது. அவ்விதமான யானை போர்க்களத்தில் தனக்கு எதிராகப் பகைவர்கள் இடியைப் போன்ற ஓசையே கேட்டாலும் கூடப் பயங்கொள்ளாமலும், எதிர் ஓசை எழுப்பாமல் நிற்க கூடியது விக்கிரம சோழனின் யானை. இடியின் ஓசையை கேட்ட அந்த யானை பகைவர்களோ என எண்ணி கோபம் கொள்கிறது. அந்த யானையானது மேகங்களைத் தடவிப் பார்த்து அங்கு அணிகலன், தந்தம், துதிக்கை என எவையும் இல்லை எனத் தெரிந்து தம் கோபத்தினைத் தணித்துக் கொள்கின்றது.

*காமன்-மன்மதன். சிலை-வில். கட்டழகு-மிகுதியான அழகு. கோயிற்புறம்-அரண்மனைக்கு வெளியே. காலத்து-தனக்குரிய காலத்தில். கடாக்களிறு-மதத்தையுடைய ஆண் யானை. ஞாலம்-உலகம். வானே-மேகம். அணி-ஆடை முதலியன. தணியும்-தன்கோபம் தணியும். யமராச தண்டம்-எமனுடைய படை.*

**பரிய பொருங்கோ டிணைத்துப் பணைத்தற்**
**கரிய தொருதானே யாகிக் - கரிய 55**

**மலைக்கோ டனைத்து மடித்திடியக் குத்தும்**
**கொலைக் கோட்டு வெங்கால கோபம்-அலைத்தோட 56**

*(இ-ள்.)* பருத்தத் தந்தங்களை உடைய அவ் யானையின் செயல்-எமனின் தண்டனையைப் போன்று மாற்ற முடியாதது போன்று அதன் மிகப்பெரிய மருப்புகள் இரண்டும் வளர்ந்து படுப்பதற்கு ஏற்ப மலை

போன்று காணப்படுகின்றது. கருமையான மலைச் சிகரங்கள் அனைத்தும் இறந்து மடியும்படி குத்திக்குதறும் கொலைத் தன்மை கொண்டது.

*கோடு-கொம்பு-தந்தம். பணைத்தற்கு-தன்னிடமிருந்து பகைவர் தப்புவதற்கு. கரியமலை கோடு-கரிய நிறத்திலான பெரிய மலையின் சிகரங்கள். வெங்கால கோபம்-கொடுமையான எமனின் கோபத்தினைப் போன்றது.*

ஊறு மதந்தனதே யாக வுலகத்து
வேறு மதம் பொறா வேகத்தால் - கூறொன்றத் 57

தாங்கிப் பொறையாற்றாத் தத்தம் பிடர்நின்றும்
வாங்கிப் பொதுநீக்கி மண்முழுதும் - ஓங்கிய 58

கொற்றப் புயமிரண்டாற் கோமா னகளங்கன்
முற்றப் பரித்ததற்பின் முன்புதாம் - உற்ற 59

வருத்த மறமறந்து மாதிரத்து வேழம்
பருத்த கடாந்திறந்து பாயப் - பெருக்கத் 60

துவற்று (மதிரசி)[20] சுவடுபிடித் தோடி
அவற்றி னபரங்கண் டாறி - இவற்றை 61

அளித்தன னெங்கோமா னாதலா லின்று
களித்தன வென்றுவக்குங் காற்று - நெளித்திழிய 62

வேற்றுப் புலத்தை மதித்துக் கொதித்தமரில்
ஏற்றுப் பொருமன்ன ரின்னுயிரைக் - கூற்றுக் 63

*(இ-ள்.)* உலகில் உள்ள எல்லாப் பொருள்களையும் அடித்துச் செல்லும் ஆற்றல் கொண்ட மதநீரே என்று அவ்வானை எண்ணம் கொண்டது. மற்ற யானைகளின் மதத்தினைப் பொறுக்காது சினத்தால் அவற்றையே அழிக்கும் தன்மையுடையது.

20. மதுரச்

*கூறென்ற-தம்முடைய கூறு பொருந்த. பொறையாற்ற- சுமத்தல் முடியாத. அகளங்கன்-விக்கிரம சோழன். மாதிரத்து வேழம்- எட்டுத்திக்கு யானைகள் (அஷ்டதிக்கஜங்கள்). மதுரச்சுவடு- இனிமையான மதநீர்ச் சுவடு. பொருமன்னர்-போர் செய்யும் பகை மன்னரது. கூற்றுக்கு அருத்தும்-யமனுக்கு உண்பிக்கும்.*

## விக்கிரம சோழன் உலா செல்லுதல்

கருத்து மயிரா பதநின் றதனை
இருத்தும் பிடிபடியா வேறித் - திருத்தக்க 64

கொற்றக் கவிகை நிழற்றக் குளிர்ந்திரட்டைக்
கற்றைக் கவிரியிளங் காலசைப்ப - ஒற்றை 65

வலம்புரி யூத வளைக்குல மார்ப்ப
சிலம்பு முரசஞ் சிலம்ப - புலம்பெயர்ந்து 66

வாட்படை கொட்ப மறமன் னவர் (நெடுங்கக்)[21]
கோட்புலிக் கொற்றக் கொடியோங்கச் -சேட்புலத்துத் 67

*(இ-ள்.)* விக்கிரம சோழன் தன் பட்டத்து யானையின் பிடரியில் ஏற அருகில் நின்ற பெண் யானையைப் படியக மிதித்து ஏறி அமர்ந்தான். அவ்வேளையில் அவனுடைய (திருதக்க) செல்வ வளத்தின் பயனாக வெண்கொற்றக் குடை நிழலை கொடுக்கவும், குளிர்ச்சி பொருந்திய கவரியினை இருபுறமும் நின்று வீசினர். வலம்புரிச் சங்கு ஊத மற்ற சங்குகளும் முழங்கின. மூன்று வகையான முரசங்கள் முழங்கத் தங்களுடைவாளை உயர்த்திப் பிடித்த படியாக வாட்படையைச் சேர்ந்த வீரர்கள் மன்னனுக்குக் காவலாக வர அவற்றைக் கண்டுப் பகை மன்னர் நடுக்கம் கொண்டனர். வெற்றியைக் கொடுக்கும் புலிக்கொடி ஓங்கி உயர்ந்து பறந்திடும்படியானக் காட்சியுடன் விக்கிரம சோழன் வீதி உலா புறப்பட்டான்.

---

21. நடுங்கச்.

*அயிராவதம்-பட்டத்து யானை. பிடிபடியா-பெண் யானை. கொற்றக் கவிகை-அரசுரிமைக்குரிய குடை. சிலம்ப-ஒலிக்க. புலம் பெயர்ந்த-தம்முடைய நாட்டை விட்டு நீங்கிய. வாட்படை-வாளை யேந்திய வீரர் படை. சேட்புலத்து-நெடுந்தூரத்திலுள்ள.*

தென்னரு மாளுவருஞ் சிங்களுருந் தேற்றுதகை
மன்னருந் தோற்க மலைநாடு - முன்னம் 68

குலையப் பொருதொரு நாட் கொண்ட பரணி
மலையத் தருந் தொண்டை மானும் - பலர்முடிமேல் 69

ஆர்க்குங் கழற்(காலழகன்)[22] றனதவையுள்
பார்க்கு மதிமந்த்ர பாலகரிற் - போர்க்குத் 70

தொடுக்குங் கமழ்தும்பை தூசினொடுஞ் சூடிக்
கொடுக்கும் புகழ்முனையர் கோனும் - முடுக்கரையும் 71

கங்கரையு மாராட் டரையுங் கலிங்கரையும்
கொங்கரையு மேனைக் குடகரையும் தங்கோன் 72

*(இ-ள்.)* விக்கிரம சோழனின் ஆட்சிபுரிந்த நாட்டிற்கு அருகாமையில் உள்ள நாடுகளில் ஆட்சி செய்தவர்களான பாண்டியர், மாளுவர், சிங்களர், தெளிந்த அறிவுடைய உதகை மன்னர், கலிங்க நாட்டினை வெற்றிகொண்டு கலிங்கத்துப் பரணி என்னும் நூலை அணியாகப் பெற்ற கருணாகரத் தொண்டைமான், விக்கிரமசோழன் போருக்குச் செல்லும்போது தும்பை மாலையையும், போருக்குரிய உடையினை எடுத்து கொடுக்கும் அறிவுடைய அமைச்சர்களில் ஒருவனான முனையர்கோன், கன்னடர், கங்கர், மராட்டியர், கலிங்கர், கொங்கர், குடகர் முதலான மன்னர்களும் உடன் வந்தனர்.

---

22. லனகன்.

*தென்னர்-பாண்டியர், மாளுவர்-மாளவ தேசத்தவர். சிங்களர்-இலங்கையரசர். உதகை மன்னர்-குடகு நாட்டின் அரசர். மலைநாடு-சேரநாடு. குலைய-அழியும்படி. பரணிமலைய-பரணியென்னும் நூலைச் சூடும்படி. தொண்டைமான்-கருணாகரத் தொண்டைமான். பலர்-பல அரசர். கழற்கால்-கழலை அணிந்த காலையுடையவர். அனகன்-விக்கிரம சோழன்.*

முனியும் பொழுது முரிபுருவத் தோடு
குனியுஞ் சிலைச் சோழர்கோனும் - சனபதிதன் 73

தோளுங் கவசமுஞ் சுற்றமுங் கொற்றப்போர்
வாளும் வலியு மதியமைச்சும் - நாளுமா 74

மஞ்சைக் கிழித்து வளரும் (பெரும்புரிசைக்)
கஞ்சைத் திருமறையோன்(கண்ணும்)-*வேங்கையினும் 75

கூடார் விழிஒத்துங் கொல்லத்தூங் கொங்கத்தும்
ஒடா வீரட்டத்து மொட்டத்தும் - நாடா 76

தடியெடுத்து வெவ்வே றாசிரிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோனும்-கடியரணச் 77

செம்பொற் பதணஞ் செறியிஞ்சிச் செஞ்சியர்கோன்
கம்பக் களியானைக் காடவனும் - வெம்பிக் 78

*(இ-ள்.)* விக்கிரம சோழன் போரில் பகைவர்மேல் கோபம் கொண்டு வளைந்த புருவத்துடன் வில்லை வளைக்கும் சோழகோனும், இச்சோழனுக்கு

---

[*புல்லாத மன்னர் புலாலுடம்பைப் பேய் வாங்க
ஒல்லாத சுஃற்றுமுயிள் வங்கப் -புல்லார் வம்
தாங்கு மடமகளிர் தத்தங்குழை வாங்க
வாங்கு வரிசிலைக்கை வாணறும்]

தோளாகவும், பாதுகாக்கும் கவசமாகவும், உறவாகவும், வீரம் மிகுந்த போர் வாளாகவும், அறிவில் சிறந்த அமைச்சனாகவும் இருந்து பணியாற்றும் சனபதியும், மேகத்தையும் கிழித்து வளரும் சோலைகளையும், உயர்ந்த மதில்களையும் உடைய கஞ்சை என்ற ஊரில் வாழுகின்ற அந்தணனாகிய கண்ணனும், வேங்கி, விழிஞம், கொல்லம், கொங்கு, இரட்டபாடி, ஒட்டம் முதலிய நாடுகளின் மன்னர்களை எல்லாம் புறமுதுகிட்டு ஓடச் செய்து வெற்றிக்கொடி நாட்டிய கலிங்ககோனும், காவல் மதிலையுடைய செஞ்சி மன்னனாகிய தூணில் கட்டப்படும் செருக்கையுடைய யானைகளைக் கொண்ட காடவன் என்பவனும்

*முனியும் பொழுது-கோபிக்கும் போது. முரிபுருவம்-வளைந்த புருவம். சிலை-மலை. சனபதி-சோழர்களின் பெயர்களுள் ஒன்று. தோள்-கை. சுற்றம்-மந்திரி (கூட்டம்) சுற்றம். மஞ்சை-மேகம். புரிசை-மதிலையுடைய. கஞ்சை-கஞ்சா நகரம் (மயிலாடுதுறைக்கு கிழக்கே உள்ளது.) விழிஞம்-ஒட்ர தேசம் (லாட தேசம்) . கடியரண்-பாது காப்பினை உடைய மதில். கம்பக்கலியானை-கம்பத்தில் கட்டி வைக்கப்படக் கூடிய செருக்குடைய யானை.*

கலக்கிய வஞ்சக் கலியதனைப் பாரில்
விலக்கிய வேணாடர் வேந்தும்-தலைத்தருமம் 79

வாரிக் குமரிமுதன் மந்தா கினியளவும்
பாரித் தவனைந்த பாலனும் - பேரமரில் 80

முட்டிப் பொருதார் வடமண்ணை மும்மதிலும்
மட்டித்த (மாலியானை வைத்தவனும்)-[26]அட்டையெழக் 81

காதிக் கருநாடகர் கட்டரணங் கட்டழித்த
சேதிக் கருநாடார் சேவகனும்-பூதலத்து 82

---

26. மால்யானை வத்தவனும்

முட்டிய தெவ்வர் சடைகட்ட மொய்கழல்
கட்டிய காரானை காவலனும் - ஒட்டிய 83

*(இ-ள்.)* மக்களை வாட்டி வறுமையைப் பூமியிலிருந்து ஓட்டிய வேணாடரும், சிறந்த அறங்களை குமரி முதல் கங்கை வரையிலும் பரப்பிய அனந்தபாலனும். போரில் பகைவரது வடமண்ணை எனப்படும் மான்யகேதம் என்னும் ஊரில் இடம்பெற்றிருந்த மூன்று மதில்களையும் அழித்த மிகப்பெரிய யானையையுடைய வத்தவனும், கவந்தங்கள் (தலையில்லாத உடல்கள்) எழுந்து ஆடும்படியாக பகைவரை கொன்ற கருநாடாரின் காட்டு அரணை அழித்த சேதி நாட்டு வீரனும், தன்னுடைய பகைவர்கள் போருக்கு அஞ்சி தப்பி ஓடுவதற்கு சடைமுடி தரித்த முனிவர்களைப் போல ஓடும்படி செய்த வீர கழல்களை அணிந்த காரானை மன்னவனும், வலிமை மிகுந்த அரசர்கள் தோற்று ஓடும்படியாகச் செய்து வடகலிங்கத்தின் படைகளை அழித்தவனுமான அதிகனும் உடன் சென்றனர்.

***கலியதனை-கலியன்(சனி). கொடுமையை. வேணாடு-திருவாங்கூர். வாரிக் குமரி முதல்-குமரிக் கடல் முதல். முட்டி-தாக்கி. மும்மதில்-மூன்று அரண்கள். மால்யானை-பெரிய யானை. வத்தவன்-வத்த தேசத்து அரசன். காதி-கொன்று. கட்டரணம்-காவாலை உடைய அரண்களை. சடைகட்ட-முனிவர்களைப் போல சடைமுடி தரித்தல்.***

மான வரச ரிரிய வடகலிங்கத்
தானை துணித்த வதிகனும் - மீனவர்தம் 84

கோட்டாறுங் கொல்லமுங் கொண்ட குடைநுளம்பன்
வாட்டார் மதயானை வல்லவனும்-மோட்டரணக் 85

கொங்கைக் குலைத்துக் குடகக் குவடிடித்த
செங்கைக் களிற்றுத் திகத்தனும்-அங்கத்து 86

வல்லவனுங் கோசலனு மாளுவனு மாகதனும்
வில்லவனுங் கேரளனு மீனவனும் -- பல்லவனும் 87

என்னு பெரும்போ ரிகல் வேந்தர் மண்டலிகர்
முன்னு மிருமருங்கு மொய்த்தீண்டப்-பன்மணிசேர். 88

*(இ-ள்.)* மேலும் பாண்டியருடைய கோட்டாறும், கொல்லமும், வென்று கைப்பற்றிய வாளினையும் முன்னே அணிவகுத்துச் செல்லும்படியான படை களையும், மத யானைகளையும், கொடைகளையும் உடைய நுளம்பனும், கொங்கு நாட்டினை அழித்தும், குடகு மலையினையும் இடித்து அவர்களது யானை யினைக் கைக்கொண்டவனான திகத்தனும், அங்கநாட்டு வல்லன்கோசலன், மாளுவன், மகதன், சேரன், கேரளன், பாண்டியன், பல்லவன் என்று பல பெருமையும், வலிமையும் உடைய மன்னர்களும், குறுநில மன்னர்களும் விக்கிரம சோழனின் முன்னும், பின்னும் என இருமருங்கும் சூழ்ந்து வந்தனர்.

***துணித்தல்-அழித்தல், மீனவன்-பாண்டியர். கோட்டாறு-நாகர் கோயில் அருகிலுள்ள ஊர். வாட்டார்-(வாள்தார்) வாளால் உண்டான தழும்புகளின் மலை. மாகதன்-மகத நாட்டைச் சார்ந்தவன். இகல் வேந்தன்-பெரிய மன்னன். மண்டலிகர்-குறுநில மன்னர்கள். மருங்கு-பக்கம், ஓரம்.***

**பரத்தையரின் வருகை**

சோதி வயிர மடக்குஞ் சுடர் தொடியார்
வீதிகுறுகுதலு மேலொருநாள் - மாதவத்தோன் 89

சார்ந்த பொழுதனகன் றன்னை யறிவித்த
பூந்துவரை யுந்தப் புரம் போன்றும் - ஏந்திப் 90

பரங்குங் கலையல்குற் பாவையரே யாணை
புரக்குங் திருநாடு போன்றும் - வரக்கருதா 91

ஏனை முனிக்குறும்பு கொல்ல விகன்மாரன்
சேனை திரண்ட திரள் போன்றும்-கானலங் 92

கண்டன் மணற்குன்றத் தன்னக் கணம் போன்றும்
கொண்ட லின்மின்னுக் குழாம் போன்றும்-மண்டும் 93

திரைதொறுந் தோன்றுந் திருக்குழாம் போன்றும்
வரைதொறுஞ் சேர்மயில்கள் போன்றும்-விரைவினராய் 94

இந்து நுதல்வெயர்ப்ப வெங்கணுங் கண்பரப்பிச்
சிந்தை பரப்பித் தெருவெங்கும்-வந்தீண்டி 95

*(இ-ள்.)* வயிரத்தின் ஒளியினை தன் ஒளியினால் அடக்கும் வளையல்களை அணிந்த பரத்தையர் விக்கிரம சோழன் வீதி உலா வருவதைக் காண வந்தனர். இதனால் அவ்வீதி கண்ணனைக் காண அவரது மனைவியரும், பதினாறாயிரம் கோபியரும் வந்தமையால் மங்கையர் எவரும் இல்லாத துவாரகையின் அந்தப்புரமாக இருந்ததை நாரதன் பார்த்த காட்சியைப் போல் இங்கும் காட்சி தந்தது. இடையில் மேகலைகளை அணிந்த பரந்த அல்குலினை உடைய பெண்கள் தங்களின் ஆணையினால் காக்கும் சிறந்த நாட்டினைப் போன்றும் அந்த வீதிகள் காட்சி தந்தன. மன்மதனின் கொள்கைகளை ஏற்று, அவனது வழியில் முக்கியத்துவம் கொடுத்து வாழ மறுக்கும் முனிவர்களைக் கொல்ல மன்மதனின் சேனைகள் திரண்டு வந்தது போன்றும் அவ்வீதி விளங்கியது. கடற்கரையின் மணற்குன்று மீது அமர்ந்துள்ள அன்னப்பறவைகளின் கூட்டத்தினைப்

போன்றும், மேகங்களில் தோன்றும் மின்னல் கூட்டத் தினைப் போன்றும், கடலின் அலைகளில் தோன்றும் திருமகள் போன்றும், மலைகள் தோறும் சேர்ந்த மயில் கூட்டம் போன்றும், அத்தெருவிலுள்ள பரத்தையர் அனைவரும் பிறை நெற்றியில் வியர்வை தோன்றும் படியாக அந்தத் தெருவில் எல்லாப் பகுதியில் இருந்தும் விக்கிரம சோழனைக் காண்பதற்காக விரைந்து வந்தனர்.

*சோதி-ஒளி, சுடர்கொடி-ஒளி வீசும் வளையல்கள். மாதவத் தோன்-நாரதர். அனகன்-கண்ணபிரான். பூந்துரை-துவாரகை. கலையல்-மேகலை. பாவையரே-பெண்களே. இகல் மாரன்-மன்மதன். கண்டல்-தாழை. கொண்டல்-மேகம். மின்னும் குழாம்-மின்னல் தரும். திரை-அலை. வரை-மலை. வெயர்ப்ப-வியர்க்க.*

### தெருவில் உள்ள பெண்களின் நிலைமை

உத்திரசுடர வொளிமணிச் சூட்டெறிப்ப
(பச்சத்தி)[27] வயிரம் (பார் தெறிப்ப)[28]-முத்தின் 96

இணங்கு மமுத கலசங்க ளேந்தி
வணங் தலையினராய் வந்து-கணங்கொண்டு 97

பார்க்குங் கொடுநோக்கு நஞ்சுறைப்பக் கிஞ்சுகவாய்
கூர்க்கு மெயிறு வெறுங் கோளிழைப்ப-வேர்க்க 98

வரைகொ ணெடுமாடக் (கிழ்நிலையின்)[29] மல்கி
(உரச)[30] வரமகளி ரொப்பார்-விரல்கவரும். . 99

*(இ-ள்.)* விக்கிரம சோழனின் உலாவினைக் காண வந்த பெண்கள் தங்களுடைய தலையில் தெய்வ உத்தி என்னும் தெய்வ அணி ஒளி வீசிடவும், உச்சிக் கொண்டையில் சூளாமணி வெயிலினைப் போல ஒளி வீசும் வயிர மணிகளையும் அணிந்திருந்தனர். முத்துக்கள்

27. பத்தி. 28. தொர்ப்ப. 29. கிணிலையின். 30. உரக

பதித்த கச்சுக்களை தங்களின் அமுத கலசங்களான கொங்கைகளைத் தாங்கும்படியாகவும் வணங்கிய தலையினராகவும் வந்து தெருக்களில் சோழனைக் காண கூடி நின்றனர்.

அந்தப் பெண்களில் சிலரின் பார்வையில் விஷம் கலந்திருந்தது. முருக்கம்பூவைப் போன்ற சிவந்த வாயி லுள்ள கூர்மையான பற்கள் காம மயக்கம் கொள்ளும்படி யான தீமையைச் செய்தன. மலை போன்ற உயர்ந்த மாடத்தின் கீழே தங்கியிருந்தமையால் அப்பெண்கள் நாகலோகத்துப் பெண்களைப் போன்று காட்சி யளித்தனர்.

*உத்தி-தெய்வ உத்தி. ஒளிமணி-சூளாமணி. கொடுநோக்கு-பார்வையில் விளையும் கொடுமை. கிஞ்சுகவாய்-முருக்கம்பூவினைப் போன்ற வாய். கூர்க்குமெயிறு-கூர்மையான பற்கள்.*

**வீணையும் யாழுங் குழலும் விசிமுழவும்**
**பாணி பெயர்ப்பப் பதம் பெயர்த்துச் சேணுயர் 100**

**மஞ்சுவரும் வெண்பளிங்கு மாடத்திடை நிலையில்**
**விஞ்சையர் மாதரெனமிடை வார்-அஞ்சனக் 101**

**கண்ணிற் சிறிது மிமையாத காட்சியும்**
**மண்ணிற் பொருந்தா மலரடியும்-தண்ணென்ற 102**

**வாடாநறுஞ்செவ்வி[31] மாலையுங் கொண்டழகு**
**வீடா நிலாமுற்ற மேனிலையிற்-கூடி 103**

**உருவினொளியி னுணர்வி னுரையிற்**
**பொருவிலரிலா[32] மகளிர் போல்வார்-அருகணைந்து 104**

*(இ-ள்.)* வீணையும், யாழும், குழலும் வாரால் கட்டப்பட்ட மத்தளமும் கைகளால் ஒலிக்கச் செய்த தங்கள் பாதத்தைப் பெயர்த்து கூத்தாடும் நிலையில்

31. நறுஞ் செல்வி. 32. பொருவிலர

மேகங்கள் வெள்ளியிலான பளிங்கு மாளிகைகளுக்கு இடையில் இருக்கக்கூடிய தேவர் உலகத்துப் பெண் களைப் போன்று தோற்றமளித்தனர். மையணிந்த கண்களை இமைக்காது விக்கிரம சோழனைக் கண்ட காட்சியும், தரையினை தெரியாத மலர் போன்ற பாதமும் வாடாத அன்று மலர்ந்த பூமாலைகளைச் சூடியும் நிலா முற்றத்தில் இருந்தமையால் அவர்கள் வடிவத்தாலும், மேனியில் வீசிய ஒளியாலும், உணர்வாலும், மொழி யாலும் ஒப்பற்ற தேவர் உலகப் பெண்களைப் போன்றே இருந்தனர்.

*விசிமுழவு-வாராற் கட்டிய மத்தளம். பாணி-தாளம். சேணுயர்-ஆகாயத்தில் உயர்ந்த. மஞ்சு-மேகம். விஞ்சையர் மாதா-வித்தியாதர மகளிர். அஞ்சனம்-கண்மை. செவ்வி-அழகு. வீடா-நீங்கா. நிலா முற்றம்-நிலாக்காலத்தில் உலாவுவதற்கமைந்தவிடம். மேனிலை-மேல்மாடி.*

## விக்கிரம சோழனின் அழகினைக் கண்டு வியந்த பெண்கள்

சீரள வில்லாத் திருத்தோ ளயன் படைத்த
பாரள வல்ல பணைப் பென்பார்-பாருமின் 105

செய்ய வொருதிருவே யாளுந் சிறுமைத்தோ
வைய முடையபிரான் மார்பென்பார்-கையிரண்டே 106

ஆனபோ தந்தமுருகவே எல்லனிவன்
வேனில்வோர் கண்டீரென மெலிவார்-யானெண்ணும் 107

எண்ணுக் கிசைய வருமே யிவனென்பார்
கண்ணிற் கருணைக் கடலென்பார்-(முண்ணிளிக்கும்)[33] 108

ஆதிமனு குலமிவ் வண்ணலான் மேம்படுகை
பாதியே யன்றோ லெனப் பகர்வார்-தாதடுத்த 109

---

33. மண்ணனளிக்கும்.

கொங்கை பசப்பார் (துன்கோல்வளை)[34] காப்பார்போல்
(பொற்செங்கை)[35] குவப்பார் (பொற்சிலர்சிறிய)[36] குழாங்கள்
முற்றும்-அங்கொருத்தி 110

*(இ-ள்.)* உலா வந்த விக்கிரம சோழனைக் கண்ட பெண்கள் இவனது அழகிய தோளானது பிரம்மாவினால் படைக்கப்பட்ட பூமியினை விடவும் நீளமும் அகலமும் உடையது என்றனர். சிவந்த நிறமுடைய திருமகள் மட்டுமே தங்கும்படியானது இவனுடைய சிறிய மார்பகம் என்றனர் சிலர். இவனுக்கு இரண்டு கைகளுமே உள்ளது என்பதனால் இவன் முருகன் அல்ல என்றனர் சிலர். இவன் என் மனதின் ஏக்கம் புரிந்து என்னுடனேயே வந்து விடுவானோ எனச் சிலர் ஏங்கினர். இவன் கண்கள் கருணைக் கடலே என மொழிந்தனர் பலர். பூமியைக் காத்திடும் ஆதி மனுகுலம் இவனால் முழுமையடைந்தது எனச் சிலர் போற்றினர். மகரந்தம் போன்ற தேமல் படர்ந்து கொங்கைகளின் மீது பசலை நோய் படிந்திடும் படியாக மெலிந்தனர் சிலர். பசலையின் காரணமாக வளையங்கள் கழலுவதனை பிறர் அறியாமல் தடுப்பதற்காகத் தங்களுடைய சிவந்த கரங்களை வணங்குவது போன்று குவிந்த நிலையில் நின்றனர் சிலர். அனைவரும் அவனை நெருங்கி வந்தனர்.

***அயன்-பிரம்மா. திருவே-திருமகள். வேனில்வேள்-மன்மதன். எண்ணுக்கு-கருத்திற்கு. ஆதிமனுகுலம்-சூரியனை முதல்வனாக கொண்ட சோழர்குலம். மேம்படுகை-மேம்பட்டது. கோள்வளையல்-திரண்டவளையல்கள்.***

**பேதை**

**வந்து பிறந்து வளரு மிளந்திங்கள்**
**கொந்து முகிழாக் கொழுங்கொழுந்து-பைந்தழைத் 111**

34. கோல்வளை. 35. செங்கை. 36. சிலர் சிறிய. [குழாங்கள் முற்றும்] சுவடியில் உள்ளது.

தோகை தொடாமஞ்ஞை சூடுண்டு தோற்றவன் மேல்
வாகை புனைய வளர்கரும்பு-கோளகுலத்தின் 112

பிள்ளை யிளவன்னய்(பேடை) பிறந்தணிய
கிள்ளை பவளங் கிளைத்தகிளை-கள்ளம் 113

தெரியாப் பெருங்கட்(சிறுதேற லதா)[37]யர்ப்
பிரியாப் பருவத்துப் பேதை-பரிவோடு 114

*(இ-ள்.)* உலகில் பிறந்து வளரும் சிறு நிலவினைப் போன்ற ஐந்து வயது நிலையில் உள்ள பேதைப் பருவத்தினள் அரும்பாத செழித்த பூங்கொத்துப் போல தோற்றத்தை உடையவள். தோகையில்லாத மயிலினைப் போன்றவள். அவள் மன்மதனின் வெற்றி மாலையை சூடுவதற்கென வளர்க்கப்படும் கரும்பெனத் திகழ்ந்தாள். குயில் குஞ்சின் மொழியினைப் போன்று பேசக் கூடியவள். இளமையான அன்னப் பறவையின் நடையைக் கொண்டவள். இப்பொழுதுதான் பிறந்து மொழி பேசும் பச்சை கிளியினைப் போன்ற பேச்சு மொழியினை உடையவள். பவளக் கொடியில் தோன்றிய இளம்கொம்பு போன்ற தோற்றம் உடையவள். தாயினைப் பிரிந்து தனியே செல்ல இயலாத பேதைப் பருவத்தாள்.

*இளந்திங்கள்-பிறைநிலா. கொந்து-பூங்கொத்து. முகிழா-அரும்பாத. பைந்தழைத் தோகை-பசுமையான நிறமுடைய தோகை. சூடுண்டு தோற்றவன்-மன்மதன். கோகுலம்-குயில். பெருங்கண்-'பெரிய கண்களையுடைய.*

### பேதையின் விளையாட்டுகள்

பாவையு மானு மயிலும் பசுங்கிளியும்
பூவையு மன்னமும் பின்போதக்-காவலன் 115

பொன்னிப் புகார்முத்தி னம்மனையுங் தென்னாகை
நன்னித் திலத்தி னகைக் கழங்கும்-சென்னிதன் 116

37. சிறுதேற றாயர்ப்

கொற்கைக் குளிர்முத்து வல்சியுஞ் சோறடுகை
கற்கைக்கு (வேண்டுவன) கைப்பற்றிப் (பொற் றொழி)[38] 117

வீதிபுகுந்து கண்றனயாடு மெல்லைக்கண்
மூன்றுமுரச முகின்(முழங்குதலும்)[39]-வான்றுணைத் 118

தாயார் வரவந்து தாயார் தொழத் தொழுது
தாயார் மொழிந்தனவே தான் மொழிந்தாள்-சேயோன் 119

*(இ-ள்.)* பேதைப் பருவத்தையுடைய அப்பெண் விளையாடுவதற்காக பாவை எனப்படும் பொம்மையும், மானும், மயிலும், பைங்கிளியும், பூவையும், அன்னமும் அவளுக்கு பின்னே வந்தன. சோழ மன்னனின் பூம்புகார் பட்டினத்தில் கிடைத்த முத்துகளால் செய்யப்பட்ட அம்மானையும், நாகப்பட்டினத்தில் கிடைத்த நல்ல முத்துகளால் செய்யப்பட்ட கழங்கும், கொற்கைத் துறை முகத்தில் கிடைத்த முத்துகளால் சிறுசோறு சமைக்க கற்பிப்பதற்கு வேண்டியவற்றை எடுத்துக்கொண்டு பொன்னால் செய்யப்பட்ட கொடியினை ஒத்த பேதைப் பெண் பிற பெண்களோடு வீதிக்கு வந்து விளையாடி னாள். விக்கிரம சோழனின் மூன்று வகையான முரசுகளும் இடியினைப் போன்று முழங்கின. அம்முரசுகளின் முழக்கத்தைக் கேட்டதும் தாயாருடன் பேதைப் பெண்ணும் வந்து மன்னனை வணங்கி தன் தாயார் சொல்லிய வார்த்தைகளை தானும் கூறினாள்.

[ஆதியும் வந்தடிக் கொள்ள மேதினிகேல்
ஊன்று கலிகடிந்த வுத்துங்க துங்கன்றேன்.]

சுவடியில் இல்லை. பிற பதிப்பில் உள்ளது.

*பாவை-பொம்மை. பூவை-குயில். புகார்-காவிரிப்பூம் பட்டினம் (பூம்புகார்). நாகை-நாகப்பட்டினம். சென்னிதன்-சோழனது. வல்சி-அரிசி. மூன்றுமுரசு-நியாயமுரசு வீரமுரசு தியாகமுரசு தாயார்-தாய். சேயோன்-முருகனைப் போன்ற சோழன்.*

---

38. பொற்கொடியார். 39. முகின் முழங்க

## பேதையின் கண்ணும் மனமும் சோழனின் அழகைக் காணுதல்

படியின் மதியும் பகலவனுந் தோற்கும்
முடியி லொருகாலு மூளா - வடிவில் 120

மகிழ்ந்து மலராண் மலர்க்கண்ணு நெஞ்சம்
நெகிழ்ந்த திருநோக்கி னேரா - முகிழ்ந்து 121

சிரிக்குந் திருப்பவளச் சேயொளியூ டாடா
விரிக்குந் திருநிலவின் வீழா - பரிக்கும் 122

உலகம் பரவுந் திருப்புருவத் தோரா
திலக முகாம் புயத்துச் சேரா - மலவும் 123

திசையை நெருக்குந் திருத்தோளிற் செல்லா
இசையுந் திருமார்பத் தெய்தா - வசையிலாக் 124

கைம்மலரிற் போகா வடிமலரின் கண்ணுறா
மெய்ம்மலர்ப் பேரொளியின் மீதுறா - அம்மகள் 125

கண்ணு மனமுங் கழுநீர்க் குலமுழுதும்
நண்ணுந் தொடையள் மேனாட் செய்ய-(உண்ணிகலா)[40] 126

*(இ-ள்.)* சந்திரனையும், சூரியனையும் தோற்கச் செய்யும் முருகனின் தோற்றத்தினை ஒத்த விக்கிரம சோழனின் ஒளிவீசும் மகுடத்தினையும், திருமகளே பார்த்து மகிழ்ந்திடக்கூடிய சோழனின் பார்வையிலும் பவளம் போன்ற வாயில் தோன்றிய புன்சிரிப்பினும், அவன் முகத்தில் அணிந்திருந்த தாமரையிலும், பல திசைகளை நெருங்கும் அழகிய தோள்களிலும், புகழ் மிகுந்த மார்பினினும் குற்றமில்லாத கையாகிய தாமரை யிலும், பாத தாமரையிலும், அவன் உடலில் தோன்றிய அழகிய ஒளியிலும் அப்பேதைப் பெண்ணின் கண்ணும் மனமும் செல்லாது விக்கிரம சோழன் அணிந்திருந்த பூ மாலையின் மீது சென்றது.

---

40. உண்ணெகிழா

*மதி-சந்திரன். பகலவன்-சூரியன். மூளா-சேராவாய். மலராள்-திருமகளது. சேயொளியூடு-சிவந்த ஒளியில். இசை-புகழ். வசையிலா-பழியில்லா. கழுநீர்-கழுநீர்ப்பூ (செங்கழுநீர்). தொடையல்-மாலை.*

## பேதையின் ஆசை

(பம்மின்க)41என்னைமீர் மாலை யிதுவாங்கித்
தம்மின்க றென்றுரைப்பத் தாயாரும் - அம்மே 127

பெருமானை யஞ்சாதே பெண்ணமுதே யாமே
திருமாலை தாவென்று செல்வோம்-திருமாலை 128

யாங் கொள்ளும் வண்ணமெளிதோ வரிதென்னத்
தேங் கொள்ளு மின்சொற் சிறியாளும்-ஆங்குத்தன் 129

மார்வத்துக் கண்ணினீர் வாரப் பிறர் கொள்ளும்
ஆர்வத்துக் கன்றே யடியிட்டாள்-சேர 130

இருத்தி மணற்சோ றிளையோரை யூட்டும்
அருத்தி யறவே யயர்த்தாள் - ஒருத்தி 131

*(இ-ள்.)* விக்கிரம சோழன் மாலையைக் கண்டு அப்பேதைப் பெண்ணானவள் தன் தாயை அழைத்து அம்மாலையை வாங்கித்தர வேணடினாள். அத்தாயும் அரசனைக் கண்டு அஞ்சாதே என்று கூறினாள். அத்தாய் சோழன் அணிந்துள்ள சிறந்த மாலையை தரவேண்டும். என மன்னனிடம் கேட்கலாம். ஆனால் அம்மாலையை வாங்குவது எளிதானது அல்ல எனக் கூறினாள். அம்மாலை கிடைக்காத ஏக்கத்தில் தேன் போன்ற இனிய வார்த்தைகளைப் பேசும் பேதைப்பருவத்தாள் தன் மார்பு

---

41. வம்மின்க.

நனைய கண்ணீர் சிந்தினாள். மற்ற பருவப்பெண்கள் கொள்ளும் காதலினைத் தானும் செய்வதற்கு அன்றே தொடங்கினாள். தன்னோடு விளையாடும் பேதைப் பருவப் பெண்களுடன் மணற்சோறு ஊட்டி விளையாடும் விளையாட்டை முழுவதும் மறந்தாள்.

*மாலையிது-கழுநீர்மாலை. பெருமான்-விக்கிரம சோழன். சிறியாள்-பேதை. மார்வத்து-மார்பில், இளையோரை-இளைய மகளிரை.*

## பெதும்பை

மழலை தனது கிளிக்களித்து வாய்த்த
குழலி னிசை கவர்ந்து கொண்டாள்-நிழல்விரவு 132

முன்னர் நகைதனது முல்லை கொளமுத்தின்
பின்னர் நகைகொண்ட பெற்றியாள்-கன்னி 133

மடநோக்கந் தான் வளர்த்த மானுக் களித்து
விடநோக்கம் வேலிரண்டிற் கொண்டாள்-சுடர்நோக்கும் 134

தானுடைய மெய்ந்நுடக்கந் தன்மா தவிக்களித்து
வானுடைய மின்னுடக்கம் வாங்கினாள்-பூநறும் 135

(பாவைதன்)[42] பைங்குர வேந்தப் பசுங்கிளியும்
பூவையு மேந்தும் பொலிவினாள்-மேவும் 136

மடநடை அன்னப் பெடைபெறக் கன்னிப்
பிடிநடை பெற்றுப் பெயர்வாள்-சுடர்கனக் 137

கொத்துக் குயின்ற கொடிப்பவள பந்தத்தின்
முத்துப் பொழியுச்சி முச்சியாள்-எத்திறத்தும் 138

---

42. பாவைகள்

வீரவேள் போல்வாரை வீட்டி விழுத்தவர்மேல்
மாறவேள் கண்சிவப்ப வாய்சிவப்பாள் -நேரொத்த 139

(கொங்கின்)[43] முகையனைய கொங்கையா டன்கழுத்தாற்
பூங்கமுகை யிப்போது பொற்பழிப்பாள்-பாங்கியரும் 140

*(இ-ள்.)* பெதும்பைப் பருவம் (8 வயது முதல் 11வயது வரை) தன் மழலை மொழிகளைக் கிளியிடம் கொடுத்து விட்டுக் குழலின் இசையினைக் கவர்ந்து கொண்டாள். ஒளிவீசும் முத்துப் பற்களை முல்லைக்குக் கொடுத்து விட்டு முத்தினைப் பற்களாகப் பெற்றாள். தன்னுடைய இளமையான பார்வையை மானுக்கு வழங்கி விட்டு, விஷத்தினைப் போன்ற வேலின் நுனியினை உடைய கண்களைத் தான் அடைந்தாள். தன் இளமையான உடலின் தோற்றத்தைத் தான் வாங்கிக் கொண்டாள். வானில் உள்ள மின்னலின் தோற்றத்தை வாங்கினாள். அவள் விளையாடிய பாவைகளைக் குரா மரங்கள் ஏந்தும்படி கொடுத்துவிட்டு, பசுங் கிளியையும், பூவையையும் இவள் ஏந்தினாள். இளமையான நடையினை அன்னப்பறவைக்கு அளித்துவிட்டு பெண் யானையின் நடையினைத் தான் அடைந்தாள். பொன் தகட்டில் பவளக்கொடியை சுற்றியதற்கு ஒப்பாக முத்துப் பதித்த உச்சிக் கொண்டையை உடையவள். வீரமிகுந்த முருகன் போன்றவரையும் வென்று முனிவர்களின் மீதும் மன்மதன் போர் செய்யும்படியான சிவந்த வாயினை உடையவள். நேராக இருக்கும் கோங் கரும்பு போன்ற கொங்கையினள். தன் கழுத்தின் அழகைக் காட்டிக் கமுக மரத்தின் அழகையே சிதைப்பவள்.

***குழல்-புல்லாங்குழல். நிழல்-ஒளி. நகை கொண்ட-பற்களைக் கொண்ட. விடநோக்கம்-விஷம் போன்ற பார்வை. தன் மாதவிக்கு-தான் வளர்த்த மாதவிக்கொடிக்கு. கன்னிப்பிடி நடை-இளைய பெண் யானையின் நடை.***

---

43. கோங்க

## அன்னையிடம் கனவினைக் கூறுதல்

தாயரும் போற்றாமே தானே துயிலெழுந்து
பாயல் புடைபெயர்ந்து பையச்சென்-றியாயே 141

தளரு மிடை யொதுங்கத் தாமுங் குழைத்தாய்
வளரு மொருகுமரி வல்லி - கிளரும் 142

கொழுந்து மளவிறந்த கொந்துங் கவினி
எழுந்த கிளைகலிப்ப வேறித்-தொழுந்தகைய 143

கொங்குடைய பொன்னடருஞ் சென்னிக் கொழுங் கோங்கின்
பாங்குடைய மூரிப் பணையணைந்து - தங்களுடைய 144

வண்டு முரல மணநாற வைகுவது
கண்டு மகிழ்ந்தேன் கனவிலெனக்-கொண்டு 145

*(இ-ள்.)* தோழியரும், தாயாரும் எழுப்பாது தானே தூக்கம் கலைந்து எழுந்து தன்னுடைய இடை அசைந்து ஆடும்படியாக அவளுடைய தாயாரிடம் சென்றாள். தாழ்ந்த தளிர்களை உடைய ஓர் இளம் பூங்கொடியானது தளிர்களோடு பூங்கொத்துக்களும் அழகுடன் அரும்பி, கிளைகள் தழைத்து மேலும் வளர்ந்து கோங்க மரத்தின் கிளைகளைத் தொட்டது. அதனால் அம்மரத்தில் தங்கி இருந்த வண்டுகள் ஒலிக்க, மலர்கள் மணம் வீசியபடி இருந்த காட்சிகளை கனவில் கண்டு மகிழ்ந்தேன் என்று கூறினாள்.

***போற்றாமே-எழுப்பாதபடி. குழைத்தாய்-தளிர்களையுடைய தாய். கொழுந்து-மிக இளைய தளிர். கொந்து- பூங்கொத்து. கவினி-அழகுபெற்று. முரல - ஒலிக்கும்படி.***

### அன்னையின் வாழ்த்து

வருக வருக மடக்கிள்ளை முத்தம்
தருக தருகவெனத் தாயார் - பெருக 146

விரும்பினர் புல்லி விரைய (முலைமலர்)[44]
தரும்பின ராகத் தணங்கே-பெரும்புயங்கள் 147

புல்லிவிடாத புதுவதுவை சென்னியுடன்
வல்லி பெறுதி யெனவழுத்தும் - எல்லை 148

*(இ-ள்.)* கனவினை கேட்ட தாய் தம் பெதும்பைப் பெண்ணிடம் இளங்கிளியே வருக முத்தம் தருக. எனக் கூறி அவளை அணைத்துத் தழுவினாள். பின்னர் அவளிடம் தெய்வப்பெண் போன்றவளே உன் மார்பில் முலைகள் அரும்பின. அவை சோழனின் பெரிய தோள்களைத் தழுவும்படியாகப் புதுமணம் புரிந்து வாழ்வாய் என வாழ்த்தினர்.

***பெருக விரும்பினர்-மிக விரும்பியவராய், புல்லி-தழுவிக் கொண்டு. பெரும்புயங்கள்-சோழனுடைய பெரிய தோள்கள். புதுவதுவை-புதிய மணம். சென்னியுடன்-சோழனோடு.***

### உலாவந்த அரசனைக் கண்ட பெதும்பையின் நிலை

அரச னபய னகளங்க னெங்கோன்
புரசை மதவரைமேற் போத - முரசம் 149

தழங்கு மறுகிற் றமரோடு மோடி
முழங்கு மணிமாட முன்றிற் - கெழுங்கயற்கட் 150

பொன்னென வெல்லா வழகும் புனைவதொரு
மின்னென வந்து வெளிப்பட்டு - மன்னருயிர் 151

---

44. முலைவந்

*(இ-ள்.)* தாயார் வாழ்த்திக் கொண்டிருக்கும்போது அரசன், அபயன், அகளங்கன் எனப்பெயர் பெற்ற விக்கிரம சோழன் கழுத்தில் மணிக்கயிறு கட்டிய மத யானைமேல் உலாச் சென்றான். அவன் வருவதனை தெரிவிக்கும் முரசுகளின் ஒலியினைக் கேட்டு தன் சுற்றத்தோடு ஓடினாள். அவள் மேகங்கள் சூழ்ந்திருந்த வாசலில் மீன் போன்ற விழிகளையுடைய திருமகள் போலவும், அழகு முழுவதும் நிறைந்த மின்னல் போலவும் தோன்றினாள்.

*அகளங்கன்-விக்கிரமசோழன். புரசை-யானைக் கழுத்திலிடும் கயிறு.கழங்கு-ஒலிக்கின்ற.தமரோடும்-சுற்றத்தாரோடும். பொன்னே-திருமகளைப் போலவும். மின் என-மின்னல் எனவும்.*

**உலா வந்த அரசனைக் கண்ட பெதும்பையின் நிலை**

**உண்டாற்றிய வேங்கை வைக்க வொருதிக்கைச்**
**செண்டாற் கிரிதிரித்த சேவனைத்-தண்டாத** 152

**வேகங் கெடக்கலிவாய் வீழ்ந்தரற்றும் பார்மகளைச்**
**சோகங் கெடுத்தணைத்த தோளானை-ஆகத்துக்** 153

**கொங்கை பிரியாத வீறோடுங் கோகனக**
**மங்கை பிரியாத மார்பானை-அங்கமலக்** 154

**கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயும்**
**செய்ய கரிய திருமாலைத்-தையலும்** 155

**கண்டகண் வாங்காள் தொழமுகிழ்த்த கைவிடாள்**
**மண்டுமனமீட்கு மாற்றியாள்-பண்டறியாக்** 156

**காமங் கலக்கக் கலங்கிக் குழல் சரியத்**
**தாமஞ் சரியத் தனிநின்றாள்-நாமவேற்** 157

*(இ-ள்.)* பகை மன்னர்களை வென்று புலிக் கொடியைப் பொறிப்பதற்கு தம் கையிலுள்ள செண்டால் இமயமலையைத் திரித்த கரிகாலன் மரபில் தோன்றிய வனும், துன்பத்தின் பிடியில் சிக்கிய பூமகளின் துன்பத்தினை துடைத்து அவளை அணைத்த தோளை உடையவனும், தன் மார்பிலுள்ள கொங்கையினின்று பிரியாது இருக்கும் வீற்றுத் தெய்வம் போன்றவனும், செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளைப் பிரியாத மார்பினை உடையவனும், தாமரைக் கையும், தாமரைப் பாதமும், தாமரைக் கண்களையும், கனிபோன்ற வாயும் உடைய திருமாலின் உருவாக விளங்குபவனுமாகிய சோழனைப் பார்த்த பெதும்பைப் பெண்ணின் கண்கள் இமைக்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தன. விக்கிரம சோழனை வணங்குவதற்குக் கூம்பிய கரங்களை எடுக்க மறந்தாள். சோழன் மேல் செலுத்திய மனத்தை மீண்டும் பெறும் வகை அறியாதவளானாள். பேதைப் பருவத்தில் அறியாத காமத்தால் கலங்கினாள். அவள் கூந்தல் கலைந்ததும், அணிந்திருந்த பூமாலை நழுவியதும் அறியாதவளாய் தனியாளாய் நின்றாள்.

***வேங்கை - புலி. தண்டாத வேகம்-தணியாத வேகம். ஆகத்து-மார்பிலுள்ள. வீறு-வீற்றுத்தெய்வம். கோகனக மங்கை-திருமகள். முகிழ்ந்த-குவித்த. மாறு-வித்தை. குழல்-கூந்தல்.***

## காமன் மலரம்புகளை எய்தல்

**சேரனு மீனவனுஞ் சேவிப்பச் செம்பியரில்**
**வீரனு மவ்வெல்லை விட்டகன்றான்-மாரனும் 158**

**தக்குத் தகாதாளை யெய்து (துரைப் படுத்திப்)[45]**
**புக்குத் தொடை மடக்கிப் போயினான்-(மைக்குழன்)[46] 159**

---

45. தரைப்படுத்துப் 46. மைக்குழல்

(இ-ள்.) அப்போது வேற்படையையுடைய சேரனும், பாண்டியனும் வணங்கும் சோழன் அந்த எல்லையைக் கடந்தான். காமனும் காமத்திற்குத் தகுதி யில்லாத பெதும்பைப் பருவத்துப் பெண்ணின் மீது மலரம்புகளைத் தொடுத்தான். அவள் காம நோயினால் துன்புறுவாள் எனக் கருதிய காமனின் எண்ணம் அவளின் இளமை காரணமாக முடியாமையால் தன் அம்புகளை மடக்கி எடுத்துச் சென்றான்.

*மீனவன்-பாண்டியன், செம்பியர்-விக்கிரம சோழன், மாரன்-மன்மதன்.*

பெதுமை பகுதியானது முற்றுப்பெற்றது.

## மங்கை தலைவனின் உருவத்தை வரைந்தாள்

மங்கைப் பருவத் தொருத்தி மலர் பொதுளுங்
கங்கைப் புளினக் களியன்ன-எங்கோனை 160

மன்னனை மன்னர் பிரானை வரோதயனை
தென்னனை வானவனைச் செம்பியனை-
முனனொருநாள் 161

கண்ட பெதும்பைப் பருவத்தே தன கருத்தாற்
கொண்ட பரிவுகடைக் கூட்ட - புண்டரிகச் 162

செய்ய வடிமுதலாச் செம்பொன் முடியளவும்
மைய லகல மனத்தி ழைத்துக்-கையினால் 163

தீட்டுங் கிழியிற் பகற்கண் டிரவெல்லாம்
காட்டுங் கனவு தரக்கண்டு-நாட்டங்கொண் 164

டியா தென்றுங் காணா திருப்பாள் பொரு களிற்றுத்
தாதொன்றுந் தொங்கற் சயதுங்கன்-வீதி 165

*(இ-ள்.)* கருமையானக் கூந்தலை உடைய மங்கைப் பருவப்பெண் (12 முதல் 13 வயதுக்கு உட்பட்ட பெண் ஒருத்தி மலர்கள் நிறைந்த கங்கைக்கரை மணற்குன்றி லுள்ள அன்னம் போன்று காணப்பட்டாள். தன்னுடைய கனவில் கண்ட தலைவனை, மன்னனை, மன்னருக்குத் தலைவனை வரத்தினால் பிறந்தவனான பாண்டியனைச் சேரனைச், சோழனைப் பெதும்பைப் பருவத்தில் கனவில் கண்டவனுடன் காதலை நிறைவேற்றிக்கொள்ள எண்ணம் கொண்டாள். அதனால் அவனது தாமரை போன்ற சிவந்த பாதங்கள் முதலாகத் திருமுடி ஈறாக உள்ள உருவத்தைத் தன் மயக்கம் தீரும் விதமாக மனதில் வரைந்தபின், ஓவியமாக வரைந்தாள். அவ்ஓவியத்தில் உள்ள உருவத்தை பகல் முழுவதும் பார்த்து இரவிலும் கனவில் பார்த்து மகிழ்ந்தாள். அவன் மீது ஏற்பட்ட காதலினால் மங்கையானவள் எந்தப் பொருளையும் காணாமல் இருந்தாள்.

*மலர் பொதுளும்-மலர்கள் நெருங்கிய, புளினம்-மணற் குன்று. மன்னர்பிரானை-சக்கரவர்த்தியை. வரோதயன்-சிறந்த பிறப்புடையவன். தென்னவன்-பாண்டியன். வானவன்-சேரன். பரிவு-காதல். புண்டரீகம்-தாமரை. தீட்டுங்கிழி-துணியில் வரைந்த ஓவியம்.*

**மங்கையின் அலங்கார தோற்றம்**

வருகின்றா னென்று மணியணிகள் யாவும்
தருகென்றாள் வாங்கித் தரித்தாள்-விரிகோதை 166

சூடினாள் பைம்பொற் றுகிலடுத்தாள் சந்தனச்சே
றாடினாள் தன்பே ரணியணிந்தாள்-சேடியர் 167

*(இ-ள்.)* வலிமை மிகுந்த பெரிய போர் யானையின் மீது பூமாலையினை அணிந்து கொண்டு விக்கிரமசோழன்

உலா வருகிறான் என்ற செய்தியினை மங்கைப் பருவத்துப் பெண் அறிந்தாள். மணிகள் பதித்த அணிகளைக் கொண்டுவரச் செய்து வாங்கி அணிந்தாள். பூத்த மலர் களாலான மலர் மாலையை சூடினாள். சந்தனக் குழம்பை பூசிக்கொண்டாள். மாதணி என்கின்ற பதக்கத்தையும் அணிந்துகொண்டாள்.

*தரித்தாள்-அணிந்தாள். விரிகோதை-மலர்ந்தமலர். பொற் றுகில்- பொன் னாடை. சந்தனசேறு-சந்தனக் குழம்பு. சேடியர்-பணி மகளிர்.*

## தன் அழகினை கண்டு ஆச்சரியமடைதல்

காட்டும் படிமக் கலத்துக் கமலத்தை
ஓட்டும் வதனத் தொளிமலர்ந்து-கேட்டு 168

விடைபோ மனங்கன்போல் வேல் விழிக டாமும்
படைபோய் வருவனபோற் பக்கம்-கடைபோய் 169

மறித்து மதர்மதர்த்து வார்கடிப்பு வீக்கி
எறிக்குங் குழைக் காதிற் கேற்றும்-நெறிக்கும் 170

அளக முதலாக வைம்பாற் படுத்த
வளர்கருங் கூந்தன் மலிந்துங்-கிளர 171

அரியன நித்திலத்தினம் பொற் றொடித்தோள்
பரியன காம்பிற் பணைத்தும்-தெரியற் 172

சுவடு படுகளபத் தொய்யில் சூழ் கொங்கை
குவடு படவெழுச்சி கொண்டுந்-திவடரம் 173

முந்துங் கலையல்குன் மூரித் தடமகன்றும்
நொந்து மருங்கு னுடங்கியும்-வந்து 174

மிடையும் புதுவனப்பு விண்ணோரும் வீழ
அடையுந் தனதுருக்கண் டஞ்சிக்-கொடையனகன் 175

*(இ-ள்.)* பணிப்பெண்கள் காட்டிய கண்ணாடியில் ஒளி வீசும் தன்னுடைய அழகிய முகத்தினைப் பார்த்தாள். விழிகள் இரண்டும் போர்க்களத்துக்குச் சென்று வருவதைப் போல் காதுகளும் எதிர்பக்கம் சென்று வருவதைப் பார்த்தாள். சுருண்ட கரிய கூந்தல் ஐந்து பகுதியாகப் பிரிப்பதற்கேற்ப நெருங்கி வளர்ந்திருத் தலையும், முத்துக்கள் பதித்த தோள்வளை அணிந்த தோல்பட்டைகள் மூங்கிலைப் போல் திரண்டிருப் பதையும் மாலைகளின் சுவடு பதிந்த மார்பில் சந்தனக் குழம்பால் எழுதப்பட்ட கொங்கைகளின் வளர்ச்சி யினையும், அல்குல் அகன்றும் இடை மெலிந்தும் இருந்ததனைக் கண்டு வியந்தாள்.

*காட்டும் படிமம்-கண்ணாடி. கமலத்தை ஓட்டும் வதனம்-தாமரைப் பூவைப் போன்ற முகம். படை-ஆயுதங்கள், மலிந்தும்-தழைத்தல். நித்திலம்-முத்து. நுடங்கி-மெலிந்தும். அனகன்-தலைவன் பெயர்.*

**பண்டறியு முன்னைப் பருவத் துருவத்துக்**
**கண்டறியு மவ்வடிவு காண்கிலேன்-பண்டறியும் 176**

**முன்னை வடிவு மிழந்தேன்முக நோக்கி**
**என்னை யறிகலன்யா னென் செய்கேன்-தன்னை 177**

**வணங்கி வருவ தறிவ னென் வந்**
**திணங்கு மகளி ரிடைநின்-றணங்கும் 178**

*(இ-ள்.)* தேவரும் விரும்பும்படியான புதிய உடல் அழகினைக் கண்டு வியந்த மங்கைப் பருவத்தினள். பேதை, பெதும்பைப் பருவங்களில் இருந்த அழகினைக் காண வில்லை என்பதனை நினைத்து ஏங்கினாள். சோழன் முன்னொரு நாள் என்னைக் கண்ட அழகினை இழந்தேனே என வருந்தினாள். என் முகத்தினை

கண்ணாடியில் பார்த்தால் என்னையே நான் அறிய முடியவில்லையே. சோழன் எவ்வாறு அடையாளம் காணுவான் என ஏங்கினாள். பின்னர் அஞ்சாமல் சோழனை வணங்கி மேல் நடக்க இருப்பதை அறிவேன் என நினைத்து தம்மை ஒத்த மகளிர் கூட்டத்தில் தானும் சென்று நின்றாள்.

*பண்டறியும்-பழமை. முன்னைப் பருவம்-பேதை, பெதும்பை பருவங்கள். உருவத்து-உடம்பில். இணங்கு மகளிர்-தன்னை ஒத்த பெண்கள். அணங்கும் - மங்கையும்.*

### சோழனின் அழகு கண்ட மங்கை

இறைவ னகளங்க னெங்கோன் குமரித்
துறைவ னிருபகுல துங்கன்-முறைமையால் 179

காக்குங் கடல்கடைந்த கைம்மலரு முந்திமலர்
பூக்கு முலகளந்த பொற்கழலும்-நோக்கும் 180

திருக் கொள்ளு மார்பமுந் தெவ்வேந்த ரெல்லாம்
வெருக் கொள்ளு மூரித்தோள் வெற்பும்-உருக்கும் 181

மகரக் குழைக்காது மாதரார் மாமை
நுகரப் புடைபெயரு நோக்கும்-துகிரொளியை 182

வெளவிய கோல மணிவாயு மெப்பொழுதும்
செவ்விய யழியாத் திருமுகமும்-எவ்வுருவும் 183

மாறுபடா வண்ண(மண்ணல்)[47] படிவத்து
வேறுபடுவனப்பு மெய்விரும்பித்-தேறும்[48] 184

பிறையாம் பருவத்துப் பேருவகை யாம்பல்)
நிறையா மதிக்கு நெகிழ்ந்தாங்-கிறைவனைக் 185

47. வண்ணப். 48. தேறிப்

**கண்டு மனமு முயிருங் களிப்பளவிற்**
**கொண்டு பெயர்ந்தது கொல்(லி)[49]யானை-பண்(டை)[50] 186**

*(இ-ள்.)* இறைவன், அகளங்கன், எங்கோன், குமரித் துறைவன், நிருபகுலத்துங்கன் என்ற சிறப்புக்களைப் பெற்ற விக்கிரம சோழனைத் திருமாலாகவே நினைத்துப் பார்க்கிறாள். மங்கைப் பருவத்துப் பெண். அதனால் உலகைக் காக்க அவன் போரிட்டு வென்ற தாமரைப் போன்ற கைகளைப் பாற்கடலைக் கடைந்த கையாகக் காணுகின்றாள். உலக முழுவதையும் தன் ஆணைச் சக்கரத்தினுள் கொண்டு வந்த நிலையினை உந்தித் தாமரையிலிருந்து தோன்றிய உலகம் முழுவதும் அளந்த திருவடியாக நோக்குகின்றாள். திருமகள் நோக்குகின்ற மார்பும், பகைவர் அச்சம் கொள்ளத்தக்க வலிமை பெற்ற தோளும், பார்க்கும் பெண்களையெல்லாம் மனமுருகச் செய்யும் மகரக்குழைகளும் அணிந்த காதுகளும், பெண்களின் மேனி அழகை பார்த்து மகிழும், பவளத்தின் எவ்வடிவத்திலும் மாறுபடாத வண்ணமும், அவனது உறுப்புக்களின் அழகினை முழுவதுமாகக் கண்டு விரும்பினாள். பிறைபோன்ற நெற்றியினை உடைய வளான இளம்பருவ மங்கை ஆம்பல் மலரானது முழு மதியை கண்டு மலருவது போல விக்கிரம சோழனைக் கண்டு கண்ணும், மனமும், உயிரும் மகிழ்ந்தாள். மகிழ்ச்சியுற்ற அவ்வேளையில் கொல்லும் மதயான சோழனை தாங்கிக் கொண்டு அந்த இடத்தை விட்டு அகன்றது.

*அளகங்கன்-விக்கிரம சோழன். தெவ்வேந்தர்-பகையரசர். மூரி-வன்மை. மாமை-பேரழகை. துகிரொளி-பவளத்தின் ஒளி. மெய்விரும்பி-மனத்தின் கண்ணே விரும்பி. நிறைஆம் மதிக்கு-பூரண சந்திரன்.*

---

49. கொல்யானை. 50. பண்டு

## உறங்காமல் தவித்த விழிகள்

நனவு கிழியிற் பகற்கண்டு நல்ல
கனவு தாவிர(வு)ற்[51] கண்டு-மனமகிழ்வாள் 187

தீட்டி முடியாத செவ்விகுறிக் கொள்ளும்
நாட்ட முறங்கா மையுநல்க-மீட்டுப் 188

பெயர்ந்தா டமர்தம் பெருந்தோள் களில்வீழ்ந்
தயர்ந்தா ளவணிலையீ தப்பாற்-சயத்தொலைய 189

*(இ-ள்.)* மங்கைப் பருவத்தாள், விழித்திருந்தபோது சோழனின் உருவினை மனதில் வரைந்தும், அதனைப் பகலில் பார்த்தும், இரவில் கனவில் கண்டும் மகிழ்ந் திருந்தாள். உலாச் செல்லும்போது ஓவியத்திலும் எழுத முடியாத அவனழகை நேரில் கண்டாள். சோழனின் அழகை கண்ட விழிகள் உறங்க மறுத்தன. உலா வந்த சோழன் அந்த இடத்தை விட்டு நகர்ந்ததும் அவளும் அங்கிருந்து நகர்ந்தாள். உறவினரின் தோள்களில் சாய்ந்து தன்னையும் மறந்து நின்றாள்.

*நனவு-விழித்திருக்கும் நிலையில். கிழியில்-தான் தீட்டிய ஓவியப்படம். செவ்வி-அழகை. நாட்டம்-கண்கள். பெயர்ந்தாள்-திரும்பி வந்தாள். அயர்ந்தாள்-சோர்ந்தாள்.*

## மடந்தை உருவத் தோற்றம்

வெந்து வடிவிழந்த காமன் விழிச் சிவப்பு
வந்து திரண்டனைய வாயினாள்-அந்தமில் 190

ஓலக் கடலேழு மொன்றா யுலகொடுக்கும்
காலக் கடையனைய கட்கடையாள்-ஞாலத்தை 191

51. தரவிரவுற். 52. தீட்ட

வீட்டி வினைமுடிக்க வெங்கால தூதுவர்கள்
கோட்டி யிருக்குங் குவிமுலையாள்-நாட்ட 192

வடிவின் மருங்குலான் மாரனைப்போன் மேலோர்
முடிவி லுணர்வை முடிப்பாள்-கடிதோடிப் 193

போகா தொழியா திடையென்று போய்முடியல்
ஆகாமை கைவளரு மல்குலாள்-பாகாய 194

*(இ-ள்.)* மடந்தைப் பருவப்பெண் (14-19 வயது) சிவனுடைய நெற்றிக் கண்ணால் எரிந்து உருவிழந்த காமனின் கண்கள் சினத்தால் சிவந்தது போன்ற சிவந்த வாயினை உடையவள். உலக முடிவு காலத்தில் ஏழு கடல்களும் உலகினைத் தன்னுள் அடக்குவது போன்ற கடைக்கண்ணை உடையவள். உலகினையும் தம் தொழிலையும் அழிப்பதற்காகக் கொடிய எமனின் தூதுவர்கள் கூட்டமாக வந்தது போன்ற குவிந்த முலைகளை உடையவள். மன்மதனைப் போலக் கண்ணால் காண முடியாத இடையினை உடையவள். தவமுனிவர்களின் அறிவினை தம்முடைய அழகினால் மதிமயங்கச் செய்யும் அழகுடையவள். இடை ஒடியாது என நினைத்து வளர்ந்து கொண்டேயிருக்கும் பெரிய அல்குலினை உடையவள். வெல்லப் பாகினைப் போன்ற இனிமையாக மொழிகளைப் பேசக்கூடியவள்.

*ஓலக்கடலேழு-ஓசையையுடைய ஏழு கடல்களும். காலக்கடை-யுகத்தின் முடிவு. வினைமுடிக்க-தம் தொழிலை நிறைவேற்ற, நாட்ட-நாட்டுவதற்கு. மாரன்-மன்மதன்.*

**பந்து விளையாடுதல்**

சொல்லி யொரு மடந்தை தோழியைத் தோள் வருந்தப்
புல்லிநிலா முற்றம் போயேறி-வல்லிநாம் 195

சேடிய ரொப்ப வருத்துத் திரள்பந்து
கோடியர் கண்டுவப்பக் கொண்டாடி-(ஆடினால்)[53] 196

(லென்மாலை)[54] நீகொள்வ தியாங் கொள்வ தெங்கோமான்
தன்மாலை வாங்கித் தருகென்று-மின்னனையாள் 197

*(இ-ள்.)* மடந்தைப் பருவத்துப் பெண் தோழியைத் தோளில் வருத்தம் ஏற்படுமாறு தழுவி நிலா முற்றத்தில் ஏறினாள். தோழியிடம் வல்லிக்கொடி போன்றவளே நாம் பாங்கியர் போல இரண்டு பக்கமாக நின்று உருண்டையான பந்தினை எடுத்து கூத்தர்கள மகிழும்படி பந்தாடுவோம் என்றாள். பந்தாடலின்போது நான் தோற்றுவிட்டாள் என்னுடைய மாலையினை எடுத்து கொள்வாயாக எனவும், நீ தோற்றுவிட்டால் மன்னவர் மாலையை வாங்கித் தருக எனவும் பந்தயம் கூறினாள்.

*ஒரு மடந்தை-ஒப்பற்ற மடந்தைப் பருவத்தாள். புல்லி-தழுவி. கோடி-கூத்தர். மின்னவளையாள்-மடந்தை.*

வட்டித் தளகமுங் கொங்கையும் வார்தயங்கத்
கட்டிக் கனபந்து கைப்பற்றி-ஒட்டிப் 198

பொருதிறத்துச் சேடியர்தம் போர் தொலையத்தானே
இருதிறத்துக்க முகமுமேந்திரப்-பெரிதும் 199

அழுந்து தரளத் தலைதன்னைச் சூழ
விழுந்து மெழுந்து மிடைய எழுந்துவரி 200

சிந்த விசிறு(திரை)[55]யி னுரையூடு
வந்த வனச மகளேய்ப்ப-முந்திய 201

செங்காந்த ளங்கை சிவக்குஞ் சிவக்குமென்
றங்காந்து தோள்வளைக ளார்ப்பெடுப்பத்-தங்கள் 202

---

53. ஓடினால். 54. என் மாலை. 55. திளீர

நுடங்குங் கொடிமருங்கு னொந்தசைந்த தென்றென்
றடங்குங் கலாப மரற்றத்-தொடங்கி 203

அரிந்த குரலினவா யஞ்சீ றடிக்குப்
பரிந்து சிலம்பு (யகைப்ப)[56]-விரிந்தெழு(ந்து)[57] 204

*(இ-ள்.)* பின்னர்ப் பந்தாடுவதற்காகக் கூந்தலை முடித்தாள் தலைவி. கொங்கைகளைக் கச்சினால் இழுத்துக் கட்டிப் பந்துகளைப் பிடிக்கத் தொடங்கினாள். தன்னோடு விளையாடும் பாங்கியர் விளையாடாது நிற்கும்படி அனைத்துப் பந்துகளையும் தானே பிடித்து விளையாடினாள். முத்துக்களால் அமைந்த பந்துகள் அவளைச் சுற்றி விழுந்து எழுந்து ஓடியது. அக்காட்சி அழகு கடலின் நடுவில் நுரைகளுக்கு நடுவே திருமகள் காட்சி தருவது போல் இருந்தது. பந்தினை அடிக்கும் செங்காந்தள் போன்ற அவளது உள்ளங்கை சிவக்கும், சிவக்கும் என்று கூறுவது போல் கை வளையல்கள் ஒலித்தன. அசைகின்ற கொடியினைப் போன்ற இடை நொந்து வருந்தும் என்று கூறுவது போல மேகலை இசைத்தது. அழகிய சிறிய அடி வருந்துகின்றன என்று சொல்லுவதனைப் போன்று அவள் காலில் அணிந்திருந்த சிலம்புகள் பதைபதைப்பன போல மெல்ல ஒலித்தன.

*வட்டித்து-சபதம் செய்து. அளகம்-கூந்தல், வார்-கச்சு. தானே-தான் ஒருத்தியாகவே. மிடை-நெருங்குதலால். உவரி-பாற்கடல். விசிறு-சுழல்கின்ற. திரை-அலை. வசை மகள்-திருமகள். முந்திய-முற்பட்ட. செங்காந்தளங்கை-செங்காந்தட் பூவைப் போன்ற உள்ளங்கை. அங்காந்து-வாய் திறந்து. நுடங்கும்-அசையும். கொடி மருங்குல்-கொடியை போன்ற இடை. அரிந்த குரலினவாய்- மெல்லிய குரலையுடையவாய். பரிந்து-அன்புற்று.*

கைக்கோ விடைக்கோ கமல மலரடிக்கோ
மைக்கோல வோதியின் மேல் வண்டிரங்க-அக்கோதை 205

56. பதைப்ப. 57. விரிந்தெழும்.

பந்தாடி வென்று பருதி யகளங்கன்
சந்தாடு தோண்மாலை தாவென்று-பைந்துகிற் 206

*(இ-ள்.)* பந்தாடும் பரந்து விரிகின்ற கையைக் கண்டோ, மென்மையான இடையைப் பார்த்தோ, தாமரை மலர் போன்ற திருவடியைப் பார்த்தோ, கூந்தலின் மேலிருந்த வண்டுகள் எழுந்து ஒலித்தன. பந்தாடலில் வென்ற மடந்தைப் பருவ பெண்ணானவள் தோழியிடம் சூரியன் போன்ற சோழனின் சந்தனம் பூசிய தோள் மாலையை வாங்கித் தருவாயாக என அவள் ஆடையைப் பிடித்து இழுத்து வருந்தினாள்.

*மைக்கோல-மையைப் போன்ற அழகையுடைய. அக்கோதை-அம்மடந்தை. பருதி அகளங்கள்-சூரியனைப் போன்ற ஒளியை யுடைய விக்கிரம சோழன். சந்தாடு-சந்தனம் பூசிய.*

## சோழன் வீதி உலா வரல்

றானை பிடித்தலைக்கும் போதிற் றனிக்குடைக்கீழ்
யானைமேல் வெண்சா மரையிரட்ட-சேனை 207

மிடையப் பவளமு நித்தலமு மின்ன
அிடையப் பணிலங்க ளார்ப்ப-புடைபெயரர் 208

(வாய்ந்து)[58] மகரவய(மீ)[59]ன் குலமுழுதும்
போந்து மறுகு (பு)டைபிறழ்ச்[60] - சேர்ந்து 209

பதலை முழங்கப் பகட்டேற்றி விட்ட
மதலை(யர்)[61] கண் முன்னர் மலிய -விதலையராய்த் 210

தாழுந் தொழிலிற் கிளைபுரக்கத் தன்னடைந்து
வாழும் பரதர் மருங்கீண்ட-வீழுந்திக் 211

58. வார்ந்து. 59. மகரவயமின். 60. படைபிறழ்ச். 61. மதலைகண்

கன்னியு நன்மதையுங் கங்கையுஞ் சிந்துவும்
பொன்னியுந் தோயும் புகார் விளங்க-மன்னி 212

செங்கோற் றியாக சமுத்திர நண்ணுதலும்
தங்கோ மறுகிற் றலைப்பட்டுத்-(துங்களி)[62] 213

*(இ-ள்.)* அச்சமயம் யானையின் மேல் பிடிக்கப் பெற்ற வெண் கொற்ற குடையின் கீழ் அமர்ந்து உலா வந்தான் விக்கிரம சோழன். அவனுக்கு அருகில் சிலர் வெண்சாமரம் வீசிக்கொண்டிருந்தனர். அவனுடைய படைகளும் நெருங்கி வந்தன. பவளம் போன்ற வாயும், முத்துக் கற்களும் ஒளித்தன. சங்குகள் ஒலிக்கச் சுறா மீனினைப் போன்ற கண்களைக் கொண்ட பெண்களும் சூழ்ந்து வந்தனர். பறை முழங்க யானையின் மேல் ஏறிய மழலையர் நெருங்கினர். தன்னுடைய சுற்றத்தாரைக் காப்பதற்காக அரசனைச் சார்ந்து வாழும் பரதவர் நெருங்கினர். கன்னியாகுமரி, நருமதை, கங்கை, சிந்து, காவிரி இவை இணைந்து கடல்போன்று புகார் நகரம் சிறந்து விளங்க அரசனாகிய விக்கிரம சோழன் வீதியில் வந்தான்.

*பைந்துகிற்றானை-பசிய துகிலாகிய ஆடை. தனிக்குடைக்கீழ்-ஒப்பற்ற குடையின் கீழ். இரட்ட-மாறி அசைய. பவளம்-மகளிருடைய உதடு. நித்தலம்-அவருடைய பற்கள். அடைய-முழுவதும். பணிலங்கள்-சங்குகள். வார்ந்து-நீண்டு. மகரவயமீன்-சுறாமீன். பதலை-ஒருவகை வாத்தியம். விதலை-நடுக்கம். கிளை-சுற்றத் தாரை. பரதர்-கூத்தர் . கன்னி-கன்னியாகுமரி. புகார்- ஆற்றுமுகம். தியாக சமுத்திரம்-விக்கிரம சோழன் பட்டங்களுள் ஒன்று. தம்கோ மறுகு-இராசவீதி.*

## மடந்தை நாணத்தை இழந்தாள்

(லொட்டிய)[63] வொட்ட முணராதே தோள்வளையும்
கட்டிய மேகலையுங் காவாதே-கிட்டித் 214

62. தங்களில். 63. ஒட்டிய

தொழுதா ளயர்ந்தா டுளங்கினாள் சோர்ந்தாள்
அழுதா ளொடுதமிய ளானாள்-பழுதிலாக் 215

காக்கும் துகிலு மிலங்கு பொலன்கலையும்
போக்கும் நிதம்பம் புனைகென்று-வீக்கும் 216

மணிக்கச்சுந் தம்முடைய வான்றூசுங் கொங்கை
பணிக்க கடைக்கண்கள் பாரா-அணிக்கமைந்த 217

குன்றாத நித்தலக் கோவையும் பொன்னிறத்த
போன்றாத பட்டும் புனைகென்று-நின்று 218

கொடுத்தன கொங்கைகளுங் கொண்டன தானும்
அடுத்தனர் தோணமே லயர்ந்தாள்-கடுத்துக் 219

*(இ-ள்.)* மடந்தைப் பருவத்தினாள் சோழனின் உலாக் காட்சியைக் கண்டவுடன் தோழியிடம் கூறிய பந்தயத்தை மறந்தாள். பசலை நோயின் காரணமாகத் தன்னுடைய கையில் அணிந்திருந்த வளையும், இடுப்பில் இருந்த மேகலையும் கழன்று விழுவதையும் அறிய வில்லை. அரசனை நெருங்கிச் சென்று வணங்கினாள். அரசனைக் கண்ட அவளுக்கு நடுக்கமும், சோர்வும் ஏற்பட்டதுடன் அழ ஆரம்பித்தாள். அவளுடைய நாணமும் நால்வகைக் குணங்களும் நீங்கின. பாதுகாக்க வேண்டிய ஆடையும், பொன்னால் செய்த மேகலையும் கழன்றன. மார்பினில் அணிந்திருந்த கச்சும், மேலாடையும் நழுவிக் கீழே வீழ்ந்தன. இக்காட்சியானது காக்கும் ஆடையையும், பொன்னாலாகிய மேகலையும் நீங்கிய அல்குலுக்கு மணி பதிக்கப்பட்ட கச்சினையும் மேலாடையினையும் கொடுத்தன போன்றும் கொங்கைகள் வெறுமையாக இருத்தலைக் கண்ட கண்கள் கண்ணீராகிய முத்துக் களையும் பசலையாகிய பட்டினையும் கொங்கைகளுக்குக்

கொடுக்க அவை பெற்றுக் கொண்டன போன்றும் உள்ளது. இந்நிலையில் தன்னை உணர முடியாமல் மயங்கி அருகில் இருந்தவர் தோள்மேல் சாய்ந்தாள் மடந்தைப் பெண்.

*துளங்கினாள்-நடுங்கினாள். கலை-மேகலை. வீக்கும்-கட்டிய. மணிக்கச்சு-முத்தாலாகிய கச்சு. வான்தூசு-சிறந்த ஆடை. பாரா-பார்த்து. நித்தலக்கோவை-முத்துமாலை.*

## காமத்தின் கொடுமை

கவரு மனங்கனுடன் கைகலந்த தன்றித்
தவரு முதுகிளவித்தாய-ரவரெங்கும் 220

கூசினார் சந்தம் பனிநீர் குழைத்திழைத்து
பூசினா ராலிபொழிந் தொழிந்தார்-வீசினார் 221

இட்டார் நிலவியிளந்தென் றலுங் கொணர்ந்து
சுட்டார் குளிரி தொகுத்தெடுத்தார்-விட்டாரே 222

பள்ளமதனிற் படரும் பெரும்புனல்போல்
உள்ளமுயிரை யுடன் கொண்டு-வள்ளல்பின் 223

ஓதை மறுகிலுடன் போன போக்காலிப்
பேதை நடுவே பிழைத் தொழிந்தாள் மாதரில் 224

*(இ-ள்.)* மடந்தை தன் உயிரைக் கவரும் காமனுடன் கோபத்துடன் போரிட்டாள். இதனைக் கண்டு முதிர்ந்த சொற்களைப் பேசும் தாயானவள் அஞ்சிச் சந்தனத்தைப் பன்னீரில் குழைத்து அவளுக்குப் பூசினாள். நீர்த்துளிகளை மேனியில் சிதறி ஆடையில் வீசினாள். நிலவு வீசும் இடத்தில் படுக்க வைத்தாள். தென்றல் காற்றினைக் கொணர்ந்து உடலினைக் குளிரச் செய்தாள். குளிர்ச்சி

தரக்கூடிய அனைத்துப் பொருட்களை கொண்டு வந்தனர். பள்ளத்தை நோக்கிப் பாயும் வெள்ளம்போல அவளின் உள்ளத்தையும் உயிரையும் சோழன் உடன் கொண்டு சென்றதால் அம்மடந்தைப் பருவத்தினள் பிழைத்திருந்தாள்.

*கவரும்-உயிரைக் கவரும். தவரும்-தவறும். கூசினார்-மனம் நடுங்கினார். ஆலி-நீர்த்துளி. வீசினார்-ஆடையினால் வீசினார். குளிரி-கல்லாரம். வள்ளல்-சோழன்.*

மடமை முற்றும்.

## அரிவை

வாரி படுமமுத மொப்பாண மதுகரஞ்சூழ்
வேரி கமழ்கோதை வேறொருத்தி-மூரிந்தேர்த் 225

தட்டுஞ் சிறுகப் பெருகி மரகதத்தாற்
கட்டுங் கனபொற் கலாபாரம்-பட்டும் 226

துகிலங் கரப்பச் சுடர்பரப்பக் கைபோய்
அகல்கின்ற வல்கு லரிவை-இகலி 227

ஒருக்கி மருங்குகடிந் தொன்றினைவந் தொன்று
நெருக்கிய மாமை நிரம்பித்-தருக்கி 228

இடங்கொண்டு மின்னுக் கொடியோன் றிரண்டு
குடங்கொண்டு நின்றதெனக் கூறத் - தடங்கொண் 229

டிணைத்துத் ததும்பி யிளை(ஞாக்)[64]க ணெஞ்(சு)ம்
பிணைத்துத் தடமுகட்டிற் பெய்து-பணைத்துப் 230

பெருமை யுவமை (பிறந்நீர்)[65] ஞாலத்
தருமை படைத்ததனத் தன்னம்-கருமை 231

64. யோர்க். 65. பிறங்கொலீநீர்.

*(இ-ள்.)* அரிவை (20-25 வயது) பெண்ணானவள் திருப்பாற்கடலில் தோன்றிய அமுதம் போன்றவள். வண்டுகள் சூழ்ந்து ஒளி வீசுகின்ற மணம் வீசும் கூந்தலை உடையவள். முன்கூறிய மடந்தையிலும் வேறானவள். தேரில் உள்ள தட்டு போன்ற அல்குலை உடையவள். அதில் அணிந்துள்ள மரகதமணியாலாகிய மேகலையின் ஒளி அவளின் பட்டாடை ஒளியை மறைத்தது. அல்குலோடு பகைத்த கொங்கைகள் இடையினை நீக்கி ஒன்றோடு ஒன்று சேர்ந்து உடலில் பேரழகினைத் தந்ததால் கர்வத்துடன் இருப்பன போன்றுள்ளன. அவை மின்னல் கொடியானது இரண்டு குடங்களை ஏந்தி நிற்பது போலக் காட்சி தந்தன. அகன்ற அக்கொங்கைகள் இளைஞர் மனத்தை இழுத்துத் தன் மார்பகத்து உச்சியில் கட்டிப்போடும் பெருமை உடையது. ஒலிக்கின்ற கடல் சூழ்ந்த உலகில் தன்கு உவமையில்லை என்று கூறும்படியான அழகுமிகு பருத்த கொங்கைகள் உடையவள் அரிவை.

*வாரி-பாற்கடல். மதுகரம்-வண்டுகள். வேரி-தேன். மூரி-வன்மை. கரப்ப-தம்ஒளி மறையும்படி. கைபோய்-கைகடந்து இகலி-மாறுபட்டு. ஒடுங்கி-நுணுகச்செயது. கடிந்து-விலக்கி. மாமை-பேரழகு. தடங்கொண்டு-மார்பினிடத்தைக் கொண்டு. முகடு-உச்சி. பணைந்து-பெருத்து. கருமை-கரிய நிறத்தை வீசி.*

எறித்துக் கடைபோ யிருபுடையு மெல்லை
குறித்துக் குழையளவுங் கொண்டு-மறித்து 232

மதர்த்து வரிபரந்து மைந்தர் மனங்கள்
பதைத்து விழநிறத்திற் பட்டுத் - ததைத்த 233

கழுநீர் மலரின் கவினழித்து மானின்
விழிநீர்மை வாய்த்த விழியாள்-முழுது[66] 234

---

66. முழுதும்.

நெறிந்து கடைகுழன்று நெய்த்திருணடு நீண்டு
செறிந்து பெருமுருகு தேக்கி நறுந்துணர் 235

வார்ந்து கொழுந்தெழுந்த வல்லியாய் மாந்தளிர்
சோர்ந்து மிசையசைந்த சோலையாய்ச் -சேர்ந்து 236

திருவிருந்து தாமரையாய்ச் சென்றடைந்த (வண்டு)[67]
பெருவிருந்து பேணுங் குழலாள்-(பொருகளிற்று)[68] 237

*(இ-ள்.)* ஒளியைத் தரும் அரிவையின் கருமை நிறக் கண்கள் இருபக்கத்து இருந்த குழையணிந்த காதுகளை எல்லையாக கொண்டிருந்தன. செருக்கும் செவ்வரியும் கொண்ட அக் கண்கள் இளைஞர் பதைத்து விழும்படி தைக்கும் அம்புகளைப் போன்றவை ஆகும். செங்கழுநீர் மலரின் அழகையும் வெல்லக்கூடிய மான் விழியொத்த கண்களை உடையவள். அரிவையின் கூந்தல் நெளிந்து இறுதியில் சுருண்ட இயல்புடையது. எண்ணெய்ப் பசையுள்ள அக்கூந்தல் கருமை நிறத்தில் நீண்டு நெருங்கி வளர்ந்துள்ளது. அவள் தலையில் மணம் வீசும் பூங் கொத்துக்களைச் சூடியிருப்பதால் கொடியாகவும், மாந்தளிரைச் சூடியிருந்தமையால் சோலையாகவும், தலையில் திரு என்னும் அணிகலனைப் புனைந்தமையால் திருமகள் உறையும் தாமரையாகவும் கூந்தல் காட்சி தந்தது. பூக்கள் சூடியிருப்பதால் வண்டுக்குத் தேனாகிய பெருவிருந்தினைப் படைக்கும் இயல்பை உடையது அக்கூந்தல்.

***மதர்த்து-வன்மைகொண்டு. வரி-இரேகைகள். நீர்மை-தன்மை. நெறிந்து-நெளிப்புடையதாகி. நெய்த்து-எண்ணெய்ப் பூசப்பெற்று. பெருமுருகு-பெரிய வாசனை. வார்ந்து-நீண்டு. வல்லி-கொடி. திரு இருந்து-சீதேவி.***

---

67. வண்டின். 68. பொருகளிற்றின்.

## அரிவையின் காதல்

வந்துமறுகி லொருநாண மனுகுலத்தோன்
தந்த பெரிய தனிமைக்கண்-செந்தமிழ்க் 238

கோனே கவர்ந் தெம்மைக் கொண்டனன் வந்தெமக்குத்
தானே தரிற்றருக வென்பனபோல்-பூநேர் 239

இணைக்கையும் தோளு மிடுதொடிக ளேந்தா
துணைக்கண் டுயிற்றத் துயிலா - மணிக்கூந்தல் 240

போது மறந்தும் புனையா பொலங்கச்சு
மீது படத்தரியா வெம்முலைகள்-சோதி 241

அடுக்குங் கனபொற்றுகில் பேணாதல்குல்
கொடுக்குந் தெருணெஞ்சு கொள்ளா - தெடுக்கும் 242

கருப்புச் சிலையனங்கன் கையம்பால் வீழும்
நெருப்புக் குருகி நிறைபோய் - இரும்புழிப் 243

*(இ-ள்.)* யானையின் மீது அமர்ந்து வந்த விக்கிர சோழன் அரிவைக்குத் தனிமையைத் தந்து அவளது உள்ளம் கவர்ந்தான். அவனே கொணர்ந்து கொடுக்கும் பொர்ருள் களைத் தவிர மற்றவற்றை அவள் விரும்ப வில்லை. காதலால் கைகளிலும், தோளிலும் இருந்த அணிகலன்கள் கழன்றன. கண்களும் தூங்க மறுத்தன. மலர்களை மறந்தும் அவள் கூந்தலில் சூடிக் கொள்ளவில்லை. முலைகளில் கச்சினை அணியாமலும் அல்குலில் பொன்னாடையைப் புனையாமலும், மனம் தெளிவான நிலையின்றிப் பல்வேறு எண்ணங்கள் மோதிட நின்றாள். அவ் வேளையில் காமனுடைய கரும்பு வில்லினால் எழும் காமத்தீயில் உருகித் தனிமையில் நின்றாள்.

*பூநேர் இணைக்கை-தாமரைப் பூவையொத்த இரண்டு கைகள். துணைக்கண்-இரண்டு கண்கள். மணிக்கூந்தல்-நீல மணியைப் போன்ற கூந்தல். தரியா-பொறுக்கமாட்டா. சோதி அடுக்கும்-ஒளி பொருந்திய. தெருள்-தெளிவு. அனங்கன்-மன்மதன். இரும்புழி-இருக்கும் சமயத்தில்.*

**விரும்பிய பொருட்களை வெறுத்தல்**

பாடிய பூவைக்கும் யாதும் பரிவின்றி
ஆடிய தோகைக்கு மன்பின்றிக் - கூடிய 244

கிள்ளைக்குத் தம்மிற் கிளரு மிளவன்னப்
பிள்ளைக்கு மாற்றான் பெயர்ந்து போய்க்-கொள்ளை 245

பயக்கு மலர்க்குரவப் பந்தர்ப் படப்பை
நயக்கு மிளமரக்கா நண்ணி-வயக்களிற்று 246

*(இ-ள்.)* தன்னை மகிழ்விக்கப் பாடிய நாகணவாய்ப் பறவை மீதும், ஆடிய மயிலிடத்தும் அன்பு செலுத்த வில்லை. ஆணும், பெண்ணுமாகக் கூடி நிற்கின்ற ஜோடி கிளிகளையும், இளமையான அன்னப் பறவைகளையும் பார்த்து அவற்றின் மீது அன்பு செலுத்தாமலும் அவ் விடத்தை விட்டுச் சென்றாள். பின்னர் அவள் அதிகமாக மலர்ந்துள்ள குரவ மலர்கள் தோட்டத்தை இளமரச் சோலைக்கு சென்றாள்.

*தோகைக்கும்-மயிலினிடத்தும். கிள்ளை-கிளிப்பிள்ளை. பயக்கும்-கொடுக்கின்ற. படப்பை-தோட்டம்.*

**அரிவையின் மன வருத்தம்**

**மன்னன் குலப்பொன்னி வைகலு மாடுதிரால்**
**அன்னங்கா ணீரென் றிழிவுற்றும் - சென்னி 247**

பெருகும் புகாரடையப் (பெற்றி)[69]ரான் மற்றைக்
குருகுகா ளென்று குழைந்தும் - கருகிய 248

நீலக் குயிலினங்காணீர் போலுஞ் சோணாட்டு
சோலைப் பயில்வீ ரெணத்து வண்டும்-பீலிய 249

பேரியன் மஞ்ஞை பெறுதிராற் கொல்லியும்
நேரியுஞ் சேரவென நெகிழ்ந்தும் - நேரியன் 250

தண்டுணாப் பேராரம் பலகாலுந் தைவந்து
வண்டுகாள் வாழ்வீ ரெனமருண்டும்-தொண்டிக்கோன் 251

மன்றன் மலயத்து வாளருவி தோய்ந்தனறே
தென்றல் வருவதெனத் திகைத்தும்-நின்றயர்கால் 252

*(இ-ள்.)* சோலையில் அன்னங்களைக் கண்ட அரிவை காவிரி நதியில் நாள்தோறும் நீராடுங்கள் என்றாள். நாரைகளிடம் நீங்கள் சோழனின் காவிரிப்பூம் பட்டினம் செல்லுங்கள் என மனமுருகி வேண்டிக் கொண்டாள். நீலக்குயிலினங்களிடம் சோழநாட்டுச் சோலையில் பாடுங்கள் எனக் கூறலானாள். மயிலிடம் கொல்லிமலைக்கும் நேரிமலைக்கும் செல்லுங்கள் எனக் கூறினாள். சோழனது மலர்மாலையில் மதுவுண்டு வாழும் வண்டினங்களிடம் வாழுங்கள் என வாழ்த்தி மருண்டாள். பொதியமலையிலிருந்து வரும் தென்றலே எனத் தென்றலைக் கண்டு மனம் தடுமாறினாள். அத் தடுமாற்றம் இவையனைத்தும் தனக்குக் கிடைக்க வில்லையே என்ற எண்ணம் அதனால் அவள் சோர்வடைந்தாள்.

***வயக்களிற்று-வலிய யானை. மன்னன்-விக்கிரம சோழன். வைகலும்-நாள்தோறும். சென்னி-சோழன். புகார்-காவிரிப்பூம் பட்டினம். குருகு-நாரை. நேரி-நேரிமலை. மஞ்ஞை-மயில். தைவந்து-தடவி. தொண்டி-சோழர்க்குரிய ஊர்.***

69. பெற்றீரான்

**காதலால் மகிழ்ச்சி**

மன்னர்க்கு மன்னன் வளவ னகளங்கன்
முன்னர்ப் பணில முழங்குதலும்-மின்னிற்போய் 253

பேணுந் திருமடனு மென்றும் பிரியாத
நாணும் பெருவிருப்பா னல்கூரக்-காணுங்கள் 254

ஏய்ப்ப வெதிர்வந்து விரவி யுருவவொளி
வாய்ப்ப முகபங் கயமலர்ந்தாள்-போய்ப்பெருகும் 255

மீதா ரகலல்குல் வீழ்கின்ற மேகலையும்
போதாத வண்ணம் புடைபெயர்ந்தாள்-சோதி 256

குழைய நடுவொடுக்குங் கொங்கையுந் தோளும்
பழைய படியே பணைத்தாள்-பிழையாத 257

பொன்னித் துறைவன் பொலந்தார் பெறத்தருவார்
தன்னிற் பிறரின்மை சாதித்தாள்-சென்னிக்குப் 258

பாராண் முலையாலும் பங்கயத்தா டோளாலும்
வாரா விரும்பு வருவித்தாள் - ஓராங்கு. 259

*(இ-ள்.)* மன்னர் மன்னனாகிய சோழன், வளவன், அகளங்கன் உலா வருகிறான் என்பதை உணர்த்தும் விதமாக சங்கு முழங்கியது. சங்கொலி கேட்ட அரிவை மின்னலைப் போலச் சென்று தன் மடமும், நாணமும் நீங்கச் சூரியனை எதிர் வந்து கண்டது போலச் சோழனைக் கண்டு முகம் மலர்ந்தாள். இதனால் வளரும் அல்குல் அகன்று அதில் அணிகின்ற மேகலை பொருந்தாத அளவுடையதாயிற்று. இடையினை ஒடுக்கிய கொங்கை களும், தோள்களும் பருத்தன. சோழனின் பூமாலை

யினைப் பெறக்கூடிய தகுதி தன்னையன்றி யாருக்கு மில்லை என எண்ணினாள். அதனால் சோழனுக்கு நிலமகளின் கொங்கைகளாலும், திருமகளின் தோள் களாலும் வராத காதலை வருவித்தாள்.

*பணிலம்-சங்கு. நல்கூர-குறைய. ஏய்ப்ப-இவளுக்கொப்பப். இரவி-சோழன். நடு-நடை. பணைத்தாள்-பெருத்தாள். சென்னி-சோழன். பாராள்-பூமிதேவி. பங்கயத்தாள்-திருமகள். பணிலம்-சங்கு. பங்கயம்-தாமரை.*

**தெரிவை-தெரிவையின் அழகு தோற்றம்**

கோது விரவாக் கொழும்பாகு கொய்தளிரீன்
போது புலராப் பொலங்கொம்பு-மீது 260

முயலா லழுங்கா முழுத்திங்கள்வானிற்
புயலா லழுங்காப் புதுமின் -இயல்கொண் 261

டெழுதாத வோவிய மேழிசைய வண்டு
கொழுதாத கற்பகத்தின கொம்பு-முழுதும் 262

இருளாக் கலாபத் திளந்தோகை யென்றும்
தெருளாக் களியளிக்குந் தேறல்-பொருளால் 263

வருந்தக் கிடையாத மாணிக்கம் யார்க்கும்
அருந்தத் தெவிட்டா வமுதம் - திருந்திய 264

*இ-ள்.)* தெரிவைப் பருவத்தினள் (26-30 வயது உடையவர்) கோது இல்லா வெல்லப்பாகு. கொய்யும் இளம் தளிரினுடைய மலர், அரும்பாத பொன்னாலாகிய கொடி, கறையில்லாத முழுநிலவு, வானில் புயலால் ஒளி கெடாத புது மின்னல், இலக்கணத்தால் எழுதாத ஓவியம், ஏழிசையை இசைக்கும் வண்டுகள் மொய்க்காத கற்பகத்தின் பூக்களைப் போலவும் இருளில்லா மயிலின் இளந்தோகையைப் போலவும் பொருளாலும் முயற்சி

யாலும் கிடைத்தற்கரிய மாணிக்கம் போலவும் அருந்தத் தெவிட்டாத அமுதத்தைப் போலவும் இருக்கக் கூடியவள்.

*கோது-குற்றம். கொழும்பாகு-கரும்பின் பாகு. தளிரீன்-தளிரை ஈனுகின்ற. போது புலரா-மலர்கள் வாடாத. அழுங்கா-ஒளி கெடாத. புயலால்-மேகத்தால். பொலங்கொம்பு-பொன்னால் செய்த கொடி.. முயலாலழுங்கா- கறைகளில்லாத. கலாபம்-மயில். தேறல்-தெளிவு.*

### அரிவை சோலையினை சென்றடைந்தாள்

சோலைப் பசுந்தென்ற றூதுவர வந்தி
மாலைப் பொழுதுமணி மண்டபத்து-வேலை 265

விரிந்த நிலாமுன்றில் வீழ்மகரப் பேழ்வாய்
சொரிந்த பனிக்கற்றை தூங்கப்-பரிந்துழையோர் 266

பூசிய சாந்தங் கமழப் பொறிவண்டு
மூசிய மௌவன் முருகுயிர்ப்பத்-தேசிகப் 267

பேரிசை யாழ்ப்பாணன் பேதை விறலியொடும்
சேரவினி திருந்த செவ்விக்கண் - நேரியும் 268

*(இ-ள்.)* அழகிய தெரிவையானவள் சோலையிலிருந்து இளந்தென்றல் தூது வருவதைக் கண்டாள். கடலிலிருந்து எழுந்து வந்த நிலா ஒளியானது அந்த சோலையில் இருந்த மண்டபத்தினில் விழுந்தது. அதனுடன் மகரமீனின் அகன்ற வாயிலிருந்து வரும் ஒளியும் அங்கு வீசியது. தோழியர்கள் பூசிய சந்தனத்தின் வாசம் எங்கும் பரவ, புள்ளிகளை உடைய வண்டுகள் மொய்த்த முல்லை மலர்கள் மலர்ந்து அம்மண்டபத்தில் நறுமணத்தைப் பரப்பியது. பெரிய யாழினைக் கொண்ட பாணனும் பேதை விறலியோடு இனிது மகிழ்ந்திருந்த மாலைப்பொழுதில் தெரிவையும் அச்சோலையினுள் சென்றாள்.

*நிலாமுன்றில்-நிலா முற்றத்தில். மௌவல்-மல்லிகை. முருகு-வாசனை. நேரி-சோழனுக்குரிய மலை.*

### பாணனிடம் (தசாங்கம்) வேண்டல்

கோழியும் வேங்கையு முப்பணையுங் கோரமும்
பாழியயிரா பதப்படும் - ஆழியான் 269

சூடிய வாரமு மாணையுஞ் சோணாடும்
காடு திரைத்தெரியுங் காவிரியும்-பாடுகென. 270

*(இ-ள்.)* மகிழ்வுடன் இருந்த யாழ்ப்பாணனிடம் தெரிவையானவள், விக்கிரம சோழனின் நேரி மலையையும், புலிக்கொடியினையும், மும்முரசு களையும், குதிரையையும், வளமிக்க அயிராபதம் என்ற யானையையும், சோழன் அணிந்திருந்த ஆத்திமாலை யையும், ஆணைச் சக்கரத்தையும், சோழ நாட்டினையும், உறையூரினையும், அலைகளை வீசும் காவிரியையும் பாடுக என வேண்டிக் கொண்டாள்.

*கோழி-உறையூர். முப்பணை-மூன்று முரசுகள். கோரம்-சோழனின் குதிரை.*

### தெரிவையின் காதல் நிலை

கூனலியாழெடுத்தான் பாணன் கொதித் தெழுந்து
வேன லரசனுந்தன் வில்லெடுத்தான் - தேனிமிர் 271

தந்திரி யாழப்பாணன் (துட)[70]வந்தான் றைவந்தான்
வெந்திரன் மாரனுந்தன் வில்லினான் - (முந்து)[71] 272

(விறை)[72]நரம்பு பண்ணி (னிசை)[73]தெரிந்தான் பாணன்
(ற்றள்)[74]மதனு மம்பு தெரிந்தான் - விறலியொடும் 273

70. றைவந்தான். 71. முந்த. 72. நிறை. 73. நிலை. 74. திறன்.

பாண னொருபாணி கோத்தான் பலகோத்தான்
துணி தொலையச் சுளிந்துவேள் - மாண 274

இசைத்தன பாண னியாழ்ப்பாணி யெய்து
விசைத்தன வேனிலான் பாணி - விசைத்தெழுந்த 275

வீணை யிசையாலோ வேனிலானம் பாலோ
வாணுதல் வீழா மதிமயங்காச் - சேணுலாம். 276

*(இ-ள்.)* தெரிவையின் வேண்டுகோளை ஏற்றப் பாணன் வளைந்த யாழினைக் கைகளில் எடுத்தான். இதனால் கோபமுற்ற இளவேனிற்கால அரசனாகிய மன்மதனும் கரும்புவில்லை எடுத்தான். தேன் போன்ற இன்னிசையை எழுப்பும் யாழ் நரம்பினைப் பாணன் மீட்டினான். காமத்தை உருவாக்கும மன்மதனும் தன் வில் நாணினைத் தடவினான். பாணன் நரம்புகளைச் சுருதிக்கு ஏற்ப மீட்டினான். மன்மதனும் மலர் அம்புகளை ஆராய்ந்தான். விறலியோடு சேர்ந்து பாணன் யாழினை மீட்டி ஒரு பாடலைப் பாடினான். மன்மதனும் அம்பறாத் தூணியிலுள்ள மலர் அம்புகள் அனைத்தும் தொலைந்து போகும்படியாக பல பாணங்களைக் கோர்த்தான். பாணனின் யாழினின்று எழுந்த பாடல்கள் இனிமையாக ஒலித்தன. மன்மதனின் கைகளும் பாணங்களை வேகமாக விடுத்தன. வேகமாக எழுந்த யாழின் இசையாலோ மன்மதனின் காமத்தை உண்டாக்கும் மலர் அம்பு களாலோ ஒளி பொருந்திய நெற்றியினை உடைய தெரிவை மதிமயங்கி வீழ்ந்தான்.

***கூனல்யாழ்-வளைந்த கோட்டையுடைய யாழ். வேனலரசன்-மன்மதன். தேன்நிமிர்-தேனைப் போல நிமிர்ந்த. தந்திரி-நரம்பு. ஒருபாணி-ஒரு பாட்டை. சுளிந்து-கோபங்கொண்டு. பல-பல அம்புகளை. பாணி-பாட்டு.***

## தெரிவையின் காதல் நோயின் தன்மை

வாடை யனைய மலயா நிலந்தனையும்
கோடை யிதுவென்றே கூறினாள் - நீடிய 277

வாரை முனிந்த வனமுலை மேல்விட்டபனி
நீரை யிதுவோ நெருப்பென்றாள் - ஊரெல்லாம் 278

காக்குந் துடியை யழிக்குங் கணைமாரன்
தாக்கும் பறையென்றே சாற்றினாள் - சேக்கைதொறும் 279

வாழுமுலகத் தெவரு மணங்களிப்ப
வீழுநிலவை வெயிலென்றாள் - கோழிக்கோன் 280

எங்கோ னகளங்க னேழுலகுங் காக்கின்ற
செங்கோல் கொடுங்கோல் சிலர்க் கென்றாள்-கங்குல் 281

*(இ-ள்.)* காதலால் மதி மயங்கி விழுந்த தலைவி அருகிலிருந்து வீசும் பொதிகைமலைத் தென்றலைக் கோடைக்காற்று என்றாள். கச்சணிந்த தன் முலைமேல் தெளித்த பனிநீரை நெருப்பெனப் புகன்றாள். ஊரில் உள்ளவரைக் காக்க முழக்கும் துடியினை மன்மதனின் போர்ப்பறை என மொழிந்தாள். உலக மக்கள் மணம் மகிழப் படுக்கைகளில் விழும் நிலவொளியை வெயில் என்றாள். உறையூர் மன்னனான அகளங்கனின் ஏழுலகும் காக்கும் செங்கோல் என் போன்ற சிலருக்குக் கொடுங் கோல் எனக் கூறினாள். விடியும்வரை இவ்வாறு புலம்பினாள்.

***கோடை-மேல்காற்று, வாரை-கச்சினை. வனம்-அழகு. துடி-உடுக்கை. தாக்கும்பறை-அடிக்கும் பறை. வீழும் நிலவை-விரும்பு கின்ற நிலாவை. கோழி-உறையூர். கங்குல்-இரவு.***

## மன்னைக் காணல்

புலருந் தனையும் புலம்பினா ளாங்குப்
பலரும் பணிந்து பரவக் - குலகிரிசூழ் 282

ஆழிப் புவன மடைய வுடையபிரான்
சூழிக் கடாயானை தோன்றுதலும் - யாழின் 283

*(இ-ள்.)* காதல் நோயினால் புலம்பிக் கொண்டிருந்த தெரிவை, பலரும் பணிந்து வணங்கும் மலையும் கடலும் சூழ்ந்த உலக முழுவதும் ஆளும் விக்கிரம சோழன் முகபடாம் அணிந்த யானையின் மேல் உலா வரக் கண்டு யாழின் இசை, தென்றல், பனி, உடுக்கை, நிலவு முதலிய அனைத்திற்கும் வருந்தியவள் உயிர் பிழைத்தவள் போல் மன்னனைக் காண ஓடினாள்.

*பரவ-புகழ், ஆழிப்புவனம்-கடலால் சூழப்பட்ட உலகத்தை, சூழி-முகபடாம். கடா-மதம்.*

## பட்டத்து யானையின் சிறப்புகள்

இழைக்கு மிசை முதலா மெப்பகைக்கு மற்றா
துழைக்கு முயிர்தழைப்ப வோடிப் - பிழைத்தனளாய் 284

முட்டுந் திகிரி கிரியின் முதுமுதுகிற்
கட்டுங் கட்வுட் கடாயானை - யெட்டும் 285

தரிக்கு முலகந் தனிதரித்த கோனைப்
பரிக்கு மயிரா பதமே - செருக்கிப் 286

பொருந்த நினையாத போர்க் கலிங்க ரோடி
இருந்த வடகரைக ளெல்லாம் - திருந்தா 287

விதையம் பொருதழிந்த விந்தமே போலப்
புதைய நடந்த பொருப்பே - சிதையாத 288

திங்கட் குலத்திற்குந் தெய்வப் பொதியிற்கும்
அங்கட் பழங்குமரி யாற்றிற்கும் - தங்கள் 289

படிக்கும் பொருநிருப பன்னகங்கள் வீழ
இடிக்குந் தனியகனி யேறே - கடிப்பமைந்த 290

*(இ-ள்.)* வானத்தை முட்டும் சக்கரவாளகிரியின் முதுகில் கட்டப்பெற்ற எட்டுத்திசைகளுக்குரிய யானைகளும் உலகைத் தாங்குகின்றன. அந்த யானைகள் தாங்கும் உலகினைத் தனியாகத் தாங்கி ஆளுபவன் விக்கிரம சோழன். அம்மன்னனைத் தாங்கும் அயிராபதம் நட்பு கொள்ள நினையாத கலிங்கர். போரில் தோற்று ஓடி ஒழிந்த வடக்கிலுள்ள மலைகலெல்லாம் விந்த மலையைப் போல் புதையும்படி அழிந்து அவற்றின் மேல் நடந்தது. அழியாத சந்திர குலத்திற்கும் தெய்வத்தன்மை பொருந்திய பொதிய மலைக்கும், பழமையான குமரியாற்றிற்கும் தங்களுடைய நாட்டுக்கும் எதிராக போர் தொடுத்து வருபவர்களான பாம்புகளைப் போன்ற பாண்டியர்களும் பயந்து நடுங்கி விழும்படி, இடியைப் போல பிளிறும் ஆற்றல் உடையது விக்கிரம சோழனின் பட்டத்து யானை.

*ஆற்றாது-பொறுக்க முடியாமல், தகிரிகிரி-சக்கரவாளகிரி. பரிக்கும்-தாங்கும். இருந்த-ஒளிந்திருந்த. விதையம்-மேருமலை. விந்தம்-விந்தியமலை. திங்கட்குலம்-சந்திரகுலம். தெய்வப்பொதியிற்கும்.- தெய்வத் தன்மை கொண்ட பொதிகை மலை.*

**தன் காதல் நிலையினை யானையிடம் கூறல்**

யாம முரசா லிழந்த நிறைநினது
தாம முரசு தரப்பெற்றோர் - நாம 291

விடைமணி யோசை விளைத்த செவிப் புண்ணின்
புடைமணி யோசைப் புலர்ந்தேன் - தடைமுலைமேல் 292

ஆறா மலயக்கா லட்டசூ டுன்செவியில்
மாறாப் பெருங்காற்றான் மாற்றினேன்-வேறாகக் 293

கூசும் பனித்திவலை கொண்டுபோ மென்னுயர்நீ
வீசு மதத்திவலை யான்மீட்டேன்-மூசிய 294

காருலா மோதக் கடல்முழங்க வந்ததுயர்
நேரிலா நீமுழங்க நீங்கினேன்-பேரிரவில் 295

என்மே லனங்கன் பொரவந்த வின்னலெல்லாம்
நின்மே லனகன்வர நீங்கினேன் - இன்னும் 296

*(இ-ள்.)* குறுந்தடியால் நள்ளிரவுதோறும் அடிக்கப் படும் முரசால் இழந்த நிறையை நின் வரவினை அறிவித்த மாலையணிந்த முரசால் பெற்றேன். பயத்தை தரும் காளையின் கழுத்துமணி ஓசையால் உண்டான செவிப் புண் உன்னுடை இரண்டு பக்கமும் கட்டப்பட்ட மணி யோசையால் ஆறியது. கொங்கையில் தென்றல் காற்றுச் சுட்ட வெப்பம் நின் செவிகள் விசிறியென வீசிய காற்றினால் தணிந்தது. என் உடலில் பட்ட பனித்துளி களின் வெம்மையால் வெந்துபோன என்னுயிரை நீ வீசிய மதநீர்த்துளிகளால் பெற்றேன். கடலலையின் ஓசையால் எழுந்த காமநோயின் துன்பமானது நின் முழக்கத்தினால் நீங்கியது. இரவில் மன்மதன் மலர்க்கணைகளால் போரிடும் துன்பத்தை உன்மீது சோழன் பவனி வரக்கண்டு நீக்கிக்கொண்டேன் என அயிராபதத்திடம் மொழிந்தாள் தெரிவைப் பருவத்தினாள்.

***யாமமுரசு-யாமந்தோறும் அடிக்கப்படும் முரசால். தாமமுரசு-மாலையை யணிந்த முரசு. விடைமணியோசை-காளையின்***

*கழுத்தில் கட்டிய மணியின் ஓசை. புலர்ந்தேன்-தீரப்பெற்றேன். கூசும்-நடுங்கும். பனித்திவலை-பனித்துளிகள். மூசிய-நெருங்கிய. காருலர்-மேகங்கள் உலவுகின்ற. அனங்கன்-மன்மதன்.*

**யானையிடம் வேண்டல்**

கடைபோக வென்னுயிரைக் காத்தியேல் வண்டு
புடைபோகப் போதும் பொருப்பே-விடைபோய் நீ 297

ராட்டுந் தடங்கலக்கின் மாரற் கயில்வாளி
காட்டுந் தடமே கலக்குவாய்-கேட்டருளாய் 298

கார்நாணு நின்கடத்து வண்டொழியக் காமனார்
போர்நாணின் வண்டே புடைத்துதிர்ப்பாய்-பார்நாதன் 299

செங்கைக் கரும்பொழியத் தின்கைக் கனங்கனார்
வெங்கைக் கரும்பே விரும்புவாய்-எங்கட் 300

குயிரா யுடலா யுணர்வாகி யுள்ளாய்
அயிரா பதமேநீ யன்றே பெயராது 301

நிற்கண்டா யென்றிரந்து நின்றாணுதலாக
விற்கொண்ட பேரிளம் பெண் வேறொருத்தி-
கொற்கையர்கோன் 302

*(இ-ள்.)* அயிராபதமே இறுதிவரை என்னை நீ காக்க விரும்பினால் இரு பக்கத்திலும் வண்டுகள் மொய்க்கும் மலையே நீராட்டும் குளத்தை கலக்குவதற்கென உன்னைப் பாகர் விடுத்தால் காமன் எய்கின்ற மலர் அம்பு காட்டி நிற்கும் பொய்கையைக் கலக்குவாய். மேகங்களே வெட்கப்படும்படியாக கார்மேகமாக விளங்கும் நின் மதநீரின் வண்டுகளைக் கொல்லாது மன்மதனின்

நாணாகிய வண்டுகளை அடித்து அழிப்பாய். மன்னன் வைத்திருக்கின்ற கரும்பினை விடுத்துக் காமன் கையிலுள்ள வில்லாகிய கரும்பினை உண்பாய். எங்களுக்கு உயிராக உடலாக, உணர்வாக இருக்கும் அயிராபதமே நீ இவ்விடம் விட்டு நீங்காமல் நிற்பாயாக என வேண்டினாள்.

*கடைபோகம்-முடிவுரையிலும், அயிலவாளி-கூர்மையான அம்பு. கார் நாணும்-மேகம் நாணுகின்ற . பார்நாதன்-சோழன். செங்கைக் கரும்பு ஒழிய-சிவந்த கையிலுள்ள கரும்பைத் தவிர. பெயராது நில்-இவ்விடத்தை விட்டு நீங்காமல் நிற்பாயாக. நுதல்-நெற்றி. விற்கொண்ட-வில்லைக் கொண்ட.*

## பேரிளம் பெண்ணின் அழகிய உரு

மல்லற் புயத்தனகன் மால்யானைக் கைபோலக்
கொல்லத் திரண்ட குறங்கினாள்-எல்லையில் 303

கோடுங் கொலைகுயின்ற சேடன் குருமணிவேய்ந்
தாடும் படமனைய வல்குலாள்-சேடியாய்த் 304

தம்மை யெடுக்கு மிடைகடிந்த தம்பழிக்குக்
கொம்மை முகஞ்சாய்த்த கொங்கையாள்-செம்மை 305

நிறையு மழகா ணிகரழித்துச் செய்யாள்
உறையு மலர்பறிப்பா ளொப்பாள்-நறைகமழும் 306

*(இ-ள்.)* வில்லை நெற்றியாகக் கொண்ட பேரிளம் பெண் *(31-40 வயது)* தெரிவையிலும் வேறானவள். கொற்கை அரசனின் வலிமையான தோள்களைப் போன்ற கொல்லும் மதயானையின் கைபோல வலிமையான தொடைகள் அமையப்பெற்றாள். நாகமணியைத்

தலையில் சூடிப் படம் எடுத்து ஆடும் பாம்பினைப் போன்ற அல்குலினை உடையவள். தன்னைத் தூக்கியதால் தோழியின் இடையினைத் தேய்த்து அழித்த செயலுக்கு நாணி முகத்தை சாய்த்தது போலக் கவிழ்ந்த கொங்கை யினை உடையவள். தனக்கு நிகர் யாரும் இருக்கக்கூடாது என்பதற்காகத் தானுறையும் மலரையே பறித்த திருமகளைப் போன்றவள்.

*அனகன்-விக்கிரம சோழன். குறங்கு-துடை. குருமணி- நாக மணி. கொம்மை முகம்-வட்டமான முகம். செம்மை-சிவந்த நிறம். நிகர் அழித்து-தனக்கு ஒப்பாதலை அழித்து. நறை-தேன்.*

### கள்ளின் தன்மை

மாலை பலபுனைந்து மான்மதச் சாந்தெழுதி
வேலை தருமுத்த மீதணிந்து-(சோலையின்)[75] 307

மானு மயிலு மனைய மடந்தையரும்
தானு மழகு தரவிருப்பத் - தேனிமிர் 308

ஊற லிளம்பாறை யுச்சிப் படுகடுந்
தேறல் வழிந்திழிந்த செவ்விக்கண்-வேறாக 309

வாக்கி மடனிறைத்து வண்டு மதுநுரையும்
போக்கி யொருத்தி புகழ்ந்துதர-நோக்கி 310

வருந்திச் சிறுதுள்ளி வள்ளுகிரா லெற்றி
அருந்தித் தமர்மே லயர்ந்தாள்-பொருந்தும் 311

*(இ-ள்.)* மணம் கமழும் பூமாலைகள் பல அணிந்து கத்தூரிக்குழம்பு பூசி, கடலில் இருந்து கிடைத்த முத்து களை மாலையாக அணிந்து பூச்சோலையில் மான்

75. சோலையில்

போன்ற பார்வையும், மயில் போன்ற தோற்றத்துடன் தோழியருடன் வீற்றிருந்தாள். அந்த நேரத்தில் பனை மரத்தின் இளம்பாறையின் உச்சியில் உண்டாகும் இனிமையான கள்ளினை வடித்து வேறொரு குடத்தில் நிரப்பினாள் தோழி. அதனைப் பனை மடலில் ஊற்றி வண்டுகளையும் கள்ளின் நுரையினையும் போக்கிய தோழியானவள், பேரிளம் பெண்ணிடம் கள்ளின் தன்மையைக் கூறிக் கொடுத்தாள். அதனை வாங்கிப் பார்த்து அதில் ஒரு சிறு துளியினைத் தன் நகத்தினால் கீழே தெறித்துவிட்டு அருந்தினாள் பேரிளம் பெண்ணா னவள். பின்னர் தோழியராம் சுற்றத்தார் மேல் சாய்ந்தாள்.

*வேலை-கடல், மானும் மயிலும்அனைய-மருண்ட பார்வை யால் மானையும் சாயலால் மயிலை போன்றும். மடந்தையர்-சேடியர். இமிர்-ஒலிக்கின்ற. தேறல்-மது. வாக்கி-வார்த்து.*

### கனவும் நனவும்

மயக்கத்து வந்து மனுதுங்க துங்கன்
நயக்கத் தருங்கனவு நல்கும்-முயக்கத்து 312

மிக்க விழைவு மிகுகளிப்பு மத்துயிலும்
ஒக்க விலே வுடனெழுந்து-பக்கத்து 313

வந்து சுடருமொரு பளிக்கு வார் சுவரில்
தந்த தனதுநிழ றானோக்கிப்-பைந்துகிர்க் 314

காசுசூ ழல்குற் கலைமே கலையாகத்[76]
தூசு புடைபெயர்ந்து தோணெகிழந்து-வாசஞ்சேர் 315

சூடிய மாலை பரிந்து துணைமுலைமேல்
ஆடிய சாந்தி னணிசிதைந்து - கூடிய 316

---

76. கலையே கலையாகத்.

செவ்வாய் விளர்ப்பக் கருங்கண் (சிவப்ப)[77]
வெவ்வாணுதலும் வெயரரும்ப-இவ்வாறு 317

கண்டு மகிழ்ந்த கனவை நனவாகக்
கொண்டு பலர்க்குங் குலாவுதலும்-வண்டுசூழ் 318

*(இ-ள்.)* கள்ளுண்ட மயக்கத்தில் மனுகுலத்தில் தோன்றிய விக்கிரமசோழன் புணர்ந்ததாகக் கனவு கண்டாள். கனவினால் ஏற்பட்ட வேட்கை மிகுதியும் கள்ளுண்ட மயக்கமும் சேர, அவளுக்கு உறக்கம் வர மறுத்தது. அதனால் எழுந்து பக்கத்தில் உள்ள பளிங்குச் சுவரில் தன் நிழலினைப் பார்த்தாள். பவள மணி அணியப் பட்ட அல்குலின் மேகலையை ஆடையாகவும், ஆடை பக்கத்தில் நழுவவும், தோள் நெகிழவும் வாசனையுள்ள பூமாலை நீங்கவும் கொங்கைகளில் பூசிய சந்தனம் அழியவும், சிவந்த வாய் வெண்மை நிறமாகவும், கரிய கண்கள் செந்நிறமாகவும், நெற்றியில் வியர்வை தோன்றவும், தான் கண்ட கனவு நனவாக எண்ணி அனைவரிடமும் பெருமையாகப் பேசிக்கொண்டிருந்தாள் அப்பெண்.

*மயக்கத்து-கள்ளுண்ட மயக்கத்தில். நல்கும்-கொடுக்கும். விழைவு-ஆசை. களிப்பு-கள்ளுண்ட மகிழ்ச்சி. சுடரும்-ஒளிவிடும். தனது நிழல்-தனது வடிவத்தை. கலையே மேகலையாக-மேகலையே ஆடையாக, தூசு-உடை. விளர்ப்ப-வெளுக்க. குலாவுதலும்-பெருமையோடு பேசுதலும்.*

## சோழன் உலா வருகை

வேரிக் கமழ்கோதை வேறாகத் தன்மனத்திற்
பூரித்த மெய்யுவகை பொய்யாகப் - பாரித்த 319

தாமக் கவிகை நிழற்றச் சயதுங்கன்
நாமக் கடாக்களிற்று நண்ணுதலும்-தேமொழியும் 320

77. சிவப்பூர

*(இ-ள்.)* வண்டுகள் சூழ்ந்த மணம் கமழும் கூந்தலை யுடைய அப்பேரிளம்பெண் விக்கிரம சோழனைப் புணர்ந்ததாக எண்ணி மகிழ்ந்திருக்கும்பொழுது மாலை யணிந்த வெண்கொற்றக் குடை நிழல் செய்ய வெற்றியால் உயர்ந்தவனாகிய அச்சோழன் அச்சத்தைத் தரும் மத யானைமேல் உலா வந்தான்.

*வேரி-தேனால், பூரித்த-நிறைந்த, பாரித்த-விரிந்த, கோதை-மலர், கவிகை-வெண்கொற்றக்குடை.*

**கள் மயக்கம் நீங்கி காம மயக்கமடைதல்**

கண்டதுங் கெட்டேன் கனவை நனவாகக்
கொண்டது மம்மதுச்செய் கோலமே-பண்டுலகிற் 321

செய்த தவஞ்சிறிது மில்லாத தீவினையேற்
கெய்த வருமோ விவையென்று - கைதொழுது 322

தேறி யொருகாலுந் தேறாப் பெருமையால்
ஏறி யிரண்டா வதுமயங்கி-மாறிலாத் 323

*(இ-ள்.)* தேன் போன்ற மொழியினை பேசக் கூடிய பேரிளம்பெண் விக்கிரம சோழன் உலா வருதலைக் கண்டாள். தான் கண்ட கனவை நினைவாகக் கொண்டது கள் மயக்கத்தினால் ஏற்பட்ட வேறுபாடேயாகும் என உணர்ந்தாள். முற்பிறவியில் சிறிதும் தவம் செய்யாமை யால் தன்பால் இத்தீவினைகள் வரும் என எண்ணினாள். பின்னர்த் தன் கைகளைக் குவித்து மன்னனை நேரில் கண்டதால் ஏற்பட்ட காதலானது மனத்தைச் சென்று தாக்கக் காம மயக்கத்தால் தோழியர் மீது சோர்ந்து வீழ்ந்தாள்.

### தோழியர் உரைத்த விக்கிரமசோழனின் பெருமைகள்

தோழியர் தோண்மே லயர்ந்தாளத் (தோகையரும்)[78]
ஏழுயர் யானையெதி ரோடி-ஆழியாய் 324

மாடப் புகாருக்கும் வஞ்சிக்குங் காஞ்சிக்கும்
கூடற்குங் கோழிக்குங் கோமானே - பாடலர் 325

சாருந் திகிரி தனையுருட்டி யோரேழு
பாரும் புரக்கும் பகலவனே - சோர்வின்றிக் 326

காத்துக் குடையொன்றா லெட்டுத் திசைகவித்த
வேத்துக் குலகிரியின் மேருவே - போர்த்தொழிலால் 327

ஏனைக் கலிங்கங்க ளேழனையும் போய்க் கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே - மானப்போர் 328

இம்ப ரெழுபொழில் வட்டத் திகல் வேந்தர்
செம்பொன் மவுலிச் சிகாமணியே - நம்பநின் 329

*(இ-ள்.)* தோழியர் ஏழுமுழம் உயரமுள்ள யானையின் மேலமர்ந்துள்ள சோழனின் முன் சென்றனர். ஆனைச் சக்கரத்தை உடையவனே, புகார், வஞ்சி, காஞ்சி, மதுரை, உறையூர்களை ஆளும் மன்னனே! புலவர்கள் பாடும் புகழினையுடையவனே! ஆணைச் சக்கரத்தைச் செலுத்தி ஏழுலகும் காக்கும் சூரியனே! சோர்வில்லாமல் உலகினைக் காத்து வெண்கொற்றக்குடையினால் எட்டுத்திசைகளையும் அடக்கிய மேருமலை போன்றவனே! போரில் ஏழு கலிங்க நாட்டினை வென்ற தியாக சமுத்திரமே! ஏழு தீவிலுள்ள பகையரசரின் மணிமுடியில் தங்கும் மணியே !

---

78. தோழியரும்.

*ஆழி-ஆக்ஞாசக்கரம், புகார்-காவிரிப்பூம்பட்டினம், கூடல்-மதுரை. கோழி-உறையூர். பகலவன்-சூரியன். கோமான்-தலைவன். தானை-சேனை. தியாக சமுத்திரம்-விக்கிரம சோழனுடைய பட்டப் பெயர்களுள் ஒன்று. மௌலி-கிரீடம்.*

பாரிற் படுவன மன்மணியு நின்கடல்
நீரிற் படுவன நித்திலமும் - நேரியநின் 330

வெற்பில் வயிரமும் வேந்தரின் சோணாட்டுப்
பொற்பின் மலிவன பூந்துகில் - நிற்பணியக் 331

கொண்டா யிவடனது கொங்கைக் கெழுஞ் சுணங்கும்
தண்டா நிறையுந் தளிர்நிறமும் - பண்டைத் 332

துயிலுங் கவர்ந்ததுநின் தொல்குலத்து வேந்தர்
பயிலுந் திருநூற்படியோ - (புயல்வளவன்)[79] 333

*(இ-ள்.)* உன்னுடைய நாட்டில் தோன்றிய பல்வகை மணிகளும், நின் கடலில் பிறந்த முத்துக்களும், உன்னுடைய நேரிமலையிலும், பிற மலைகளிலுமுள்ள வைரங்களும், சோழ நாட்டிலுள்ள பூந்துகிலும், உன்னை இவர் பணிந்தவுடன் கவர்ந்து கொண்டாய். இவளின் கொங்கைகளிலுள்ள தேமலும், நீங்காத நிறையும், மாந்தளிர் நிறமும், உன்னைக் காணுமுன் இருந்த உறக்கத்தினையும் நீ கவர்ந்து கொண்டாய். இவ்வாறு நீ செய்தது, உன்னுடைய குலத்தினில் தோன்றிய முன்னோர் கூறிய மனுநூலின் முறையாகுமோ? மேகம் போலும் கொடையில் சிறந்த சோழனே எனக் கேட்டாள்.

*படுவன-உண்டாவன. நித்தலம்-முத்து. பொற்பு-பொலிவு. வெற்பு-மலை. நிற்பணிய-உன்னை வணங்க. தண்டா-நீங்காத. பயிலுந்திருநூல்-மனுநூல்.*

---

79. புயல்வளவ

## மன்னனிடம் தோழியர் வேண்டல்

மன்னிய தொண்டை வளநாடு வாளியும்
பொன்னி திருநாடு பூஞ்சிலையும்-கன்னித் 334

திருநாடு தேருங் குறையறுப்பச் செய்தால்
திருநாண் மடமகளில் தம்மை-ஒருநாளவ் 335

வேணிற் கரசன் விடுமே யவன்சினமிப்
பானற்கண் ணல்லா ளுயிர்ப்பரமே ஆனக்கால் 336

குன்றே யெனத்தருநின் கோபுரத்திற் தூங்குமணி
ஒன்றே யுலகுக் கொழியுமே - என்றினைய 337

கூறி வணங்கிடு மிவ்வளவுங் கோதையர் மேற்
சிறியனங்கன் சிலைவளைப்ப - மாறழியக் 338

குத்துங் கடாக்களிற்றுப் போந்தான் கொடைச் சென்னி
உத்தூங்க துங்க னுலா. உ 339

*(இ-ள்.)* வளமுள்ள தொண்டைநாடு அம்புகளையும், காவிரி பாயும் சோழநாடு அழகிய விற்களையும், குமரித் துறையையுடைய பாண்டிநாடு தேர்களையும் காமனுக்குக் கொடுத்தன. அவன் இளம்பெண்களுடன் போர் புரியாது விடுவானா? விடமாட்டான். அவன் சினத்தை நீல மலர் போலும் விழியுடைய இப்பேரிளம் பெண்ணின் உயிர் தாங்காது. குன்று போன்று உயர்ந் திருக்கும் கோபுரத்தில் கட்டப்பட்டுள்ள குறை தீர்க்கும் ஆராய்ச்சி மணி மகளிரின் காமவேதனையை நீக்குமா? எனப் பலவாறு வினவிச் சோழனை வணங்கினர் தோழியர். அத்தோழியர் மீதும் கோபம் கொண்டு மன்மதன் தன் கரும்பு வில்லை வளைத்து மலரம்பினைத்

தொடுத்தான். அவர்களும் சோழன் மீது காதல் கொண்டனர். அச்சமயம் பகைவரை அழிக்கக் கொம்பால் குத்தும் மதயானைமேல் உயர்ந்தவர்களுக்கெல்லாம் உயர்ந்தவனாகிய கொடைத் தன்மை கொண்ட சோழன் உலா வந்தான்.

*வாளி-அம்பு. பொன்னிவளநாடு-சோழநாடு. பூஞ்சிலை-கரும்பு. கன்னித்திருநாடு-பாண்டியநாடு. வேனற்கரசன்-மன்மதன். கோதையர் மேல்-மகளிர்மேல். மாறு-பகைவர். கொடைச் சென்னி-கொடையால் சிறந்த சோழன். உத்துங்க துங்கன்-உயர்ந்தோருள் உயர்ந்தவர்.*

விக்கிரம சோழன் உலா முற்றும்.

**வெண்பா**

[கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயும்
செய்ய கரிய திருமாலே - வையம்
அளந்தா யகளங்கா வாலிலைமேல் பள்ளி
வளர்ந்தாய் தளர்ந்தாளிம் மான்.]

கைகளும், திருவடிகளும், கண்ணும், கனிவாயும் பார்க்கின்றபோது கருமை நிறமுடைய திருமாலாகவே காட்சி தருகின்றாய். திருமால் உலகினை அளந்ததைப் போல நீயும் உலகை ஆளுகின்றாய். அன்று ஆலிலைமேல் பள்ளிகொண்டு பிரளயம் ஏற்பட்டபோது இந்த உலகினையே காத்தளித்தான். திருமாலைப் போன்ற விக்கிரமசோழனே நீ, உலா வருகின்ற போது, உன்னைக் கண்டு அதனால் ஏற்பட்ட காம மயக்கத்தில் இருக்கின்ற மான் போன்ற இந்தப் பெண்ணை நீ காத்திடுவாயாக.

---

# பிற்சேர்க்கை

## ரகு வம்சத்தில் உலா

5ஆம் சுலோகத்தில் அஜனைப் பார்க்க விரும்பிய நகரத்துப் பெண்கள் தங்கள் வேலைகளை விட்டுவிட்டு தங்களது மாளிகையின் பொன்மயமான ஜன்னல்களின் அருகில் வந்து நின்றனர்

6ஆம் சுலோகத்தில் ஒரு பெண் வேகமாகச் சென்ற பொழுது அவளது கூந்தல் அவிழ்ந்த தலையில் இருந்த பூக்கள் உதிர்ந்தன. அவிழ்ந்த கூந்தலைக் கையில் தாங்கி கொண்டே ஜன்னலை நோக்கி ஓடினாள்.

7ஆம் சுலோகத்தில் ஒரு பணிப்பெண் தனது எஜமானருக்கு பாதத்தில் செம்பஞ்சு வர்ணத்தை பூசிக் கொண்டிருந்தவர் அஜன், இந்துமதி வருவதை அறிந்த பெண் பாதத்தில் பூசிய வர்ணம் உலருவதற்கு முன்பே அதை சட்டென இழுத்துகொண்டு வழக்கமான தனது அழகிய நடையைவிட்டு வெகுவேகமாக ஜன்னலுக்கு வந்தனர்.

8ஆம் சுலோகம்: வலது கண்ணிற்கு மையிட்ட பெண்ணொருத்தி இடது கண்ணிற்கு மையிடாமலேயே தூலிகையை கையிலேந்திக் கொண்டு ஜன்னலை நோக்கி ஓடினாள்.

9ஆம் சுலோகம்: மற்றொரு பெண் ஓடிவரும்போது வேகமான நடை அவளது இடை ஆடையின் முடிச்சு அவிழ்ந்தது ஆனால், அவள் அதனை முடிவதில் நேரத்தைச் செலவு செய்ய விருப்பமின்றி, அந்த ஆடையை கையினால் தாங்கிக் கொணடு ஜன்னலின அருகில் சென்றாள். அப்பொழுது அவளது கையிலுள்ள ஆபரணங்களின் ஒளி அவளது இடையை அழகுறச் செய்தது.

*10*ஆம் சுலோகம்: வேற்றொரு பெண் நூலின் ஒரு முனையைத் தன் கால் கட்டை விரலில் கட்டிவிட்டு அந்நூலில் இரத்னங்களைக் கோத்து மேகலை தயார் செய்து கொண்டிருந்தவள். அந்நூலை அவிழ்த்து வைப்பதற்கு நேரம் இன்மையால் கையில் பிடித்திருந்த நூலினை மறு நுனியையும் விட்டு வேகமாக நடந்தபோது வழி நெடுகிலும் மணிகளெல்லாம் நழுவ, நூல் மாத்திரம் அவர் காலில் இருந்ததிலிருந்து அவளுடைய அவசரம் தெரிகின்றது.

*11*ஆம் சுலோகத்தில்: அஜனை காண நின்ற பெண் களின் முகம் தாமரைப்பூவையும், கண்கள் வண்டுகளையும், அவர்கள் அருந்திய மதுவின் மணம் தாமரைப் பூவினுடைய தேனின் மணத்தையும் ஒத்திருந்தன. அப்பெண்கள் ஜன்னலின் அருகில் நின்றபொழுது தாமரை மலர்களால் அழகு செய்யப்பட்டன போல காணப்பட்டன.

*12*ஆம் சுலோகத்தில் நகரத்து பெண்கள் அஜனை ஆவலுடன் பார்த்தனர். மற்ற விவரங்களை அவர்கள் அறியாது மெய்மறந்து இருந்தனர். அவர்கள் வேறு எதையும் எண்ணவில்லை. அதனால், காது முதலான ஐம்பொறிகளும் கண்ணிலே ஒடுங்கியதோ என எண்ணும்படி இருந்தது.

*14-15*ஆம் சுலோகத்தில் இவ்விருவரும் மனித வடிவில் தோன்றிய இணைபிரியாத ரதியும், மன்மதனுமே ஆவர். மனம், பூர்வ ஜன்மத்தின் அனுபவத்தினால் ஏற்பட்ட உறவாகும். இவர்களுடைய மனமும் பல அரசர்களிடையில் அவளுக்குரியவனையே தேர்ந்தெடுக்க உதவியது.

எனக் காதுக்கினியதாகப் பெண்கள் கூறிய புகழுரை களைக் கேட்டுககொண்டு அஜன் போஜனுடைய மாளிகையை அணுகினான். அம்மாளிகை மங்களப் பொருள்களால் அழகு செய்யப்பட்டு விளங்கியது.

## பிற்கால சோழர்கள் குடிவழி பட்டியல்

விசயாலயன் (கி.பி.848-871)

↓

ஆதித்தன் (கி.பி.871-907)

↓

பராந்தகன் (கி.பி.907-953)

↓

இராசாதிராசன் (கி.பி.949) (மறைவு)

கண்டராதித்தன் (கி.பி.950-957)

அரிஞ்சயன் (கி.பி.956-957)

↓

மதுராந்தக உத்தம சோழன் (கி.பி.970-985)

இரண்டாம் பராந்தககன் என்கிற சுந்தரசோழன் (கி.பி.957-970)

↓

இரண்டாம் ஆதித்த கரிகாலன் (கி.பி.969)

முதலாம் ராஜராஜன் (கி.பி.985-1014)

↓

முதலாம் இராசேந்திரன் (கி.பி.1012-1044)

குந்தவை (கீழைச்சாளுக்கியன் விமலாதித்தன் மனைவி)

↓

முதலாம் இராசாதிராசன் (கி.பி.1018-1054)

இரண்டாம் இராசேந்திரன் (கி.பி.1051-1063)

வீர இராசேந்திரன் (கி.பி.1063-1070)

↓ அதிராசேந்திரன் (கி.பி.1067-1070)

அம்மங்கதேவி (கீ.சாளுவிமலாதித்தன் மனைவி)

↓

ராசமகேந்திரன் (கி.பி.1063) (மறைவு)

மதுராந்தகி (கீ.சாளு. முதலாம்குலோத்துங்கன் மனைவி)

↓

முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1070-1120)

↓

இராசராசன் மும்முடிச் சோழன்

வீரசோழன்

விக்கிரமசோழன் (கி.பி.1118-1136)

↓

இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி.1133-1150)

↓

இரண்டாம் இராசராசன் (கி.பி.1146-1163)

↓

இரண்டாம் இராசாதிராசன் (கி.பி.1163-1178)

↓

மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178-1218)

↓

மூன்றாம் இராசராசன் (கி.பி.1216-1256)

↓

மூன்றாம் இராசேந்திரன் (கி.பி.12461-12)

## முதற்குலோத்துங்கன் பிறந்த கீழைச் சாளுக்கியர் குடிவழி பட்டியல்

குப்ஜ விஷ்ணுவர்த்தனன் (கி.பி.624-641)

↓

முதலாம் ஜெயசிம்மன்

இந்திர பட்டாரகன் (கி.பி.673)
↓
இரண்டாம் விஷ்ணுவர்த்தன் (கி.பி.673-682)
↓
மங்கியுவராஜன் (கி.பி.682-706)

↓

இரண்டாம் ஜெயசிம்மன் (கி.பி.706-718)

மூன்றாம் விஷ்ணுவர்த்தன் (கி.பி.719-755)
↓
முதலாம் விஜயாதித்தன் (கி.பி.755-772)
↓
நான்காம் விஷ்ணுவர்த்தன் (கி.பி.772-808)

கொக்கிள்ளி (கி.பி.719)

↓

இரண்டாம் விஜயாதித்தன் (கி.பி.808-847)
↓
ஐந்தாம் கலி விஷ்ணுவர்த்தன் (கி.பி.847-849)

பீமசலுகி

நிருபருத்ரன்

↓

மூன்றாம் குணக விஜயாதித்தன் (கி.பி.849-892)

முதலாம் விக்கிரமாதித்தன்
↓
முதலாம் சாளுக்கிய பீமன் (கி.பி.892-921)

முதலாம் யுத்தமல்லன்
↓
முதலாம் தாழன் (கி.பி.928)
↓
இரண்டாம் இரண்டாம் யுத்த மல்லன் (கி.பி.928-935)

↓

பாதாப்பன்

இரண்டாம் தாழன்

## முதற்குலோத்துங்கன் பிறந்த கீழைச் சாளுக்கியர் குடிவழி பட்டியல்




விக்கிரம சோழனின் பெயரில் காணும் வளநாடு, சதுர்வேதிமங்கலம், ஆறு, ஈஸ்வரம், நல்லூர், வேளம், வீதி, பெருந்தெரு, திருமாளிகை முதலான பட்டியல்களை (ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம் மட்டும்) அடுத்தடுத்தப் பக்கங்களில் காணலாம்.

| ARE No | ஊர் | அரசன் | ஆட்சி ஆண்டு | விபரம் |
|---|---|---|---|---|
| 247/1927 | கருப்பூர் | திரிபுவன சக்கரவர்த்திகள் இராசராசதேவர் | 15 | விக்கிரமசோழ வளநாடு |
| 295/1927 | கும்பகோணம் | மூன்றாம் குலோத்துங்கன் | 19 | விக்கிரமசோழ வளநாடு |
| 241/1927 | கொட்டையூர் | ராசகேசரி திரிபுவன சக்கரவர்த்திகள் (இரண்டாம்) இராசாதிராசன் | 3 | விக்கிரமசோழ வளநாடு |
| 183/1927-28 | திருபழனம் | மூன்றாம் குலோத்துங்கன் | 36 | விக்கிரமசோழ வளநாடு |
| 187/1927-28 | திருபழனம் | —— | —— | விக்கிரமசோழ வளநாடு |
| 51/1914 | திருபாலத்துறை | முதலாம் குலோத்துங்கன் | 40 | விக்கிரமசோழ வளநாடு |
| 50/1914 | திருபாலத்துறை | இரண்டாம் இராசராசன் | 11 | விக்கிரமசோழ வளநாடு |
| 49/1914 | திருபாலத்துறை | ,இரண்டாம் இராசராசன் | 5 | வடகரை விக்கிரமசோழ வளநாடு |
| 155/1931-32 | திருப்புறம்பியம் | விக்கிரமசோழன் | 6 | விக்கிரமசோழ வளநாடு |
| 350 /1927 | திருப்புறம்பியம் | இரண்டாம் குலோத்துங்கன் | 7 | விக்கிரமசோழ வளநாடு |
| 211/1927-28 | திருப்புறம்பியம் | திரிபுவன சக்கரவர்த்திகள் இராசராசதேவர் | 14 | விக்கிரமசோழ வளநாடு |
| 146/1918 | திருவையாறு | --- -- | 14 | விக்கிரமசோழ வளநாடு |

| ARE No | ஊர் | அரசன் | ஆட்சி ஆண்டு | விபரம் |
|---|---|---|---|---|
| 370/1907 | ஆடுதுறை | இரண்டாம் குலோத்துங்கன் | 5 | விக்கிரமசோழ சதுர்வேதிமங்கலம் |
| 61/1930-31 | கஞ்சனூர் | இரண்டாம் குலோத்துங்கன் | 7 | விக்கிரமசோழ சதுர்வேதிமங்கலம் |
| 66/1930-31 | கஞ்சனூர் | மூன்றாம் குலோத்துங்கன் | 3 | விக்கிரமசோழ சதுர்வேதிமங்கலம் |
| 232/1917 | கொறுக்கை | விக்கிரமசோழன் | -- | விக்கிரமசோழ சதுர்வேதிமங்கலம் என்கிற கொறுக்கை |
| 135/1895 | திருவிடைமருதூர் | கோப்பெருஞ்சிங்கன் | 18 | விக்கிரமசோழ சதுர்வேதிமங்கலம் |
| 113 / 1927 | திருமணஞ்சேரி | மூன்றாம் குலோத்துங்கன் | 6 | விக்கிரமசோழ பேராறு |
| | | **விக்கிரமசோழன் பேராறு** | | |
| | | **விக்கிரம சோழீஸ்வரமுடையார்** | | |
| 249 / 1927 | கருப்பூர் | --- --- --- | --- | விக்கிரம சோழீஸ்வரர் |
| 45 / 1906 | திருக்கடையூர் | முதலாம் சடாவர்ம திருபுவன வீரபாண்டிய தேவர் | 14 | விக்கிரம சோழீஸ்வரர் |
| 111/1927 | திருமணஞ்சேரி | --- --- --- | --- | விக்கிரம சோழீஸ்வரர் |
| 275/1907 | திருவிடைமருதூர் | விக்கிரமசோழன் | | விக்கிரம சோழீஸ்வரர் |
| 232/1926 | தில்லையாடி | இரண்டாம் குலோத்துங்கன் | 14 | விக்கிரம சோழீஸ்வரர் |

| ARE No | ஊர் | அரசன் | ஆட்சி ஆண்டு | விபரம் |
|---|---|---|---|---|
| 238/1926 | தில்லையாடி | இரண்டாம் குலோத்துங்கன் | 12 | விக்கிரம சோழீஸ்வரம் |
| 2 / 1918 | துக்காச்சி | மூன்றாம் குலோத்துங்கன் | 35 | விக்கிரம சோழீஸ்வரம் |
| 74/1930-31 | பந்தநல்லூர் | இரண்டாம் இராசராசதேவர் | 6 | விக்கிரம சோழீஸ்வரம் |
| 172/1956-57 | ருத்ரகங்கை | மூன்றாம் இராசராசன் | 14 | விக்கிரம சோழீஸ்வரம் |
| 481/ 1922 | அரையபுரம் | மூன்றாம் இராசராசன் | 17 | விக்கிரம சோழீஸ்வரம் |
| 72 / 1913 | திருச்செங்காட்டாங்குடி | மூன்றாம் குலோத்துங்கன் | 22 | விக்கிரம சோழீஸ்வரம் |
| 415 / 1918 | திருப்புங்கூர் | மூன்றாம் குலோத்துங்கன் | --- | விக்கிரம சோழீஸ்வரம் |
| 38 / 1918 | மாதிரி வேளூர் | மூன்றாம் இராசராசன் | 19 | விக்கிரம சோழீஸ்வரம் |
| 29 / 1910 | மெலட்டூர் | திரிபுவன சக்கரவர்த்திகள் இராசராசன் | --- | விக்கிரம சோழீஸ்வரம் |
| | | **விக்கிரமசோழ நல்லூர்** | | |
| 183/927-28 | திருப்பழனம் | மூன்றாம் குலோத்துங்கன் | 36 | விக்கிரம சோழ நல்லூர் |
| 275/1907 | திருவிடைமருதூர் | விக்கிரமசோழன் | 9 | விக்கிரம சோழ நல்லூர் |
| 2 / 1918 | துக்காச்சி | மூன்றாம் குலோத்துங்கன் | | விக்கிரம சோழ நல்லூர் |

| ARE No | ஊர் | அரசன் | ஆட்சி ஆண்டு | விபரம் |
|---|---|---|---|---|
| 1/1918 | துக்காச்சி | மூன்றாம் இராசராசன் | 23 | விக்கிரம சோழ நல்லூர் இரும்பூண்டி |
| 403/1918 | புதுத்துறை | --- | --- | விக்கிரம சோழ நல்லூர் |
| | | **விக்கிரமசோழ வேளம்** | | |
| 279/1907 | திருவிடைமருதூர் | முதலாம் குலோத்துங்கன் | 41 | விக்கிரம சோழ வேளம் |
| | | **விக்கிரம சோழன் வீதி, தெரு, சந்தி** | | |
| 92/1925 | கீழையூர் | குலசேகரபாண்டியன் | 4 | விக்கிரம சோழன் திருவீதி |
| 194/1930-31 | திருச்சோற்றுத்துறை | விக்கிரம சோழன் | 14 | விக்கிரம சோழன் பெருந்தெரு |
| 544/1918 | திருமயிலாடுதுறை | --- | --- | விக்கிரம சோழன் சந்தி |
| 70/1926 | திருவாடுதுறை | மூன்றாம் இராசராசன் | 4 | விக்கிரம சோழன் திருவீதி |
| 473/1918 | திருவெண்காடு | விக்கிரமசோழன் | 10 | விக்கிரம சோழன் திருவீதி |
| | | **விக்கிரம சோழன்திருமாளிகை, திருமண்டபம்** | | |
| 113/1927-28 | அய்யம்பேட்டை | விக்கிரமசோழன் | 11 | விக்கிரம சோழன் திருமாளிகை |
| 274/1907 | திருவிடைமருதூர் | விக்கிரமசோழன் | 9 | விக்கிரம சோழன் திருமாளிகை |

| ARE No | ஊர் | அரசன் | ஆட்சி ஆண்டு | விபரம் |
|---|---|---|---|---|
| 276/1907 | திருவிடைமருதூர் | விக்கிரமசோழன் | 10 | விக்கிரம சோழன் திருமாளிகை |
| 473/1918 | திருவெண்காடு | விக்கிரம சோழன் | 10 | விக்கிரம சோழன் திருமாளிகை |
| | | **விக்கிரம சோழபுரம்** | | |
| 118/1927-28 | அய்யம்பேட்டை | விக்கிரமசோழன் | 4 | விக்கிரம சோழபுரம் |
| 165/1894 | ஆலங்குடி | விக்கிரமசோழன் | 11 | விக்கிரம சோழபுரம் |
| 249/1917 | கோயில்திருமாளம் | சடாவர்ம திரிபுவன சுந்தரபாண்டியன் | 2 | விக்கிரம சோழபுரம் |
| 72/1913 | திருச்செங்காட்டாங்குடி | மூன்றாம் குலோத்துங்கன் | 11 | விக்கிரம சோழபுரம் |
| | | **விக்கிரம சோழ பேரலத்தூர்** | | |
| 473/1918 | அரையபுரம் | மூன்றாம் குலோத்துங்கன் | --- | விக்கிரம சோழ பேரலத்தூர் |
| 481/927-28 | அரையபுரம் | மூன்றாம் இராசராசன் | 17 | விக்கிரம சோழ பேரலத்தூர் |
| | | **விக்கிரம சோழ அல்லூர்** | | |
| 921/926 | திருவாலங்காடு | மூன்றாம் குலோத்துங்கன் | 24 | விக்கிரம சோழ அல்லூர் |
| | | **விக்கிரம சோழ கடம்பூர்** | | |
| 495/1904 | வேதாரண்யம் | மூன்றாம் இராசராசன் | 27 | விக்கிரம சோழ கடம்பூர் |
| | | **விக்கிரம சோழ சூரளூர்** | | |
| 289/1907 | திருவிடைமருதூர் | மூன்றாம் குலோத்துங்கன் | 28 | விக்கிரம சோழன் சூரளூர் (குலோத்துங்க சோழன் பூண்டி) |

## மனுநீதி சோழனைப் பற்றிய கல்வெட்டின் விபரம்

(S I I Vol.-V No. 456)

இலக்கியச் சோழனான மனுவின் பெருமையை வெளிப்படுத்தும் கல்வெட்டொன்று திருவாரூர் கோயிலில் காணப்படுகின்றது. அக்கல்வெட்டு கி. பி. 1123இல் விக்கிரம சோழன் ஆட்சி காலத்தில் பொறிக்கப்பட்டதாகும். "பூமாலை மிடைந்து" என்ற மெய்க்கீர்த்தியுடன் தொடங்கும் ஐந்தாம் ஆட்சியாண்டைக் குறிக்கும் இக் கல்வெட்டு "கெயமாணிக்க வளநாட்டு திருவாரூர் கூற்றத்து திருவாரூர் உடையார் வீதிவிடங்கர் சித்திரை திங்கள் திருநாளில் சதைய.........ஸ்ரீதேவர் ஸ்ரீ..........திருக்காவணத்தில் சிம்மாசனத்து எழுந்தருளி இருந்து பதிலியிலாளர் தியாக விநோதத்..........ங்கண்டருளா நிற்ப ஸ்ரீகாரியம் சுப்பிர மங்கலமுடையாந் மாதவன் இரவியாந மாநாயைலப் மூவேந்த வேளாளர் விண்ணப்பத்தினால் (வேண்டு கோளின்படி) பதிபாத மூலப்பட்டுடை பஞ்சாசாரிய தெவகந்மிகளுக்கும் கோயிலாங்..........யார்க்கும் திருவாய் மொழிந்தருளினபடி (அரசன் உத்தரவின்படி)" எனத் தொடங்குகிறது.

மனுநீதி சோழனின் மகன் பிரியவிருத்தன் என்பவன் சென்றத் தேரில் ஒரு பசுவின் கன்று பாய்ந்து தேர்ச் சக்கரத்தில் அகப்பட்டு உயிர்நீத்தது. இதனால் தாய்ப் பசுவானது மன்னனின் வாயிலில் சென்று மணியை ஒலிக்கச்செய்தது. அம்மணியோசைக் கேட்டுக் காவலர்கள் தம் மன்னனிடம் தெரிவிக்க மன்னனும் வாயில் வந்து பார்த்துப் பசுவின் நிலையை அறிந்தான். இது குறித்து மந்திரிகள் அரச குமாரனை கொல்வித்தல் அறமன்று. வேதத்தில் விதித்தபடி அறம் செய்வித்தல் நன்று முற்காலம் தொடங்கி வழி வழியாக வரும் நெறியைப் பின்பற்றலாம் என மன்னனைத் தேற்றினர். ஆனால் மன்னன் உடன்படாது,

தம்முடைய மந்திரியான உபயகுலாமலன் என்பவரைத் தம் மகனைத் தேர்க்காலில் இட்டு தேரைச் செலுத்திக் கொல் எனக் கூறினார்.

மந்திரியும் அதைச் செய்ய மனம் துணியாமல் தன்னுயிர் நீத்ததைக் கண்ட மன்னன் தானே தேரில் ஏறி தம் மகளை உயிர்நீக்கச் செய்தான். அவனுடைய மனுநெறி தவறாமை கண்டு இறைவன் அனைவரையும் உயிர்பித்தான் எனக் குறிக்கப்படுகின்றது.

மனுவின் புத்திரனான பிரிய விருத்தனுக்கு உபய குலாமலன் என்ற மந்திரியின் மகனான சூரியன் என்பவன் மந்திரியாக இருந்தான். அச்சூரியனுக்குப் பின் அவ் வம்சத்தில் வந்தவர்களில் ஒருவனான இங்கணாட்டு பாலையூருடையான் சந்திரசேகரன் ஆதிவிடங்கனான மகாபலி வாணாதிராயன் என்பவனாவான். இவனுக்கு மாளிகையும், மனையும் விக்கிரமசோழனால் வழங்கப் பட்டதையும் இலக்கிய கால நிகழ்வொன்று வரலாற்று சான்றாகக் காணமுடிவது இக்கல்வெட்டில்தான் என்பது உண்மையே.

ஐம்பெருங்காப்பியமான சிலம்பில் இளங்கோவடி களும் இக்கருத்தை கண்ணகியின் கூற்றாகச் சோழ மன்னனின் பெருமையையும் சோழநாட்டின் பெருமையைக் கூறுவதாக இடம்பெறும் இடத்தில்

**வாயிற்கடை மணி நடுநா நடுங்க**
**ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத்தான்தன்**
**அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்**
**பெரும்பெயர்ப் புகார் என் பதியே**

எனக் குறிப்பிடுவதையும் ஈண்டு நோக்கத்தக்கதாகும்.

# மெய்கீர்த்தி

## விக்கிரமசோழன்

பூமாலை மிடைந்து பொன்மாலை திகழப்
பாமாலை மலிந்த பருமணித் திரள்புயத்
திருநில மந்தையொடு ஜயமக ளிருப்பக்
கனவரை மார்வந் தனதெனப்பெற்றுத்
திருமக ளொருதனி யிருப்பக் கலைமகள்
சொற்றிறம் புணர்ந்த கற்பின ளாகி
விருப்பொடு நாவகத் திருப்பத் திசைதொறுந்
திகிரியொடு செங்கோல் நடப்ப அகில
புவனமுங் கவிப்பதோர் புதுமதி போல
வெண்குடை மீமிசை நிழற்றக் கருங்கலி
யொளித்துவன் பிலத்திடைக் கிடப்பக் குளத்திடைத்
தெலுங்க வீமன் விலங்கல்மிசை யேறவுங்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைத் பருவத்து வெம்படை தாங்கியும்
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை யடிப்படுத் தருளித் தென்றிசைத்
தருமமுந் தவமுந் தானமுந் தழைப்ப
வேதமும் மெய்ம்மையு மாதியுகம் போலத்
தலைத்தலை சிறப்பவந் தருளி வெலற்கரும்
போர்ப்புலி யானை பார்த்திவர் சூட
நிறைமணி மகுடம் முறைமையிற் சூடி
மன்னுயிர்க் கெல்லா மின்னுயிர்த் தாய்போல்
தண்ணளி பரப்பித் தனித்தனி பார்த்து
மண்முழுதுங்களிப்ப மனுநெறி வளர்த்துத்தன்
கோயிற் கொற்ற வாசல் புறத்து
மணிநா வொடுங்க முரசுகள் முழங்க

விசையமும் புகழும் மேன்மே லோங்க
வாழி வாழிஇம் மாநிலங் காக்கத்
திருமணிப் பொற்றோட் டெழுதுபத் தாண்டு
வருதிறை முன்னே மன்னவர் சுமந்து
திறைநிறைத்துச் சொரிந்து செம்பொற் குவையால்
தன்குல நாயகன் தாண்டவம் பயிலுஞ்
செம்பொன்னம் பலஞ்சூழ் திருமா ளிகையும்
கோபுர வாசல் கூடசாலைகளும்
உலகு வலங்கொண் டொளிவிளங்கு நேமிக்
குலவரை உதைய குன்றமொடு நின்றெனப்
பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும்
வீசும்பொளி தழைப்ப விளங்குபொன் வேய்ந்து
இருநிலந் தழைப்ப இடையவர் களிப்பப்
பெரிய திருநாள் பெரும்பெயர் விழாவெனும்
உயர்பூரட்டாதி உத்திரட்டாதியில்
அம்பல நிறைந்த அற்புதக் கூத்தர்
இம்பர் வாழ எழுந்தருளு வதற்குத்
திருத்தேர்க் கோயில் செம்பொன் வேய்ந்து
பருத்திரண் முத்தின் பயில்வடம் பரப்பி
நிறைமணி மாளிகை நெடுந்திரு வீதிதன்
திருவளர் பெயராற் செய்துசமைத் தருளி
பைம்பொற் குழித்த பரிகல முதலாச்
செம்பொற் கற்பகத் தொடுபரிச்சின்னமும்
அளவில் லாதன வொளிபெற வமைத்துப்
பத்தா மாண்டில் சித்திரைத் திங்கள்
அத்தம் பெற்ற ஆதிவா ரத்துத்
திருவளர் மதியின் திரையோதசிப் பக்கத்து
இன்ன பலவும் இனிதுசமைத் தருளி
ஒருகுடை நிழற்கீழ்த் தலமுழுதுங் களிப்பச்
செழியர்வெஞ் சுரம்புகச் சேரலர் கடல்புக
அழிதரு சிங்களர் அஞ்சிநெஞ் சலமரக்

கங்கர் திரையிடக் கன்னடர் வெள்ளிடக்
கொங்க ரொதுங்கக் கொங்கணற் சாயமற்
றெத்திசை மன்னருந் தத்தமக் கரணெனத்
திருமலர் சேவடி உரிமையி லிறைஞ்ச
அங்கவன் மகிழுங் கங்கையொப் பாகிய
தெரிவையர் திலதந் தியாக பதாகை
புரிகுழல் மடப்பிடி புனிதகுண வநிதை
திரிபுவன முழுடையா ளெனவுட னிருப்ப
ஊழி அந்நெடு மாலா கத்துப்
பிரியா தென்றுந் திருமக ளிருந்தென
மாதர் மடமயில் பூதலத் தருந்ததி
அரணியல் கற்பிற் றரணிமுழு துடையா
ளிவன்திரு மார்வத் தருளொடு மிருப்பச்
செம்பொன் வீர சிம்மா சனத்து
திரிபுவன முழுடையா ளோடும்
வீற்றிருந்தருளிய கோப்பர சேசரி வர்மரான
திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு
யாண்டு:-

2

பூமாது புணரப் புவி மாது வளர
நாமாது விளங்க ஜயமது விரும்பத்
தன்னிரு பதமலர் மன்னவர் சூட
மன்னிய வுரிமையால் மணிமுடி சூடிச்
செங்கோல் சென்று திசைதொறும் வளர்ப்ப
வெங்கலி நீங்கி மெய்யறந் தழைப்பக்
கலிங்க மிரியக் கடமலை நடாத்தி
வலங்கொ ளாழி வரையாழி திரிய
இருசுட ரளவு மொருகுடை நிழற்ற
விஜயாபிஷேகம்பண்ணி வீரசிம்ஹா சனத்து
முக்கோக்கிழானடிகளோடும் திரிபுவனச்சக்கரவர்த்திகள்
ஸ்ரீவிக்கிரம சோழ தேவர்க்குயாண்டு:-



0587